கோகுலம்

Gokulam

செப்டம்பர் 85 ரூ 2





தாதாபாய் நௌரோஜி

பிறந்த நாள்: 4·9·1824 மறைந்த நாள்: 30·6·1916



கோகுலம்

மலர்: 3 இதழ்: 8

1985 செப்டம்பர் மாத இதழ்

தனிப் பிரதி ரூ. 2/—

ஆண்டுச் சந்தா ரூ. 24/—

உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
—பாரதியார்.

கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா.



அருமைச் சிறுவர் சிறுமியரே,

'கோகுலம் சிறுவர் சங்கத்தின் 10,001—வது உறுப்பினர் யார்? அடுத்த இதழில் காண்க!' என்று சென்ற இதழில் அறிவித்தோம். அதற்குள், மேலும் 1000 உறுப்பினர்கள் சேர்ந்து 11,000 ஆக எண்ணிக்கையை உயர்த்தி விட்டனர்!

இதுவரை உறுப்பினராகச் சேராத பலர், ''எப்போது கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் மனுவை வெளியிடப் போகிறீர்கள்? அதை வெளியிட்டால்தானே நாங்கள் பூர்த்தி செய்து அனுப்பலாம்? விரைவில் வெளியிடுங்கள்'' என்று தொடர்ந்து எழுதி வருகிறார்கள். அவர்கள் விருப்பப்படி இந்த இதழில் உறுப்பினர் மனுவை வெளியிட்டிருக்கிறோம். இதுவரை உறுப்பினராகச் சேராத 15 வயதுக்கு உட்பட்டவர்கள், மனுவைப் பூர்த்தி செய்து அனுப்பலாம்.

கோகுலம் சிறுவர் சங்கம் பல இடங்களில் தொடங்கப் பெற்றிருப்பது குறித்து மகிழ்ச்சி. அச்சங்கங்கள் பயனுள்ள பணிகளைச் செய்து, வெற்றிநடைபோடவாழ்த்துகின்றோம்.

மதுரை, திருச்சி, கோவை, திருநெல்வேலி போன்ற நகரங்களிலிருந்து எங்களுக்குப் பலர் எழுதுகிறார்கள். ''எங்கள் ஊரில் நூற்றுக்கணக்கான கோ. சி. ச. உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இங்கு ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்கிறோம். நீங்கள் வந்தால் கலந்து பேசி மகிழலாமே!'' என்று மிகவும் ஆவலாக எழுதுகிறார்கள். எங்களுக்கும் அப்படிப்பட்ட ஆசை இருக்கிறது. விரைவில் நம்முடைய இந்த ஆசை நிறைவேறுமென நம்புகிறோம்.

—அழ. வள்ளியப்பா

புகைப்படம்: எம். நடராஜன்

கோகுலம்; குதூகலம்!

* பெருந்தலைவர் காமராசர் படத்தை அப்போதே பிரேம் போட்டு வீட்டில் மாட்டி விட்டேன்.

—வ. விஜயகுமார் (7776), ஒசூர்.

* ஜகத்குருவின் 'பாலுவுக்குப் பாராட்டா?' எனக்கு மிகவும் பிடித்திருந்தது. காரணம், நாம் முன்னேறிக் கொண்டு, அடுத்தவருக்கு உதவி செய்ய வேண்டும் என்பதைப் புலப்படுத்தியது.

—கோ. சிவகுமார், மயிலாடுதுறை.

* உங்களுக்குளென்ன சார்கவலை?' முன்கோபி ராஜா' கதையைப் படித்துவிட்டு, சிரித்துச் சிரித்துப் புண் ஆனது எங்கள் வயிறு தானே!

—சு. ஐயப்பன் (3194), தெற்கு காருகுடி.

* 'அராபிய இரவில் கூறிய அற்புதக் கதை' முற்றிலும் சுவையாக இருந்தது. எத்தனை முறை படித்தாலும் திகட்டவில்லை.

—வலங்கை ஜி. ராஜசேகர், வலங்கைமான்.

* கங்காரு சொன்ன கதையைப் படித்தேன். கங்காருவைப் பற்றி இவ்வளவு செய்திகளை வேறு எதிலும் படித்ததில்லை.

—இரா. சுவாமிநாதன், சீர்காழி.

* வி. சரவண சுரேஷ் (6630) எழுதிய 'கோயில் பாறை' என்னும் கதை தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் வெளியிட்டுள்ள ஆறும் வகுப்பு 'கதைத் திரட்டு' புத்தகத்தில் 4—ஆம் பாடமாக உள்ளது. இதுபோல் காப்பியடிக்கப்பட்ட கதைகளை எடுத்துக் கொள்ளாதீர்கள். சுயமாக எழுதியதையே பிரசுரியுங்கள்.

—எம். ரவி, பழையகோட்டை.

(இதேபோல் 30—க்கு மேற்பட்ட கடிதங்கள் வந்துள்ளன! ஆயினும் முதலில் வந்த கடிதத்தை மட்டுமே(26-6-85) வெளியிட்டிருக்கிறோம். கடிதம் எழுதிய அனைவருக்கும் நன்றி.—ஆசிரியர்)

* வருங்கால டென்னிஸ் நட்சத்திரங்களைப் பற்றிய தகவல்கள் சுவையாகவும் அதே சமயம் பயன்படும்படியும் இருந்தன.

—க. இராஜன், திருவிடைமருதூர்.

* கோகுலத்தில் வந்த 'திருக்குறள் புதிர்கள்' அனைத்தையும் சேர்த்து வைத்திருக்கிறோம். அது போலவே 'பாரதி புதிர்' துவக்கமே அருமையாக அமைந்துள்ளது. பாராட்டுக்கள்.'

—செ. வேதமூர்த்தி, ஆசிரியர், 'குறளமுதம்,' கவுந்தப்பாடி.

* நல்ல உள்ளம் கொண்டு, கால்நடை உள்ளிட்ட அனைத்து உயிர்களிடத்தும் அன்புடன் பழகிய ருக்மிணிதேவி அவர்களின் 'என் குழந்தைப் பருவம்' கட்டுரை, எதிர்காலத்தில் பல ருக்மிணிதேவிகளை உருவாக்கும் என்பது திண்ணம்.

—சு. முகம்மது நிஜாமுத்தீன், நீடூர்.

* "மனுஷாக்கு மட்டும்தான் போஸ் தரத் தெரியுமா? எனக்கும் போஸ் தரத் தெரியும்" என்று என் காதில் கிசுகிசுத்தது அட்டைப்படப் புலி!

—ஹெச். சாயிரா (4582), லால்குடி.

* 'ஆபத்துக்கு உதவி' சிறுகதை படித்தேன். அற்புதம்! அபாரம்! அருமை! கண் கண்ட கடவுள் காஞ்சிப் பெரியவாளை வைத்து இது வரை இந்திய மொழிகளில் எழுதப்பட்ட கதைகளில் இதுதான் மிகச் சிறந்தது என்று கூறிவிடலாம்.

—தொண்டரப் பொடி ஸ்ரீனிவாச சாஸ்திரிகள், பட்டுக்கோட்டை.

* 'வையவன்' அவர்களின் 'தாடிக்காரர் தப்பித்தார்' கதையில் பாபுவின் தேசிய ஒருமைப்பாட்டு உணர்ச்சி என்னை மெய்சிலிர்க்க வைத்தது.

—தா. சிந்துகுமார் (4764), திருவட்டார்.

* யாம் கண்ட பத்திரிகைகளிலே 'கோகுலம்' போல் இனிதாவது எங்கும் காணோம். ஒவ்வொரு மாத கோகுலமும், எங்களின் குதூகலம்!

—எஸ். ராமானுஜம் (9436), திருச்சி—5.

* 'கேளுங்கள் சொல்லுகிறோம்' பகுதியை நான் படிப்பதற்கு முன்பே என் அப்பா படித்து முடித்து விடுகிறார்! மாதாமாதம் அந்தப் பகுதி எங்கள் அறிவை மேலும் மேலும் வளர்த்து வருகிறது.

—எஸ். சீனிவாசன், மணமேற்குடி.

* மின்மினிக் கதைகள் யாவும் பொன்மணிகளாக மிளிர்கின்றன. மின்மினிகள் தொடர்ந்து மிளிரட்டும்.

—ப. இராஜகோபால், மன்னார்குடி.

* நாமக்கல் கவிஞரின் படிப்பறிவில்லாத் தாய் கூறிய சொற்கள் அவரை ஆட்கொண்டு ஒரு பெருங் கவிஞராகவும், அறிஞராகவும், தேசத் தொண்டராகவும் செய்தது போல் 'கோகுலம்' படிக்கும் சிறுவர்—சிறுமியரும் உயர்வார்கள் அல்லவா?

ரசிகமணி பிறந்த தேதி 7.8.1882 எனத் தவறாய் அச்சிடப்பட்டிருக்கிறது. அவர்களின் சரியான பிறந்த தேதி 18.8.1881 என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

—தீப. நடராஜன், தென்காசி.

(ரசிகமணி...ன் பேரர்)

சார், தபால்!

இந்த இதழ் எழுத்தாளர்கள்



மஞ்சுளா விஜயேந்திரன்


மணியமான்


பிரேமா பாலசுப்பிரமணியம்


பிருந்தாவனக் கதாசிரியர்கள்


ஆர். குருராஜ்


எம்.எஸ். சுரேஷ்

பிருந்தாவனக் கவிஞர்கள்


ப. பூங்குமரன்


சி.என். சத்தியநாராயணன்


தி.வீ. செந்தில்குமார்

வண்ண அட்டைப் படம்: உத்ரா



அடுத்த இதழில்—

என் குழந்தைப் பருவம்

—டாக்டர் மு. வரதராசனார்



தாதாபாய் நௌரோஜி

'சுயராஜ்யம்' என்றசொல்லைமுதல் முதலாகப் பயன்படுத்தியவர் தாதா பாய் நௌரோஜிதான்! "வெள்ளையரிடம் நாங்கள் தயவு கேட்கவில்லை; உரிமையைத்தான் கேட்கிறோம்" என்று 1906—ஆம் ஆண்டு கல்கத்தாவில் கூடிய தேசிய காங்கிரஸிற்குத் தலைமை தாங்கிய போது வீரமுழக்கம் செய்தார்.

'சுயராஜ்யம்' என்ற சொல்லை முதல்முதலாகப் பயன்படுத்திய இவர், பள்ளிக் கூடத்திலும் எல்லா வகுப்புகளிலும் முதல்வராயிருந்தார். லண்டன் காமன்ஸ் சபையில் உறுப்பினராயிருந்த முதல் இந்தியரும் இவரே. பம்பாய் எல்பின்ஸ்டன் கல்லூரியில் பேராசிரியராயிருந்த முதல் இந்தியரும் இவரே. இந்தியாவில் முதல் முதலாகப் பெண்கள் பள்ளிக்கூடத்தை நிறுவியவரும் இவரே. இவை மட்டும் தானா? இப்போது நூற்றாண்டு கொண்டாடி வரும் காங்கிரஸ் மகாசபையை நிறுவிய முதல் தலைவர்களில் இவரும் ஒருவராக இருந்தார்.

இந்தியாவின் குரல் (The Voice of India) என்ற மாத இதழைத் தொடங்கி, அதில் அக்காலத்தில் ஆங்கிலேயர் செய்துவந்த கொடுமைகளையும், அட்டூழியங்களையும்எடுத்துக் காட்டினார். அத்துடன், இந்தியாவின் செல்வங்களையெல்லாம் அவர்கள் கொள்ளையடித்து இங்கிலாந்துக்குக் கொண்டு செல்வது பற்றியும் எழுதி, இங்கிலாந்திலுள்ள மக்கள் உணரும்படி செய்து வந்தார்.

91 வயது வரை வாழ்ந்த இவர், கடைசி மூச்சு இருக்கும் வரை விடுதலைப்போரில்வெகுதீவிரமாக ஈடுபட்டிருந்தார்.



ராஜா சர் அண்ணாமலை செட்டியார்

ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் என்றதுமே அண்ணாமலைப் பல்கலைக்கழகம், தமிழ் இசை இயக்கம், கோயில் திருப்பணிகள் ஆகியவை உடனே நினைவுக்கு வரும்.

இவர் சிதம்பரத்தில் முதலில் மீனாட்சி கல்லூரியை நிறுவினார். பிறகு, அந்தக் கல்லூரியையும் அதைச் சேர்ந்த 40 லட்சம் பெறுமான சொத்துக்களையும் அடிப்படையாக வைத்து மேலும் 20 லட்ச ரூபாய் போட்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை 1929—ல் நிறுவினார். இதன் நிலப்பரப்பு 550 ஏக்கர். இதில் விளையாட்டுக்காக மட்டும் 120 ஏக்கர் ஒதுக்கியிருக்கிறார். உலகிலேயே முதன் முதலாகத் தனிப்பட்ட ஒருவரால் நிறுவப்பட்ட பல்கலைக் கழகம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

இசை அரங்குகளில், நிறையத் தமிழ்ப் பாடல்களைப் பாடச்செய்வது, புதிய இசைப் பாடல்களைத் தமிழில் எழுதுவோருக்கு ஊக்கமளிப்பது, போன்ற பல நல்ல பணிகளை இவர் நிறுவிய தமிழிசைச் சங்கம் செய்து வருகிறது.

சிதம்பரம், திருவண்ணாமலை, கரூர் போன்ற புண்ணிய ஸ்தலங்களில் பெரும் பொருட்செலவில் கோயில் திருப்பணிகள் செய்துள்ளார். இவர் பிறந்த கானாடுகாத்தானில் மருத்துவமனை ஒன்றையும் அமைத்திருக்கிறார்.

பெரும் பதவிகள் பலவற்றிலும் இருந்து சிறப்பாகத் தொண்டாற்றிய இவரது வள்ளல் தன்மையைப் பாராட்டி இவருக்கு 'செட்டி நாட்டு ராஜா' என்னும்பரம்பரைப்பட்டத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் வழங்கிச் சிறப்பித்தது.

மின்மினிக் கதைகள்

புத்திசாலி!

அன்று பகல் மணி இரண்டு இருக்கும். நானும் என் நண்பன் நடனசபாபதியும், என் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம்.


அந்தச் சமயம் ஒரு சிறுவன் சைக்கிளில் ஏறிக் கொண்டு தெருவின் இந்த முனையிலிருந்து அந்த முனைக்கும், அந்த முனையிலிருந்து இந்த முனைக்கும் மாறி மாறிப் போய்க் கொண்டிருந்தான்.

அப்போது திடீரென்று மழை வந்து விட்டது. மழை என்றால், சாதாரண மழையல்ல; மிக மிகப் பெரிய மழை வந்துவிட்டது; இடி மின்னலுடன்!

ஆனால், அப்போதும் அந்தப் பையன் சைக்கிள் சவாரி செய்து கொண்டேயிருந்தான். அவன் உடம்பெல்லாம் மழையில் தெப்பமாக நனைந்து விட்டது. ஆனாலும், அவன் சவாரியை நிறுத்தவில்லை. முன் போலவே இங்கும் அங்குமாக சைக்கிள் விட்டுக் கொண்டிருந்தான். எனக்கோ மனம் பொறுக்கவில்லை.

''பாவம், சைக்கிள் விடும் ஆசையில் மழையைக் கூடப் பொருட் படுத்தவில்லையே இந்தப் பையன்! இப்படியே இவன் நனைந்தால் காய்ச்சல் வந்துவிடுமே!'' என்று எண்ணி அந்தப் பையனைப் பார்த்து. ''தம்பீ, தம்பீ'' என்று கூவி அழைத்தேன்.

அருகில் அவன் வந்ததும், ''தம்பி, மழையும் மின்னலும் இப்படி அதிகமாக இருக்கும்போது சைக்கிள் விடுகிறாயே! மழையில் நனைந்தால் உடம்புக்கு ஆகுமா? கொஞ்சநேரம் இங்கேயே ஒதுங்கி இரு. மழை நின்றதும் சைக்கிள் விடலாம்'' என்றேன்.



உடனே அவன், "பூ! கூப்பிட்டது இதுக்குத்தானு? உங்களுக்கு என்ன சார் தெரியும்? இந்த சைக்கிளை நான் எட்டணுக் கொடுத்து ஒரு மணி நேரத்துக்கு வாடகைக்கு எடுத்திருக்கிறேன். இப்பொழுது ஏற்கெனவே முக்கால் மணி நேரம் ஓடிடுத்து. இன்னும் இருக்கிற கால் மணிநேரமும் சைக்கிளைச் சும்மா வைத்தால் என் பணம் நஷ்டமாகி விடாதோ?" என்று கூறிவிட்டு மீண்டும் சைக்கிளில் ஏறி மழையில் சவாரி செய்ய ஆரம்பித்துவிட்டான்.

அவன் போனதும் என் நண்பன் என்னைப் பார்த்துச் சிரித்தான். நான் அழுவதா, சிரிப்பதா என்று தெரியாமல் விழித்தேன்.



கும்பிட்ட காரணம்?

ஆறுமுகம்பிள்ளை கிராமத்திலிருந்து சென்னைக்கு ஒரு வேலையாக வந்திருந்தார். சென்னையில் நாலைந்து நாள் தங்க வேண்டியதாயிற்று.

ஒருநாள் பிற்பகல் 2 மணி இருக்கும். ஆறுமுகம்பிள்ளை யாரையோ பார்ப்பதற்காகப் புறப்பட்டு நடந்து சென்று கொண்டிருந்தார். வெயில் கடுமையாக இருந்ததால், களைத்துப் போய்விட்டார். சற்று இளைப்பாற எண்ணினூர்.

அருகிலே இருந்த கட்டிடத்தை நெருங்கினூர். அதன் கதவு அடைத்திருந்தது. வாசலில் நிழல் இருந்ததால் அங்கே உட்கார்ந்து விட்டார்.

அச்சமயம், தெருவழியாகச் சென்று கொண்டிருந்த ஒரு மனிதர் ஆறுமுகம்பிள்ளையின் எதிரே வந்ததும் குனிந்து ஒரு கும்பிடு போட்டார். ஆறுமுகம் பிள்ளையும் பதிலுக்கு ஒரு கும்பிடு போட்டார்.

இன்னொருவர் கால்களிலிருந்த செருப்புகளைக் கழற்றிவிட்டு, மிகவும் பணிவுடன் வணங்கினூர். ஆறுமுகம்பிள்ளையும் புன்சிரிப்போடு பதில் வணக்கம் செலுத்தினூர்.

மற்றொருவர் வந்து தோளிலே போட்டிருந்த துண்டை எடுத்து இடுப்பிலே கட்டிக்கொண்டு மரியாதையாகக் கும்பிட்டார். இப்படித் தெருவிலே வருவோர் போவோரெல்லாம் கும்பிட, ஆறுமுகம் பிள்ளையும் அயராமல் கும்பிடு போட்டார்.

'அடடே, நம் ஊரில் நாம் மிகப் பெரிய மனிதர் என்பது எப்படித்தான் இந்தச் சென்னையிலுள்ளவர்களுக்கும் தெரிந்ததோ! ஒவ்வொருவரும் எப்படி மரியாதை செலுத்தினூர்கள்!' என்று எண்ணி எண்ணி மகிழ்ந்தார்.

அப்போது ஒரு ரிக்ஷாக்காரன் வந்து, "சாமி! சாமி! நம்ம ரிக்ஷாவிலே ஏறுங்க சாமி!" என்றான்.

'அடடா, இந்த ரிக்ஷாக்காரன் கூட நமக்கு எவ்வளவு மரியாதை செலுத்துகிறான்!' என்று கூறிக் கொண்டே ரிக்ஷாவில் ஏறி உட்கார்ந்தார்.

அவர் ரிக்ஷாவில் உட்கார்ந்ததும், ரிக்ஷாக்காரன் அவர் இருந்த கட்டிடத்தை நோக்கி ஒரு கும்பிடு போட்டான்.

'நாம்தான் ரிக்ஷாவில் இருக்கிறோமே, இவன் யாரைப் பார்த்துக் கும்பிடுகிறான்?' என்று நினைத்தார் ஆறுமுகம் பிள்ளை. அப்போது அவர் கண்கள் அக்கட்டிடத்தின் நிலைப்படியிலிருந்த கொட்டை எழுத்துக்களைப் பார்த்தன: 'ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் திருக்கோயில்' என்று எழுதியிருப்பதைப் பார்த்ததும் அவர் முகம் சுருங்கிவிட்டது.

'உம், கோயில் வாசலில் போய் உட்கார்ந்து கொண்டு, வருவோர் போவோர் சாமி கும்பிடும் போதெல்லாம் நான் பதில் கும்பிடு போட்டேனே!' என் புத்தியைச் செருப்பால் அடிக்கணும்' என்று கூறித் தலையில் கையால் அடித்துக் கொண்டார்.



குடையின் கீழ்

பண்டிதர் பரமசிவனாரும், வைத்தியர் வரதராசனாரும் நெருங்கிய நண்பர்கள். இருவரும் கேலியும் கிண்டலுமாகப் பேசிக் கொள்வார்கள்.

ஒருநாள் அவர்கள் தெருவிலே சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டு செல்லும் போது திடீரென்று மழை வந்து விட்டது. உடனே வைத்தியர், தம் கையிலிருந்த குடையை விரித்து அவருக்கும் பண்டிதருக்கும் சேர்த்துப் பிடித்தார்.

உடனே பண்டிதர், "சேவகா, இப்படியா குடை பிடிப்பது? மழைத் துளி என்மேல் விழுகிறதே. உம், இப்படிச் சாய்த்துப் பிடி. அப்படிச் சாய்த்துப் பிடி" என்று அதிகாரம் பண்ண ஆரம்பித்துவிட்டார்.

வைத்தியர் உடனே, "மகாராஜா, அப்படியே செய்கிறேன்" என்று கூறிக் குடையைப் பிடித்துக் கொண்டு வந்தார்.

இது நடந்து சுமார் ஒரு வாரம் இருக்கும். அந்த நண்பர்கள் இருவரும் தெரு வழியாக நடந்து சென்றனர். அன்றும் மழை வந்துவிட்டது.

அச்சமயம் வைத்தியர் கையில் குடை இல்லை. பண்டிதர் கையில் குடை இருந்தது. அவர் விரித்துப் பிடித்தார். இருவரும் குடைக்குள்ளே நடந்து வந்தனர்.

உடனே வைத்தியருக்கு முன்பு பண்டிதர் சொன்னது நினைவுக்கு வந்துவிட்டது. ''சேவகா, குடையை நன்றாகப் பிடி. இப்படியா பிடிப்பது?'' என்று கேலியாகக் கூறினார்.

இதைக் கேட்ட பண்டிதர், ''என்ன, இப்போது யாருடைய குடைக் கீழ் நீர் இருக்கிறீர், தெரியுமா? நான் இப்போது சேவகனல்ல; அரசன்! என் குடைக் கீழ்தான் (குடை என்றால் ஆட்சி) நீர் இருக்கிறீர் என்பது நினைவிருக்கட்டும். உம், ஜாக்கிரதை!'' என்றார்.


வைத்தியருக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. பேசாமல் வாயைப் பொத்திக் கொண்டு, குடையின் கீழ் நடக்கலானார்!

—கே. கண்ணுச்சாமி.



மேலே உள்ள கதைகளை எழுதிய கே. கண்ணுச்சாமி, மாணவப் பருவத்திலே கதை எழுதத் தொடங்கியவர். நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளும் ஐந்தாறு நெடுங்கதைகளும் எழுதியவர். சுமார் 20 சிறுவர் நூல்களின் ஆசிரியர். இளம் வயதிலே 'பாலர் மலர்', 'கல்கண்டு,' 'வானர சேனை' ஆகிய பத்திரிகைகள் நடத்திய கதைப் போட்டிகளில் முதல் பரிசு பெற்றவர். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இவர் காலமாகிவிட்டார்.

—ஆசிரியர்.





என் குழந்தைப் பருவம்

— கி. வா. ஜகந்நாதன்

தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களுக்குப் பல மாணவர்கள் உண்டு. அவர்களிலே முதல் இடம் பெறுபவர் வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன் அவர்களே.

கி. வா. ஜ. அவர்கள் மிகச் சிறந்த தமிழறிஞர் மட்டுமல்லர்; புகழ் பெற்ற கவிஞர். எழுத்தாளர்; பத்திரிகாசிரியர்; எத்தனையோ எழுத்தாளர்களை உருவாக்கியவர். நூற்றுக்கு மேற்பட்ட புத்தகங்களை எழுதியவர். சாகித்ய அகாதமி பரிசு பெற்றவர்.

— ஆசிரியர்.

நான் பிறந்த போது எல்லாக் குழந்தைகளும் அழுவது போல அழவில்லையாம். அதனால் என் பக்கத்தில் வைக்கோலை வைத்துக் கொளுத்தினார்களாம். அந்தச் சூடு உறைக்கவே நான் அழத்தொடங்கினேனாம். என்னுடைய இடது முன்கையில் பெரிய மச்சம் ஒன்று இருக்கிறது. அவ்வளவு பெரிய மச்சத்தை உலகத்தில் எங்கும் பார்க்க முடியாது. நெருப்பைக் கொளுத்தியதனால் அந்தக் கருப்பு ஏற்பட்டதோ என்று எல்லோரும் பயந்தார்களாம். குளிப்பாட்டின பிறகும் அந்த மச்சம் இருந்ததனால் அது இயற்கையாக அமைந்தது என்று தெளிந்து கொண்டார்களாம். அந்தக் காலத்தில் இளை



ஞர்கள் ரேக்ளா வண்டி வைத்திருப்பார்கள். நான் பிறந்து இளமையில் வளர்ந்தது கிருஷ்ணராயபுரம் என்னும் கிராமம். மூன்று அந்தண வீதிகள் அங்கே உண்டு. ஒருநாள் நான் வீதியில் விளையாடிக் கொண்டிருந்த போது மண்ணைப் பறித்துச் சிறிய பள்ளத்தை உண்டாக்கி அதில் படுத்துக் கொண்டேன். அப்போது ஒருவர் தம் ரேக்ளா வண்டியை ஓட்டிக் கொண்டு வந்தார். நான் குழியில் மார்பை வைத்துப் படுத்திருப்பதைக் கவனிக்காமல் என் முதுகின்மேல் ஒரு சக்கரம் ஏறும்படி ரேக்ளா வண்டியை ஓட்டிச்சென்றுவிட்டார். வலிபொறுக்காமல் நான் அழவே, என் தாயார் என்னைத் தூக்கிச் சென்று பால் கொடுத்தாள். தாய்ப் பாலை உண்டது நன்ருக இன்னும் நினைவில் இருக்கிறது. பல ஆண்டுகள் தாய்ப்பால் உண்டவன் நான். ''வீரம் பேணின் பாரம் தாங்கும்'' என்பது ஒரு பழைய பாடல். அதன்படி நான் எந்த கஷ்டம் வந்தாலும் முருகன் கையில் என்று எண்ணி அந்தத் துயரத்தை அடையாமல் இருப்பேன்.

நான் ஹைஸ்கூல் படிப்பைக் குளித்தலையில் உள்ள போர்டு ஹைஸ்கூலில் படித்தேன். எஸ். எஸ். எல். ஸி. படிக்கும் போது பரீட்சை வரும் முன் 'ஸெலெக்ஷன்' பரீட்சை ஒன்று வைப்பார்கள். 15 வயது ஆனவர்களையே பரீட்சைக்குப் போக அனுமதிப்பார்கள். எனக்கு 1921—ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பரீட்சை நடக்கும் தேதியில் 15 வயசு கூட நிரம்பவில்லை. ஆகையால் என்னை ஸெலெக்ஷன் பரீட்சை எழுதியும், பொதுப் பரீட்சைக்கு அனுப்பாமல் நிறுத்தி விட்டார்கள். அடுத்த ஆண்டு எனக்கு முடக்கு வாதம் வந்துவிட்டது. அதனல் பள்ளிக்கூடம் போகவில்லை.

அந்தக் காலத்திலேயே எனக்குத் துறவு மனப்பான்மை இருந்தது. இரண்டு முறை பரீட்சைக்குப் போக முடியாமல் இருந்ததனல் அந்த மனப்பான்மை முறுகியது. 1912—ஆம் ஆண்டு என் தந்தையார் சேலம் மாவட்டத்தில் உள்ள மோகனூர் என்னும் ஊருக்குச் சென்று ஒரு சிறிய ஹோட்டலை நடத்தத் தொடங்கினர். நான் துறவு கொள்ளும் மனப்பான்மையோடு இருந்ததை என் தாய் தந்தையர்கள் அறியவில்லை.

அந்தக் காலத்தில் நாமக்கல்லுக்கு அருகில் உள்ள சேந்தமங்கலம் என்ற ஊரில் உள்ள ஒரு சிறிய குன்றில் ஸ்ரீ சுவயம் பிரகாசப் பிரஹ்மேந்திர சரஸ்வதி சுவாமிகள் என்ற திகம்பர சுவாமிகள் வாழ்ந்து வந்தார். அந்தக் குன்றுக்குத் தத்தகிரி என்ற நாமம் உண்டாயிற்று.

நான் அந்தச்சுவாமிகளிடம்செல்ல வேண்டும் என்ற என் விருப்பத்தை என் பெற்ருேர்களிடம் தெரிவித்தேன். அப்போது எனக்குத் தம்பி பிறக்கவில்லை. பல ஆண்டுகள் கழித்தே பிறந்தான்.

என்னைச் சேந்தமங்கலம் போக என் பெற்ருேர்கள் விரும்பாவிட்டாலும், அந்த எண்ணம் நாளுக்கு நாள் என் உள்ளத்தில் முறுகி வந்தது.


ஒருநாள் விடியற்காலையில் யாரோடும் சொல்லாமல் எழுந்திருந்து கால் நடையாகவே சேந்தமங்கலத்தை நோக்கிப் புறப்பட்டு விட்டேன். அதற்கும் மோகனூருக்கும் 19 மைல் தூரம். எனக்கு இருந்த பேருணர்ச்சியினுல் அந்தத் தூரத்தை சட்டை செய்யாமல் நடந்து தத்தகிரியை அடைந்தேன். சுவாமிகளுடைய சிஷ்யர் ஒருவர் சங்கரானந்தர் என்னும் பெயர் உடையவரிடம், மோகனூரில் இருந்த பொழுது என் கருத்தைத் தெரிவித்திருந்தேன். அவர், 'அப்படியே செய்யலாம்' என்ருர். அவருடைய வார்த்தைகளும் என்னுடைய உற்சாகத்தை மிகுதிப்படுத்தின.

தத்தகிரிக்கு நான் சென்று ஸ்வாமிகளைத் தரிசித்துக் காலில் விழுந்து, 'எனக்குச் சந்நியாஸம் அருள வேண்டும்' என்று கேட்டேன். அவர், ''ஏக புத்திர விஷயம்; உனக்குச் சந்நியாஸம் தர முடியாது'' என்று சொல்லி விட்டார். அதைக் கேட்டு நான் பெரிய ஏமாற்றம் அடைந்தேன். ''இங்கேயே இருந்து ஏதாவது பணிகளைச் செய்து கொண்டிருக்கிறேன்'' என்றேன். அதற்கும் ஸ்வாமிகள் சம்மதிக்கவில்லை.

என்ன செய்வது என்று தெரியாமல் திரும்பி நாமக்கல்லுக்கு அருகில் உள்ள வல்லிபுரம் என்ற ஊருக்குச் சென்றேன். அங்கே என்னுடைய ஆப்த நண்பர் கைலாசம் என்பவர் இருந்தார். அந்த ஊரை அடைந்த போதுதான் என் கால் வலி எனக்குத் தெரிந்தது. கைலாசத்தின் வீட்டில் என் காலுக்கு வெந்நீர் ஒற்றடம் கொடுத்தார்கள். இரண்டு நாட்கள் அங்கே தங்கிவிட்டு அப்பால் அவர்களிடம் சிறிது பணம் பெற்றுக்கொண்டு குதிரை வண்டியில் மோகனூர் வந்து சேர்ந்தேன். எப்படியாவது சேந்தமங்கலத்தில் ஏதேனும் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தால்; அடிக்கடி சுவாமிகளின் தரிசனம் கிடைக்கும் என்ற ஆவல் எனக்கு இருந்து வந்தது.

ஒருநாள் சேந்தமங்கலத்திலிருந்து திரு. கிச்சு உடையார் என்பவர் காவேரி ஸ்நானம் செய்யும் பொருட்டு மோகனூருக்கு வந்தார். எங்கள் வீட்டுக்கு வந்தார். என்னைக் கண்டு, ''சேந்தமங்கலத்தில் சிறு பிள்ளைகளுக்கு ஆங்கிலம் சொல்லித் தர முடியுமா?'' என்று கேட்டார். தெய்வமே எனக்குச் சேந்தமங்கலம் போக ஒரு வழியை உண்டு பண்ணியிருக்கிறது என்ற எண்ணத்தால் நான் உடன்பட்டேன். சில நாள் கழித்துச் சேந்தமங்கலம் போய்ச் சேர்ந்தேன். அங்கே மல்லிகைச் செடிகள் அடர்ந்த சூழ்நிலையில் 'தெய்வீக ஆசிரமம்' என்ற ஒன்றை அந்த ஊர் ஜமீன்தார் திரு. இராவத உடையார் கட்டி நடத்தி வந்தார். துறவிகள் வந்தால் அங்கே தங்குவார்கள். அடிக்கடி சொற்பொழிவு நடக்கும். நானும் அங்கே சொற்பொழிவுகளைச் செய்து வந்தேன். கேட்டவர்கள் மகிழ்ச்சியை அடைந்தார்கள்.

அக்காலத்தில் நானே சமையல் செய்து சாப்பிட்டு வந்தேன். எனக்குச் சமையல் நன்ருகச் செய்யத் தெரியாது. ஏதோ பண்ணிச் சாப்பிடுவேன்.



இந்த அவல நிலையைக் கண்டு இராவத உடையார் அந்த ஊரில் அக்கிரகாரத் தில் ஒரு வீட்டில் உணவு கொள்ள ஏற்பாடு செய்தார்.

சேந்தமங்கலத்தில் 20 ரூ. சம்பளத் தில் எனக்கு ஒரு வேலை போட்டுக் கொடுத்தார் இராவத உடையார். பையன்களுக்குப் பாடம் சொன்ன தில் அரிசி, பருப்பு முதலியவை எனக் குக் கிடைத்தன. ஆதலால் எனக்கு வேலையில் கிடைத்த சம்பளத்தைச் செலவழிக்காமல் வைத்திருந்தேன்.

சேந்தமங்கலத்தில் எஸ். பி. எல். மிஷன் என்ற கிறிஸ்தவ சபை இருந் தது. அவர்கள் ஓர் உயர்நிலைப் பள் ளியை நடத்தி வந்தார்கள். அந்த மிஷ னுடைய தலைவர் திரு. துரோவர் என் பவர். அவரும் அவர் மனைவியும் தமிழ் கற்க விரும்பினார்கள். என்னைப் பற்றி அறிந்து கொண்டு, என்னைக் கூட்டி வரச் சொல்லி, ''பாடம் சொல்லித் தர முடியுமா?'' என்று கேட்டார். ''முடியும்'' என்று ஒப்புக் கொண் டேன்.

பாடம் ஆரம்பம் ஆயிற்று. துரோ வர் துரைக்குத் திருக்குறள் பாடம் சொன்னேன். அவர் மனைவிக்குக் கிறிஸ்தவப் பிரசார நூல்கள் சில வற்றைப்பாடம்சொன்னேன். அந்தப் புத்தகங்களில் இந்து தர்மத்தையும், நம்முடைய வழிபாட்டு முறைகளை யும் கண்டித்து எழுதிய பாடங்கள் இருந்தன. அவற்றைப் பார்க்கும் போது எனக்கு மிகவும் கோபம் உண் டாயிற்று. ஆனாலும் அதை அடக்கிக் கொண்டேன். ஒரு பாடத்தில் முரு கனைப் பற்றி இழிவாகச் சொல்லி யிருக்கிறது. அதைப் பார்த்தவுடன் என்னால் கோபத்தை அடக்க முடிய வில்லை. ஆதலால் உடனே, ''இதெல் லாம் முட்டாள்தனம்'' என்று ஆங்கி லத்தில் சொன்னேன். அப்போது அவர்கள் என்னை வேலையை விட்டு விலக்கியிருப்பார்கள். ஆனால் அவர் கள் அப்படிச் செய்யவில்லை. சில நாள் கழித்துத் துரோவர் துரை, என் னைப் பார்த்து, ''ஐயா, நீங்கள் மிகவும் நன்றாகப் பாடம் சொல்கிறீர்கள். நானும் பாடம் சொன்னால் என் தமி ழறிவு பலப்படும். என் மனைவிக்கு நீங்கள் பாடம் சொல்வதை நிறுத்தக் கூடாது. ஆனாலும் நானும் எங்கள் மத சம்பந்தமான நூல்களை அவனுக் குப் பாடம் சொல்லலாம் என்று எண்ணுகிறேன். இந்த வரத்தை எனக்கு அருள வேண்டும்'' என்று விநயமாகச் சொன்னார். அவர், 'வரத்தைத் தர வேண்டும்' என்று கேட்டதில் அவருடைய பண்பு தெரிந் தது. அது முதல் சில புத்தகங்களை அவர்தம்மனைவிக்குப்பாடம்சொல்லி வந்தார். நானும்சிலவற்றைச்சொல்லி வந்தேன்.

இளமையிலேயே செய்யுள் எழுதும் பழக்கம் எனக்கு உண்டாயிற்று. எங் கள் ஊராகிய மோகனூரில் காயிதமலை என்ற சிறிய குன்று ஒன்று உண்டு. அந்தக் குன்றின்மேல் ஓர் ஆலயத்தில் தண்டபாணி எழுந்தருளியிருக்கிறார். நான் அடிக்கடி அங்கே சென்று தரி சித்து வருவேன். இரவு நேரங்களில் ஒருவருக்கும் சொல்லாமல் அந்த ஆலயம் சென்று கோவிலைச் சுற்றி அங்கப் பிரதட்சிணம் செய்வேன். கல்லும் முள்ளும் குத்தினாலும் அவற் றால் உண்டாகும் துன்பத்தைச் சகிப் பதில் ஒருவகை ஆனந்தம் உண்டா யிற்று. ஒருபிரம்பைஎடுத்துக்கொண்டு என் முதுகை நானே அடித்துக் கொள் வேன். அதிலும் ஒருவகை இன்பம் உருவாயிற்று.

சேந்தமங்கலத்தில் தெய்வீக ஆசிர மத்தில்இருந்தபோது, தத்தகிரிஸ்வாமி களின் சீடரான நிஜானந்தசுவாமிகள் என்பவர் அந்த ஆசிரமத்துக்கு வந் தார். அவர் நான் செய்யுள் இயற்று வதையும், சொற்பொழிவு ஆற்றுவதை யும் கண்டு மகிழ்ச்சி அடைந்தார். ''நீங்கள் சென்னைக்குச் சென்று மகா மகோபாத்தியாய உ.வே.சாமிநாதைய ரவர்களிடம்சேர்ந்துபாடம்கேட்டால் பெரிய புலவராகலாம்'' என்றார்.

இந்த எண்ணம் என் உள்ளத்தில் வேரூன்றியது. எனக்குக் கிடைத்த சம்பளத்தைச் சேர்த்து வைத்துக் கொண்டு சென்னை வரத் தீர்மானித் தேன். மிட்டாதார் இராவத உடையார் என்னை அழைத்துக் கொண்டு வந்து ஐயரவர்களிடம் சேர்ப்பித்தார். அது முதல் என் வாழ்க்கை தமிழோடு கலந்ததாகிவிட்டது.



மேலேயுள்ள படத்தைப் பார்த்து, இது பாரதியாரின் எந்தப் பாடல் வரிகளை நினைவுபடுத்துகின்றன என்று கண்டுபிடியுங்கள்:

விடை 18 ஆம் பக்கம்.

கேளுங்கள்: சொல்லுகிறோம்

* இந்தியாவில் எத்தனை ஏரிகள் இருக்கின்றன? அவற்றுள் மிகப் பெரிய ஏரி எது? எங்கே இருக்கிறது?
—ரா. திருப்பதிவெங்கிடசாமி, சிப்பிப்பாறை.

இந்தியாவில் உள்ள மொத்த ஏரிகளின் எண்ணிக்கை தெரியவில்லை. மிகப் பெரிய ஏரி காஷ்மீரிலுள்ள உலர் ஏரிதான்!

* சிகப்பு, மஞ்சள் என்று இரண்டு நிறங்களில் தேன் இருப்பதை நான் பார்த்திருக்கிறேன். ஒரே நிறத்தில் ஏன் இருப்பதில்லை?
— ர. பிரியதர்சினி, கீரனூர்.



நீ பார்த்தது இரண்டு நிறங்களில்தானே! மொத்தம் ஏழு வகை நிறங்களில் தேன் இருக்கும். எந்த மாதிரிப் பூக்களிலிருந்து தேன் சேகரிக்கப்படுகிறதோ, அதற்குத் தக்கபடி நிறம் இருக்கும்.

* உலகிலேயே மிகச் சிறிய நாடாகிய வாட்டிகன் நாட்டின் தலைநகரம் எது?
— ஆர். சௌந்தரராஜன், நீரவி.

வாட்டிகன் என்பதே ஒரு தனி நகரம்தான். அந்தத் தனிநகரமே ஒரு நாடாக விளங்குவதால், நாடும் அதுதான்; தலை நகரும் அதுதான்!

* நானும் என் போன்ற சிறுவர்களும் சேர்ந்து 'பாரதி' என்ற கையெழுத்துப் பத்திரிகையை நடத்துகிறோம். இதை நடத்த அனுமதி (லைசென்ஸ்) வேண்டுமா?
— ஆ. இரா. வீரராகவன், பேரளம்.

தேவையில்லை. அச்சிட்டு வெளியிடும் பத்திரிகைக்குத்தான் அனுமதி தேவை.

* வௌவால் பழங்களைக் கடித்துத் தின்கிறதே, அதற்கு எத்தனை பற்கள்?
— சி. மனோகரன், மாமண்டூர்.

மனிதருக்கு இருப்பதைவிட 2 பற்கள் அதிகம். ஆம், 34 பற்கள்!

* கொங்கு நாடு என்கிறார்களே, அது எங்கே இருக்கிறது?
— த. கனகவல்லி, தஞ்சாவூர்.

இப்போதுள்ள கோவை, சேலம் மாவட்டங்களில் அடங்கிய பகுதியைத்தான் முற்காலத்தில் கொங்கு நாடு என்றார்கள்.

* புத்தர், அவருடைய கொள்கைகளை சமஸ்கிருதத்தில் சொன்னாரா? அல்லது இந்தியில் சொன்னாரா?
— பி. ரமணி, கரூர்.

இரண்டிலும் இல்லை. 'மாகதி' என்ற மொழியிலேதான் புத்தர் தம்முடைய அறிவுரைகளைக் கூறினார். அப்போது, அவர் கூறியவற்றை யாரும் எழுதி வைக்கவில்லை. புத்தர் மறைந்து 200 ஆண்டுகளுக்குப் பிறகுதான் அவரது அறிவுரைகளை மாகதி மொழியிலே எழுதி வைத்தார்கள். 200 நூறு ஆண்டுகள் வரை அவரது அறிவுரைகளைப் பாதுகாத்து வந்ததால், அந்த மொழிக்கு 'பாலி' என்று பெயர் கொடுத்தார்கள். பாலி = பாதுகாப்பது.

* ராஜாஜி பிறந்த ஊர் சேலமா? ஒசூரா?
— எஸ். கார்த்திகேயன், கடலூர்.



இரண்டுமில்லை. தொரப்பள்ளி என்ற கிராமம்தான். இது ஒசூர் வட்டத்தில் இருக்கிறது.

* பைபிளில் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று சொல்கிறார்களே, அப்படியென்றால்...?

—கு. நல்லசிவம், திருநெல்வேலி—2.

ஆண்டவன் ஆதி மனிதனைப் படைத்ததிலிருந்து ஏசுநாதர் பிறக்கும் வரையிலுள்ள வரலாற்றைக் கூறுவது பழைய ஏற்பாடு. ஏசுநாதரின் போதனைகள் அடங்கியுள்ளது புதிய ஏற்பாடு.

* டார்ச் லைட்டை எப்போது யார் கண்டு பிடித்தார்?

—இ. கோபிநாத், மேலூர்.



1898—ல் நியூயார்க் நகரில் முதல் முதலாக இந்த விளக்கைச் செய்தார்களாம். செய்தவர் பெயர் தெரியவில்லை.

* தேசிய கீதம் பாடும்போது சிலர் உட்கார்ந்துகொண்டும், பேசிக்கொண்டும் இருக்கிறார்களே, இது சரியா?

—சி. தேவிகா, வடலூர்.

மிகவும் தவறு. தேசிய கீதம் தேசத்தைப் போலவே புனிதமானது; மரியாதைக்கு உரியது. ஆகையால் தேசிய கீதம் பாடும்போது, எவரும் உட்கார்ந்திருக்கவும் கூடாது. பேசிக் கொண்டிருக்கவும் கூடாது. எழுந்து நேராக நிமிர்ந்து நிற்க வேண்டும். சேர்ந்து பாடலாம். அது மிகவும் நல்லது.

* நேரம் காலையா மாலையா என்பதை அறிய A. M., P. M. என்ற ஆங்கிலச் சொற்களை உபயோகிக்கிறோம். அச்சொற்களின் விரிவாக்கம் என்ன?

—ப. ஜானகி, திருப்பூர்.

லத்தீன் மொழியில் **ANTE MERIDIEM** என்றால் நடுப்பகலுக்கு முன்பு என்றும், **POST MERIDIEM** என்றால் நடுப்பகலுக்குப் பின்பு என்றும் பொருள். அதையே சுருக்கமாக, **A.M., P.M.** என்கிறோம்.

* மருதாணி இலையை அரைத்துக் கை, கால் விரல்களில் அழகுக்காகத் தடவிக் கொள்கிறோம். அது ஒரு நல்ல மருந்து என்றும் சொல்லுகிறார்களே, அப்படியா?

—மு. பார்வதி, வேதாரண்யம்.

பேசும்போது மருதாணி என்று சொன்னாலும் 'மருதோன்றி' என்பதுதான் சரியான தமிழ்ச் சொல். தலைவலி தீர மருதோன்றி இலையை அரைத்துப் பற்றுப் போடுகிறார்கள். தொண்டை வலி தீர, இலைகளை நீரில் ஊற வைத்து, அந்த நீரில் கொப்பளிக்கிறார்கள். காலில் எரிச்சல் இருந்தால், இலையை அரைத்து உள்ளங்காலில் அப்பிக் கொள்கிறார்கள். இப்படி அது பல வகையிலும் மருந்தாக உதவுகிறது.

* 'மனோன்மணீயம்' என்ற நாடகம் ஒரு ஆங்கில நாடகத்தின் மொழி பெயர்ப்பு என்கிறார்களே, நிஜமாகவா?

—கே. ராஜமோகன், சென்னை—18.

மொழி பெயர்ப்பு அல்ல. தழுவல். லிட்டன் பிரபு என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய 'இரகசிய வழி' (**The Secret Way**) என்ற கவிதையைத் தழுவி எழுதப்பட்டதுதான் அது.

* சுவாமி தயானந்த சரஸ்வதியின் இளமைப் பெயர் என்ன?

—டி. சாவித்ரி, பழனி.

ஆரிய சமாஜத்தை நிறுவினரே, அந்த தயானந்த சரஸ்வதிதானே? அவரது இயற்பெயர் மூலசங்கர்.

* சமீபத்தில் 'டமாரம்' என்ற பழைய சிறுவர் பத்திரிகையைப் பார்த்தேன். அதை நடத்தியவர் யார்?

—குடந்தை ஆர். ஆனந்த்.

அந்தப் பத்திரிகையின் கடைசிப் பக்கத்தில், 'ஆசிரியர், வெளியிடுபவர்: சு. ப. சொக்கலிங்கம்' என்று அச்சிட்டிருக்குமே, பார்க்கவில்லையா?

* சிறுவர் கலைக்களஞ்சியத்தை மிகவும் அற்புதமாக வெளியிட்டிருக்கும் தமிழ் வளர்ச்சிக் கழகம் எப்போது ஏற்படுத்தப் பட்டது?

—ஆர். செந்தில்குமார், ஆவடி.



1946 ஆம் ஆண்டு. அப்போது கல்வி அமைச்சராக இருந்த தி. சு. அவினாசி லிங்கம் செட்டியார் தலைமையில் நிறுவப்பட்டது.

* நம் பாரதப் பிரதமர்களிலே மிகக் குறைந்த வயதில் பதவி ஏற்றவர் யார்?
—வே. நீலா, சிங்கம்புணரி.



சந்தேகமென்ன? ராஜீவ் காந்திதான். ஜவஹர்லால் நேரு 58 வது வயதிலும், லால் பகதூர் சாஸ்திரி 60 வது வயதிலும், இந்திரா காந்தி 49 வது வயதிலும் பிரதமரானார்கள். ராஜீவ் காந்தி 40 வது வயதிலே பிரதமராகி யுள்ளார்.

* புனுகு எதிலிருந்து தயாரிக்கப்படுகிறது?
—எஸ். பிரகாஷ், பழனி.

புனுகு பூனையின் அடி வயிற்றின் பின் பகுதியில் ஒரு சுரப்பி இருக்கிறது. அதிலிருந்துதான் புனுகு கிடைக்கிறது.

* கும்பமேளா என்ற திருவிழா எந்த ஊரில் எத்தனை வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறுகிறது?
—இரா. சுவாமிநாதன், சீர்காழி.

அலகாபாத் என்று வழங்கப்படும் பிரயாகையில், திரிவேணி சங்கமத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கும்பமேளா நடைபெறும், கும்பகோணத்தில் மகாமகம் நடைபெறுவது போல்.

* தீக்குச்சித்தொழில் ஆரம்பமானது எங்கள் ஊரில்தானே?
—வி. நடராஜன், சிவகாசி.

அது எப்படி அகமதாபாத்துக்குத் தர வேண்டிய பெருமையை உங்கள் ஊருக்குத் தரமுடியும்? முதல் முதலாகத் தீக்குச்சித் தொழிற்சாலை ஆரம்பமானது அகமதாபாத்தில்தான். 1894—ஆம் ஆண்டில். ஆனால், இப்போது தீப்பெட்டித் தொழிலில் மிக வளர்ச்சி அடைந்திருப்பது உங்கள் ஊர்தான்.

* சிலர் இரவிலே தூக்கம் வரவில்லை என்று தூக்க மருந்து சாப்பிடுகிறார்களே, இது நல்லதா?
—என். பத்மநாபன், ஆரணி.

ஐயோ! இது மிகவும் கெட்ட பழக்கமல்லவா? ஆபரேஷன் செய்து கொண்டவர்கள், அல்லது நோயினால் மிகவும் தொல்லைப் படுபவர்கள் இரவிலே தூங்காமல் இருந்தால் கவலை அதிகமாகும்; உடலும் கெடும். அப்படிப்பட்ட சமயங்களில் மட்டும், டாக்டர்களின் யோசனைப்படி தூக்க மருந்து சாப்பிடலாம். ஆனால், தூக்க மருந்து சாப்பிடுவதையே பழக்கமாகக் கொண்டு விட்டால், அது உடம்பை மிகவும் பாதிக்கும்.

* பெர்னார்ட்ஷா மிகப் பெரிய நாடக ஆசிரியர் என்கிறார்களே, அவர் எழுதிய நாடகங்களில் மிகவும் சிறந்தது எது?
—ஜி பானுமதி, சென்னை—4.

அவர் எழுதிய நாடகங்களில் மிகவும் முக்கியமானவை ஒன்பது என்கிறார்கள். அந்த ஒன்பதில் மிகவும் சிறந்தது செயின்ட் ஜோன் **(St. Joan)** என்ற நாடகம்தானாம்!

* 'அயோத்தி என்றொரு ராஜ்ஜியமாம்.
அதனைத் தசரதர் ஆண்டனராம்'
என்ற பாடல் எந்தப் புத்தகத்தில் உள்ளது? முழுப் பாடலையும் சொல்ல முடியுமா?
—எஸ். கண்மணி, விளாங்குப்பம்.

'அவர்க்கு மூன்று மனைவியராம்' என்று மேலும் ஒரே ஒரு வரிதான் நினைவுக்கு வருகிறது. முழுப் பாட்டும் தெரியவில்லையே! எந்தப் புத்தகத்தில் இருக்கிறது என்பதும் தெரியவில்லை.

(யாருக்காவது தெரிந்தால், தயவு செய்து தெரிவியுங்கள். இதையே எங்கள் வேண்டுகோளாக வைத்துக் கொள்ளுங்கள்).

* ஹெல்மெட் சட்டம் கொண்டு வந்ததைக் குறித்து உங்கள் கருத்து என்ன?
—பி. ராமதாஸ், திருச்செங்கோடு.



விபத்துக்களில் தலைக்காயம் ஏற்பட்டால், உயிர் பிழைப்பது கடினம். தலையைக் காத்து, அதன் மூலம் உயிரையும் காக்க ஹெல்மெட் அணிவது மிகவும் அவசியம்தான்.



உணர்ச்சியும் உடலும்

ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

அம்பலவாணனுடைய பள்ளிக் கூடத்திற்குப் பம்பாயிலிருந்து ஒரு விஞ்ஞானி வந்திருந்தார். அவர்பெயர் சுப்பிரமணியம். அப்பள்ளியின் மாணவர் கூட்டத்தில் அவர் பேசினார். அவர் உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானிகளில் ஒருவர். அவர் பேசியதன் சாராம்சம் பின்வருமாறு:.

"மிகப் பெரிய விஞ்ஞானக் கருத்துக்களை உங்களிடம் கூற முடியாது. ஆனால், நீங்களும் என்னைப் போல விஞ்ஞானி ஆக முடியும். நீங்கள் பிற்காலத்தில் சிறந்த விஞ்ஞானிகளாகி நம்முடைய பாரத நாட்டிற்கு உழைக்கலாம்.

"விஞ்ஞானி ஆவதற்குக் கூர்மையான ஞாபக சக்தி வேண்டும். சிறு வயதில் மறதிக் குணம் வந்தால் பிற்காலத்தில் புகழ் பெற முடியாது. மேலும் பல தொல்லைகளுக்கு ஆளாக வேண்டும். ஆகவே, நினைவாற்றலைச் சிறு வயதிலிருந்தே வளர்த்துக் கொள்ள வேண்டும்.

"நடந்த பாடங்களையும் நடக்கின்ற பாடங்களையும் எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அதற்குமனம் ஒருநிலையில் நிற்கவேண்டும். மனம் ஒருநிலையில் நிற்க வேண்டுமென்றால் நீங்கள் உணர்ச்சிவசப்படக் கூடாது. உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த வேண்டும். உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தாவிடில் எதிர்கால வாழ்க்கை ஆடிப் போய்விடும்.

"நமக்கு ஒரு பொருளின் மீது ஆர்வம் வருகிறது. ஆர்வப் படுவதில் தவறு இல்லை. அப்பொருள் நமக்குத் தேவைதானா என்று சிந்திக்க வேண்டும். அப்போதைய உணர்ச்சிக்கொந்தளிப்பில், அது வேண்டும் போல் தோன்றும். ஆகவே, இரண்டு நாட்கள் கழித்துச்சிந்திக்கவேண்டும். அப்பொழுது உணர்ச்சிகள் கட்டுப்பாட்டிற்குள் அடங்கி இருக்கும். அப்பொழுது தெளிவு பிறந்து அப்பொருள் தேவையா? அல்லது வேண்டாமா? என்பது தெளிவாகிவிடும்.

"உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தாததால்பலர்பலதுன்பங்களுக்குஆளாகியிருக்கின்றனர். மிகப்பெரியவர்களும் இதிலிருந்து தப்பவில்லை.

"தேவ சபையில் 'பொய்யே சொல்லாத ஒரே மன்னன் அரிச்சந்திரன்' என்று வசிட்டர் கூறினார். அதைக் கேட்டுக்கொண்டிருந்த விசுவாமித்திரர் தம்முடைய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தவில்லை. உடனே, "நான் அரிச்சந்திரனை ஒரு பொய் சொல்ல வைக்கிறேன்" என்று சபதம் செய்தார். "என் சபதத்தில் நான் தோற்றுவிட்டால் நான் தேடிய தவப்பயனைக் கொடுத்து விடுவேன்" என்றும் உறுதி கூறினார். நடந்தது என்ன? அரிச்சந்திரன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தினார். விசுவாமித்திரர் கொடுத்த எல்லாச் சோதனைகளிலும் வெற்றி பெற்றார். ஒரு பொய் கூடச் சொல்லவில்லை. உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தாத விசுவாமித்திரர் தோற்றார். தவப் பயனையும் இழந்தார்.

"இன்னொரு உதாரணம் கூறுகிறேன். இராமர் வனவாசம் செய்யும் பொழுது சீதாப்பிராட்டியைக் கவர

இராவணன் நினைத்தான். மாரீசன் என்ற அரக்கனைப் பொன் மானாக மாற்றினான். மிக அழகான அந்தப் பொன் மான் சீதாப்பிராட்டி முன் வந்து நின்றது. அந்த மானுடன் விளையாட சீதாப்பிராட்டி ஆசைப்பட்டாள். அவள் தன்னுடைய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தவில்லை. அம்மானைப் பிடித்துத் தர வேண்டும் என்று இராமபிரானை வற்புறுத்தினாள். இலக்குவன் தடுத்தான்: "தங்கத்தில் மான் படைக்கப்படுவதில்லை. இது மாய மான். இதன் பின்னால் ஒரு பெரிய துன்பம் காத்திருக்கிறது. ஆகவே, இது வேண்டாம்" என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். ஆனால், சீதாப்பிராட்டி கேட்கவில்லை. உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தவில்லை. அதனால் துன்பப்பட்டாள்.

"இந்த வகையில் யோசிக்கும் பொழுது நமது இளைஞரின் கல்விக்குப் பெரிய தடையாக இருப்பது உணர்ச்சி வசப்படுவதுதான். உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துதல் மிக எளிமையானது. தொடர்ந்து சிறிது சிறிதாக முயற்சி செய்தால், எளிதாக உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தலாம். உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தினால் மனம் ஒருமைப்படும். மனம் ஒருமைப்பட்டால், கல்வியில் ஆழ்ந்த பிடிப்பு ஏற்படும். அதனால் வெற்றி அடையலாம். நாட்டுக்கும் நல்லது.

"உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி, அதன் வழியாக மனத்தை ஒருமைப்படுத்தி இரு சிறுவர்கள் உயர்நிலை அடைந்தார்கள். ஒருவன் துருவன்; மற்றொருவன் மார்க்கண்டேயன்.

"உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தா விட்டால் மனம் மட்டும் கெடாது; உடல் நிலையும் கெடும். அளவுக்கு மீறிய சுமையை நம்மால் தூக்க முடியாது. அதுபோல, அளவுக்கு மீறிய கட்டுப்பாடற்ற உணர்ச்சிகளையும் நம் உடல் தாங்காது. உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தாவிட்டால், காலப் போக்கில் நரம்புத் தளர்ச்சி ஏற்படும். பிறகு, இரத்த அழுத்தம் ஏற்படும். அதன் காரணமாக மாரடைப்பும் ஏற்படும்.

"இவ்வளவு தொல்லைகளையும் தருகின்ற உணர்ச்சிவசப்படுதலைச் சிறு வயதிலேயே நீங்கள் நீக்க வேண்டும். இறைவன் அருளால் நீங்கள் உயர்வடைவீர்களாக."

திருக்குறள்:

நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

குழந்தை இலக்கியப் போட்டி

இந்த ஆண்டு சிறுகதை, நாடகம் ஆகிய இரு துறைகளுக்கும் ஏ. வி. எம். அறக்கட்டளைப் பரிசுகளைக் குழந்தை எழுத்தாளர் சங்கம் வழங்கவிருக்கிறது. புத்தகமாக வெளியிடுவதற்கேற்ற கையெழுத்துப் பிரதிகளில் இரண்டு பிரதிகள் 30.9.85—க்குள் அனுப்பப்பட வேண்டும். முழு அளவு வெள்ளைத் தாளில் சுமார் 80 பக்கங்களுக்கு மேற்படாமல் இருப்பது நல்லது. எழுதியவர் பெயரையும் முகவரியையும் மட்டும் முதல் பக்கத்தில் குறிப்பிட வேண்டும். அதன் கீழே 'இந்தக் கையெழுத்துப் பிரதியில் கண்டவை நான் சொந்தமாக எழுதியவையே. இதற்கு முன் புத்தகத்தில் இடம் பெறாதவை' என உறுதியளித்துக் கையெழுத்திட வேண்டும்.

பரிசு பெறும் பிரதிகளின் உரிமை நூலாசிரியருக்கே உரியது. அவை நூல் வடிவம் பெறும் போது, 'குழந்தை எழுத்தாளர் சங்கம் 1985—ஆம் ஆண்டு நடத்திய போட்டியில் ஏ.வி.எம். அறக்கட்டளைத் தங்க/வெள்ளிப் பரிசு பெற்றது' எனக் குறிப்பிட வேண்டும்.

முன்பே ஒரு துறையில் பரிசு பெற்ற எழுத்தாளருக்கு மறுமுறையும் அதே துறையில் பரிசு வழங்கப்படமாட்டாது. அனுப்பவேண்டிய முகவரி: குழந்தை எழுத்தாளர் சங்கம், ஏ. எல். 183, அண்ணா நகர், சென்னை—40.

பாரதி புதிர்-3
விடை

இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்,
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்,
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதி னாயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறி வித்தல்.

(கலைமகளின் புகழ்)

விளையும் பயிர்



'ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே!' என்று பாடினார் பாரதியார். ஆனால், 'எத்தனை மாணவர்கள் இந்தப் பெண்ணின் சாதனையை இவ்வளவு சிறு வயதில் செய்து முடிக்க முடியும்?' என்று எண்ணாமல் இருக்க முடியவில்லை!

பன்னிரண்டு வயதில் பதினாலாயிரம் அடி மலை ஏற்றமா?

மலைப்புதான் ஏற்படுகிறது நமக்கு!

பழநி மலைக்கும், திருத்தணி மலைக்கும்கூட தொட்டில் தேடும் நமக்கு ஒரு மாணவியின் சாதனை பிரமிப்பாகத் தானிருக்கிறது.

ஆனால், அந்தப்பெண்ணைக் கேளுங்கள், "இதெல்லாம் ஒரு சாதனையே இல்லை... காவ்ரா இமாலய மலையினத்தில் ஐந்து வயதுப் பையன் கூட எங்களுடன் மலை ஏறி வந்தானே!" என்கிறாள் சிரித்துக் கொண்டே. 'மீன் குட்டி நீந்துவது வியப்பல்ல...' மான் குட்டி நீந்துவது வியப்புத்தானே! சென்னை செயின்ட் டாம்னிக்ஸில் இப்போது பத்தாவது படிக்கும் ஷைலஜா இந்தச் சாதனையைச் செய்யும் போது வயது பன்னிரண்டு மட்டுமே! படித்ததோ ஏழாம் வகுப்பு! இதற்கான வாய்ப்பு எப்படிக் கிடைத்தது!

பள்ளியில் என். சி. சி. பிரிவில் உறுப்பினரான ஷைலஜா ஒரு சிறந்த 'கேடட்.' டில்லியில் நடைபெறும் குடியரசு விழா அணிவகுப்பில் தமிழ் நாட்டு அணியில் இடம் பெற்றவள். தலை சிறந்த கேடட் என்ற தகுதியைப் பெற வேண்டும் என்ற ஆசையால் அதற்கு ஒரு தகுதியாக இருக்கட்டுமே என்ற எண்ணத்தில்தான் மலைஏற்றப் பயிற்சிக்கு மனம் இசைந்தாள். இந்திய மாநிலங்கள் அனைத்துக்கும் சேர்த்து பத்து பேருக்கான வாய்ப்புக்களில் ஒன்று என். சி. சி. கேடட் ஷைலஜாவுக்கும் கிடைத்தது.

நேரு மலையேற்றப் பயிற்சிக் கூடத்தில் உத்தர காசியில் முதல் ஐந்து நாள் தீவிரப் பயிற்சி... அதற்குமுன் பள்ளிக்கருகே பரங்கிமலையைத் தானே பார்த்திருக்க முடியும்! 'குறிப்பிடற்குரிய செயல்' என்ற செட்டான பாராட்டுக் குறிப்புடன் சான்றிதழ் பெற்றுத்திரும்ப இருபது நாள் முயற்சிகள் இப்பெண்ணுடையது. எவரெஸ்ட் பகுதி மலை ஏற்றத்தை விடக் கடினமானதாம் நந்தாதேவி மலை ஏற்றம்!

பாறைகளைக் கடப்பது, ஆறுகளைக் கடப்பது எல்லாம் 'த்ரில்லிங்' அனுபவமாம்! சற்று குண்டான ஒரு தோழி உணவுப் பெட்டியைத் தவறவிட்டுக் குனிந்து எடுக்க முயன்றாளாம். அப்போது அவள் உருண்டு ஷைலஜா மீது விழுந்து இருவரும் கீழே உருள ஷைலஜா பனிக் கோடரியை வீசிப் பிடிப்பு ஏற்படுத்தித் தப்பி வந்த விபத்தை வேடிக்கையாக விவரிக்கிறாள். பந்தார் பூச் அருகே ஒரு இந்தோ ஜப்பானியக் குழு திரும்பவே இல்லையாம்.

"இத்தகைய ஆபத்துக்கெல்லாம் உட்பட்டே பயிற்சிக்கு அனுப்ப இசைந்து எழுதி அனுப்பினோம்" என்று பெருமையாகக் கூறுகிறார் ஷைலஜாவின் தந்தை திரு. கிருஷ்ண மூர்த்தி. இவர் பணியாற்றும் இங்கிலீஷ் எலக்ட்ரிகல்ஸ் குடும்ப ஏட்



அம்மா, சொல்

தம்பி சீனிவாசன்

என்ன வேண்டும், சொல் அம்மா?
எல்லாம் தருவேன், நான் அம்மா.

ஊரைச் சுற்றிக் காட்டிடுவேன்.
உலகம் சுற்றிக் காட்டிடுவேன்.

ஒரு நாள் பெரியவன் ஆனவுடன்
உன்னை அழைத்துப் போகின்றேன்.

என்ன வேண்டும் சொல் அம்மா?
எல்லாம் தருவேன் நான் அம்மா.

பெரிதாய் வீடு கட்டிடுவேன்.
பெருமை யோடு நீ வாழ.

ஒரு நாள் பெரியவன் ஆனவுடன்
உனக்கே வீடு தருவேன் நான்.

என்ன வேண்டும் சொல் அம்மா?
எல்லாம் தருவேன் நான் அம்மா.

பட்டுத் துணிகள் தருவேன் நான்.
பலபல புதுநகை நான் தருவேன்.

ஒருநாள் பெரியவன் ஆனவுடன்
உனக்கே எல்லாம் தருவேன் நான்.

என்ன வேண்டும், சொல் அம்மா?
ஏனோ சும்மா இருக்கின்றாய்?

அம்மா:

''நல்ல பிள்ளை, என் பிள்ளை;
நாடு போற்றும் ஒரு பிள்ளை
என்ற பெயரை நீ எடுத்தால்
இதயம் குளிரும் என் மகனே!

டில் ஷைலஜாவின் சாதனையைப் புகைப்படத்துடன் வெளியிட்டுப் பெருமை கொண்டிருக்கிறது. ஷைலஜாவின் வருத்தம் இதுதான், ''நான் அப்போது வேறு எதுவுமே தெரியாத பெண்ணாக இருந்து விட்டேன். அங்கிருந்து ஒரு பூவோ, செடியோ கொண்டு வரவில்லை... ஏன், புகைப் படம் கூட நான் எடுத்துக் கொள்ள வில்லை!''

இதை நிறைவு செய்த ஷைலஜாவிடம் உள்ளதெல்லாம் ஒரு சான்றிதழும்பனிக்கோடரி,பூட்ஸ்,சிலமலைத்தாவரம் பொறித்த மிகச் சிறு மெடல் தான்.

மலை ஏற்றப் பயிற்சியில் மூன்று நிலைகளாம்... முதல் நிலை அனுபவங்கள்தாம் இவை! மற்ற இருநிலைப் பயிற்சிக்கு இனி தனியேதான் விண்ணப்பிக்க வேண்டுமாம்... சொந்தச் செலவில் செல்ல வேண்டுமாம்... முழுமையா என்பதை எதிர்காலம்தான் சொல்ல வேண்டும். பள்ளிப் பாடங்களிலும் முதல்வகுப்புத்தான்... பொது அறிவுத் தேர்வுகள்... காந்தி அமைதி நிலையத்தின் சத்தியசோதனைத் தேர்வு எல்லா வற்றிலும் முதல்வகுப்புதான். ஆடல்பாடலும் உண்டு! ஷைலஜாவை நேரில் பார்த்தால்யாரும்நம்பமாட்டார்கள்.. பால் வடியும் முகம்... அதிர்ந்து பேசாத குரல்... சரளமான ஆங்கிலம்— தமிழ் உரையாடல்... அடக்கம்.. மென்மை... புன்முறுவல் மாறாத முகம்...!

இந்தப் பெண்ணா 13,800 அடி உயரம் மலை ஏறியிருக்கிறாள்! மீண்டும் மலைப்புத்தான்!

—ஆர். பி. சாரதி.



செங்கற்பட்டு வெண்ணிலா கோகுலம் சிறுவர் சங்கத்தின் மூன்றும் ஆண்டுத் தொடக்க விழாவில் பங்கு கொண்ட குழந்தைகளுடன் 'கோகுலம்' கௌரவ ஆசிரியரும், திரு. எச். கிருஷ்ணமூர்த்தியும்.

தேனி,கோகுலம்சிறுவர்சங்கத்தொடக்கவிழாவில் பங்கு கொண்ட குழந்தைகளுடன் தலைமை தாங்கிய பொது நலத் தொடர்பு மைய விரிவுரையாளர் திரு-ஆர். வைகுண்டம், டாக்டர் உ. கண்ணப்பன், திருவாளர்கள் கள்ளிப்பட்டிசேவகன், அமைப்பாளர் தேனி முருகேசன்.



டேவிஸ் கோப்பை



டேவிஸ் கோப்பை என்பது ஒரு வெள்ளிக் கிண்ணக் கோப்பையை வருஷா வருஷம் உலக ஆடவர்களுக்கான டென்னிஸ் சாம்பியன் போட்டியில் வென்ற நாட்டுக்கு வழங்குவதாகும். இந்தப் பிரசித்தமான கோப்பையை 1900—ஆம் ஆண்டு அமெரிக்காவின் தலைசிறந்த டென்னிஸ் ஆட்டக்காரரான ட்வைட் எப். டேவிஸ் நன்கொடையாக வழங்கினார். உலக நாடுகள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு டேவிஸ் கோப்பைப் பந்தயங்கள் நடைபெற்றன. ஒவ்வொரு பிராந்தியத்திலும் வெற்றி பெறும் டென்னிஸ் நாடு அடுத்த வருஷம் டேவிஸ் கோப்பைக்கு ஆடத் தகுதி பெற்றது. எந்த நான்கு நாடுகள் மோசமாக ஆடினவோ அவைகளுக்குப் பதிலாக ஆடும் தகுதி அவைகளுக்கு உண்டு.

1970—ம் வருஷம் டேவிஸ் கோப்பையில் ஓர் அரசியல் பிரச்னை முளைத்தது. 1974—ம் ஆண்டு தென் ஆப்பிரிக்கா அந்தக் கோப்பையை வென்றது. இதனால் இந்திய சர்க்கார் தென் ஆப்பிரிக்காவின் இனக் கொள்கையை எதிர்த்துத் தன் குழு தென் ஆப்பிரிக்காவோடு ஆடக் கூடாது என்று கட்டளையிட்டது. டேவிஸ் கோப்பைப் பந்தயத்தில் பல உலக சாம்பியன்கள் கலந்து கொள்வதற்குத் தயங்கினர். ஆகவே 1981—ம் ஆண்டு டேவிஸ் கோப்பைப் பந்தயங்களுக்கு உத்வேகம் ஊட்டவும் உலக ஆட்டக்காரர்களைக் கவரவும் பரிசுப் பணத்தை அதிகரித்ததோடு, குறைந்த கால அளவில் பந்தயங்கள் நடப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஏற்படுத்தின.

ஸ்வீடன் நாடு பல தலை சிறந்த டென்னிஸ்காரர்களை உருவாக்கியதில் புகழ் பெற்றது. 1980—ஆம் ஆண்டு ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த போர்க் ஐந்து தடவை விம்பிள்டன் சாம்பியன் பட்டத்தைப் பெற்று அந்நாட்டுக்குப் புகழைத் தேடித் தந்தார். இதுவரை டென்னிஸ் சரித்திரத்தில் யாரும் மூன்று தடவைகளுக்குமேல் விம்பிள்டனில் வெற்றி பெற்றதில்லை.

பெங்களூரில் ஆகஸ்டு 2, 3, 4 தேதிகளில் டேவிஸ் கோப்பைப் பந்தயத்தின் கால் இறுதி ஆட்டம் ஸ்வீடன் குழுவுக்கும் இந்தியக் குழுவுக்கும் நடந்தது. ஸ்வீடன் நாடு ஐந்து போட்டிகளில் நான்கை வென்று புகழ் பெற்



துண்டுமணி

றது. ஸ்வீடன் நாட்டுக்காக. மாட்ஸ் வில்லியாண்டர், ஆண்டர்ஸ் ஜார் யாட், எட்பர்க் ஆடினார்கள். இந்தியக் குழுவில் விஜய் அமிர்தராஜ், ஆனந்த் அமிர்தராஜ்,ரமேஷ்கிருஷ்ணன் இடம் பெற்றனர். வில்லியாண்டர் — விஜய் அமிர்தராஜ் போட்டிதான் அத்தனை பேரையும் மெய்சிலிர்க்க வைத்தது. விஜய் அமிர்தராஜ் அற்புதமாக ஆடி வில்லியாண்டரைத்தோல்வியுறவைத்தது இணையற்ற சாதனை.

மாட்ஸ் வில்லியாண்டர்:


வில்லியாண்டருக்குப் பதினேழு வயதில் பிரெஞ்சு சாம்பியன் பட்டம் கிடைத்தது. ஆஸ்திரேலியாவிலும் இரண்டு டென்னிஸ் விருதுகள் கிட்டின. ஆறு வயதில் வில்லியாண்டர் ஸ்வீடனில் சிறிய தொழில் நகரமான டார்ப்ஸ்பார்க்கில் டென்னிஸ் ஆடத் தொடங்கியவர். ஸ்வீடனில் பிரதம கோச் ஜான் ஆண்டர்ஸ் ஜோக்ரன் வில்லியாண்டரின் அருமைகளைத் தெரிந்து அக்கரைச் சீமைக்கு ஆட அனுப்பியவர். ஆஸ்திரேலியாவுக்கெதிராக டேவிஸ் கோப்பைப் பந்தயத்தில் வில்லியாண்டர் இரு தனியார் ஆட்டப் பந்தயங்களில் வென்றவர். இவரை 'போர்க் II' என்று டென்னிஸ் ரஸிகர்கள் அழைக்கிறார்கள். ஆனால் வில்லியாண்டர் தம்மை வில்லியாண்டர் என்று பெருமையோடு அழைப்பதைத்தான் விரும்புகிறார்.

ஆண்டர்ஸ் ஜார்யாட்:

இவருக்கு வயது 24. இவர் உலக டென்னிஸ் ஆட்டக்காரர்களில் ஆறாவது இடத்தைப் பெற்றவர். டென்னிஸ் இளைஞர்களுக்குள் முதியவர். இவர் ஸ்வீடனில் ஏரி நகரமான லிப்கோ பிங்கைச் சேர்ந்தவர். கனடா டென்னிஸ் போட்டியில் ஜான் மெக்கன்ரோவை வென்றுபுகழைப் பெற்றவர்.

எட்பர்க்:

எட்பர்க் பதினேழு வயதில் ஜூனியர் நான்கு 'கிராண்ட் ஸ்லாம்' வெற்றிகளைச் சூடியவர். ஆண்டர்ஸ் ஜார் யாட்டுடன் இரட்டையர் ஆட்டத்தில் 'புகழ் பெற்ற ஜோடி' என்ற கௌரவத்தைப் பெற்றவர். பதினேழு வயதிலேயே ஸ்வீடனில்எட்பர்க்டோனால்ட்



படங்கள்: எம்.எஸ்.அய்யாசாமி

கோப்பையை வென்று புகழ் மணம் பரப்பியவர்.

விஜய் அமிர்தராஜ்:

பெங்களூரில் நடைபெற்ற டேவிஸ் கோப்பை:் பந்தயத்தில் விஜய் அமிர்தராஜ் வில்லியாண்டரைத் தோல்வியடைய வைத்து இந்தியாவின் நற்பெயரைக் காப்பாற்றியவர். இளைஞர்களுக்காக டென்னிஸ் அறக்கட்டளை நிறுவியதைநீங்கள் அறிவீர்கள். உலக டென்னிஸ் அரங்கில் இந்தியாவின் புகழை நிலைநிறுத்தக் கூடியவர்.

ஆனந்த் அமிர்தராஜ்:

விஜய் அமிர்தராஜின் சகோதரர். இரட்டையர் ஆட்டத்தில் சூரர். விஜய்யுடன் தோளோடு தோள் இணைந்து பல வெற்றிகளுக்குப் பாடுபடக் கூடியவர்.

ரமேஷ் கிருஷ்ணன்:

மூன்றாம் தலைமுறை ஆட்டக்காரரான ரமேஷ் ஜூனியர் விம்பிள்டனில் கௌரவத்தைப் பெற்றவர். சமீபத்தில் ரம்யாவை மணம் புரிந்து கொண்டவர். டென்னிஸில் இந்தியாவுக்குப் புகழ் தேடித் தருவதில் டென்னிஸ் கிருஷ்ணனின் வாரிசு இவர்.

பிருந்தாவனக் கவியரங்கம்

விமானம் செல்லுது பார்

விமானம் செல்லுவது பாராய் — தம்பி
விமானம் செல்லுவது பாராய்.
காற்றைக் கிழித்து விமானம் — வானில்
கடிதில் செல்லுது பாராய்.

விமானம் செல்லுது பாராய் — தம்பி
விமானம் செல்லுது பாராய்.


பறவை போலப் பறந்து — தம்பி
பாங்காய்ச் செல்லுது பாராய்.
திறந்த வெளியே பாதை — குறுக்கே
சென்றிடும் வண்டிகள் இல்லை.

புள்ளிகள் போலே அதிலே — சிறு
சன்னல்கள் தெரியுது பாராய்.
தள்ளிச் செல்லும் மேகம் — ஊடே
தாவிச் செல்லுது பாராய்.

கையில் காசு இருந்தால் — நாம்
களிப்புடன் சென்று வரலாம்.
பையில் காசு இல்லை — நாமும்
பார்த்தே மகிழ்வோம் நன்றாய்.

—அ. இளங்கோவன் (4140), சேலம்—1.





மயிலே, ஓடி வா!

மயிலே, மயிலே ஓடிவா.
மனத்தில் நிறைந்த முருகனை
ஒளிவாய் நீயும் ஏற்றியே
உடனே பறந்து ஓடிவா.

உன்னைப் பற்றிக் கவியொன்று
உவப்பாய் நானும் எழுதவே
எண்ணம் கொண்டேன், நீயுமே
எழிலாய்ப் பறந்து ஓடிவா.

வண்ண வண்ணத் தோகையும்
வனப்பு மிக்க கொண்டையும்
கண்ணைக் கவரும் அழகையும்
காட்ட நீயும் ஓடிவா.

மேகம் சூழ்ந்த பொழுதிலே
மென்மைக் குளிர் காற்றிலே
தோகை விரித்து ஆடும்நீ
தோற்றம் காட்ட ஓடிவா.

இடி இடிக்கும் நேரத்தில்
இன்ப மாக அகவும்நீ
நடனம் ஆடும் காட்சியை
நாங்கள் காண ஓடிவா.

குன்று தோறும் ஆடிடும்
குமரக் கடவுள் ஊர்தியாய்
என்று முதலாய் இருக்கிறாய்?
எனக்குச் சொல்ல ஓடிவா.

எங்கள் நாட்டுப் பறவையாய்
ஏற்றுக் கொண்டோம் உன்னையே.
இங்கே உன்னைப் போற்றுவோம்.
இன்பம் பொங்க ஓடிவா.

—தி. வி. செந்தில்குமார் (8927), காரைக்குடி.

எங்கள் ஆசிரியர்

எங்கள் பள்ளி ஆசிரியர்
எளிமை யாகப் பழகிடுவார்.
எல்லா ருக்கும் இனியவரே.
எப்போ தும் அவர் சிரித்திடுவார்.

கல்விக் கடலை நாங்களெல்லாம்
கடந்திடப் படகைச் செலுத்திடவே,
உதவிடும் துடுப்பாய்ப் பயன்படுவார்!
உண்மை யாக உழைத்திடுவார்.

எண்ணும் எழுத்தும் கண் என்றால்,
இருகண் திறந்திடும் கடவுளவர்.
அன்னை தந்தைக் கடுத்தபடி
அனுதினம் வணங்கிடும் தெய்வமவர்.

நீதி நேர்மை யாவினையும்
நெஞ்சில் பதியச் செய்யும் அவர்
ஏணி போல உதவிடுவார்.
ஏற்றம் பெறவே செய்திடுவார்.

—சி. என். சத்தியநாராயணன் (5844),
வளவனூர்..





அளவுக்கு மீறினால்..?

அன்புத் தம்பி அழகன்
அழகு பலூன் வாங்கி
காற்று நன்கு ஊதி
காற்றில் பறக்க விட்டான்.

ஆசை அதிகம் ஆகவே
அழகன் இன்னும் ஊதினான்
அளவு மீறி ஊதவே
அழகுப் பலூன் வெடித்தது!

ஆசைத் தம்பி அழகனும்
அன்றே புரிந்து கொண்டான்.
அளவு மீறி நடந்திடின்
ஆபத் தென்றே உணர்ந்தான்.

—இ. பழனிவேலன் (9251), முத்துராம
லிங்கபுரம்.

பல்லை உடைத்த கண்ணாடி

புத்தம் புதிய கண்ணாடி
புதூரில் வாங்கிய கண்ணாடி
அக்கா அதனை எடுத்தாள்;
அலமா ரியிலே வைத்தாள்.

தம்பிப் பயலாம் பொன்னன்,
தாவிப் பாய்வதில் மன்னன்.
பொன்னன் காலும் துடித்ததே,
புதிய கண்ணாடியை எடுக்கவே.

தாவிக் கண்ணாடியை எடுத்தான்.
தடுக்கிக் கீழே விழுந்தான்.
புதிய கண்ணாடியும் உடைந்ததே!
பொன்னன் பல்லும் உடைந்ததே!

—ப. பூங்குமரன் (8165), பட்டுக்கோட்டை.



கல்விப் பெருமை

இந்தப் புத்தகத்தில் மொத்தம் ஆறு நாடகங்கள் உள்ளன. இவற்றில் இரண்டு தொலைக்காட்சியில் ஒளிபரப்பானவை. மேலும் இரண்டு சென்னை வானொலியில் ஒலிபரப்பானவை.

நூற்றுக்கு மேற்பட்ட நாடகங்களை எழுதிப் புகழ் பெற்றுள்ள கவிஞர் ஆலந்தூர் மோகனரங்கம்தான் இந்த நாடக நூலின் ஆசிரியர்.

ஆறு நாடகங்களில் மூன்று தற்காலச் சிறுவர்களின் சூழ்நிலையை வைத்து எழுதப் பெற்றவை. மற்ற மூன்றும் அரசர்களைப் பற்றியும் புலவர்களைப் பற்றியும் கூறுபவை.

அக்காலப் புலவர்கள் எவ்வாறு அரசர்களின் போர்வெறியைத் தவிர்த்து, அமைதியை நிலைநாட்டினர் என்பதை மிகச் சிறப்பாகவும் அழகான தமிழ் நடையிலும் ஆசிரியர் விளக்குகிறார்.

'கல்விப் பெருமை' என்ற நாடகத்தில் முரசப்பன் என்பவன் பாண்டியன் நெடுஞ்செழியனுடன் எவ்வாறு பேசுகிறான், பாருங்கள்:

"தென்றலை எதிர்பார்த்தேன்; புயல் வீசியது.
தேனை எதிர்பார்த்தேன்;
தேள் வந்து கொட்டியது. கரும்பை எதிர்பார்த்தேன்; கசக்கும் வேம்பு கைகளில் வந்து விழுந்தது."

வெளியிட்டோர்: வசந்தா பதிப்பகம், 21, தருமராசா கோயில் தெரு, ஆலந்தூர், சென்னை—16. விலை ரூ. 6/—.



நரியைத் தேடும் புலிக்குட்டி

"பாதகம் செய்பவரைக் கண்டால்—நீ
பயங்கொள்ள லாகாது பாப்பா."

என்ற பாரதியாரின் இரு வரிகளுக்கு மிகத் தெளிவாக விளக்கம் கூறுவது போல் அமைந்துள்ளது இந்தச் சிறுவர் நாவல்.

களிமண்ணால் மிளகு போலச் செய்து, அதற்குக் கறுப்பு நிறம் பூசி, மலிவான விலைக்கு விற்று மக்களின் உடல்நலம் கெடுத்துவரும் சமூகத் துரோகியை எப்படியும் கண்டுபிடித்துப் போலீஸில் பிடித்துக் கொடுத்து விடுவது என்ற உறுதியுடன் ரவி தீவிர முயற்சியில் ஈடுபடுகிறான். அந்த முயற்சியில் அவன் படுகிற தொல்லைகளுக்கு எல்லையே இல்லை. ஆயினும் முயற்சியைக் கைவிடவில்லை. அவனுக்குத் துணையாக இருந்து நண்பன் ராமுவும் நல்ல சமயங்களில் உதவுகிறான். எடுத்த காரியத்தை வெற்றியுடன் முடித்து அரசாங்கப் பரிசையும் பாராட்டையும் இருவரும் பெறுகின்றனர்.

பற்பல அரசினர் பரிசுகளையும் பாராட்டையும் பெற்ற டாக்டர் பூவண்ணன் எழுதிய இந்நாவலை ஒரே மூச்சில் படித்து முடித்து விடலாம். அப்படி மிகச் சுவையாகவும், விறுவிறுப்பாகவும் உள்ளது.

வெளியிட்டோர்: வானதி பதிப்பகம், தீன தயாளு தெரு, சென்னை—17. விலை: ரூ. 4/—



ஒரு புலி பலியாகிறது



டாக்டர் பூவண்ணன்

10. கமிஷனரின் கவலை

ஒருவித தயக்கத்துக்குப் பிறகு, "சார்! மத்திய அமைச்சர்கள் வருகிறார்கள் என்பதால் நம் அலுவலகம் விடியற்காலை ஐந்து மணியிலிருந்தே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நேற்றிரவும் நேரம் கழித்தே வீட்டுக்குப் போனார்கள். அதனால் சில மணி நேரம் பிரேக் கொடுக்கலாம் சார்" என்றார், துணைக் கமிஷனர்.

துணைக் கமிஷனர் மீது கமிஷனர் சீறி விழுவார் என்று எதிர்பார்த்தான் ஹனிமேன். கமிஷனர் அப்படிச் செய்யவில்லை. மாறாக, "சேரா! இங்கே வா!" என்றார். சேரன் அருகில் வந்தான். அவனை ஒரு கையால் அணைத்துக் கொண்டு பேசினார், கமிஷனர்:

"அன்புள்ள காவல் அதிகாரியே! இவனைப் பார்! இந்தச் சிறுவனுக்கு முதல் கடமை படிப்பது! இரண்டாம் கடமை படிப்பது! மூன்றாவது கடமையும் படிப்பதுதான்! இப்படி லெனின் சொன்னார். ஆனால் நாட்டைக் காப்பாற்றுவதற்காக இந்த இளங்கன்று— இந்தக் குட்டிமான் கடந்த நாற்பத்தெட்டு மணி நேரமாக, சரியாக உண்ணாமல், உறங்காமல் முந்நூறு மைல் தூரம் கடந்து வந்து, நம் கையில் நமக்குத் தேவையான துரோகிகளின் பட்டியலை — சமூக விரோதிகளின் பட்டியலை ஒப்படைத்திருக்கிறான்! இதற்காக இவனுக்குச் சம்பளம் இல்லை! பஞ்சப்படி இல்லை! பயணப்படி இல்லை! என்றாலும் நமது வேலையை இவன் செய்திருக்கிறான். இவனது பொறுப்புணர்ச்சியும் தியாக மனப்பான்மையும் சம்பளம் வாங்கும் நமக்கு வேண்டாமா?"

துணைக் கமிஷனர் அணுவாகக் குறுகிப் போனார்! "சாரி சர்! நீங்க சொன்னபடியே செய்கிறேன்" என்று கூறிவிட்டு அங்கிருந்து அகன்றார்.

"மிஸ்டர் ஹனிமேன்! சேரனை அழைத்துப் போங்கள். காலையில் வாருங்கள். பட்டியலில் இருக்கிற அத்தனை பேரையும் கைது செய்துவிட்டால், நாளை கொலை நடக்கும் என்ற பேச்சுக்கே இடம் இல்லை. இல்லையென்றால் தொல்லைதான்!" என்று கூறிய கமிஷனர், இருவரையும் அனுப்பினார்.

சேரன் அன்றிரவு உறங்கும் முன், "முருகா! அனைவரும் கைதாக வழி செய்" என்று வேண்டிக் கொண்டு படுத்தான்.

காவல் துறை கண்ணுறங்காமல் பணி செய்தது! மைக்ரோ பிலிம் கொடுத்த பெயர்ப் பட்டியலையும் முகவரிகளையும் கொண்டு அந்த இரவே சதித்திட்டத்தில் சம்பந்தப்பட்ட அனைவரையும் கைது செய்தது!

அனைவரையுமா?

இல்லை!

ஒருவனைத் தவிர மற்ற அனைவரையும் காவல்துறை கைது செய்து விட்டது!
ஒருவன் கிடைக்கவில்லை!
அதனால்,
கமிஷனர் கவலையில் ஆழ்ந்தார்.

* * * *

சேரன் கண்விழித்து எழுந்தபோது, ''குட்மார்னிங் சேரன்'' என்னும் குரல் கேட்டது. அதே அறையில் உட்கார்ந்து அன்றைய ஆங்கிலச் செய்தித்தாளைப் புரட்டிக் கொண்டிருந்த ஹனிமேன்தான் அவ்வாறு சொன்னான் என்பதை அறிந்து கொண்ட சேரன், ''குட்மார்னிங் சார்'' என்றபடி எழுந்து உட்கார்ந்தான். 'அறைக்குள் பரவிய வெளிச்சத்தைக் கொண்டு, பொழுது விடிந்து வெகுநேரம் ஆகிவிட்டது என்று புரிந்து கொண்டான். அதனால் தோன்றிய நாணத்தோடு, ''ரொம்ப நேரம் தூங்கிட்டேன் போலிருக்கு'' என்றபடி அறையைச் சுற்றிப் பார்வையைச் செலுத்தினான்.

ஒரு சுவரில் தொங்கிய கடிகாரம் மணி எட்டு இருபது என்று காட்டியது.

''மணி எட்டரை ஆகப் போகுதே!'' என்றபடி அவசர அவசரமாகப் படுக்கையை விட்டு எழுந்தான் சேரன்.

''அதனால் என்ன? நாம் பத்து மணிக்குக் கமிஷனர் அலுவலகம் போனால் போதும். மேஜைமேல் காப்பி வைத்திருக்கிறேன். சூடு ஆறியிருக்காது. முதலில் காப்பியைக் குடி. பிறகு குளிக்கப் போகலாம்.''

சேரன் மேஜை மேல் இருந்த காப்பிக் கோப்பையை எடுத்துக் கொண்டான். ஹனிமேனுக்கு அருகே இருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். காப்பிக் கோப்பையைத் தன் உதட்டில் பொருத்தப்போனவன், அதை விலக்கி, ''மைக்ரோஃபிலிம் பழுதடையவில்லையே? அது பயன்பட்டதா? அதில் குறிப்பிட்ட அனைவரையும் கைது செய்து விட்டனரா?'' என்று கேட்டான்.

விடிந்ததும் விடியாததுமாக ஹனிமேன் கமிஷனருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு செய்திகளை அறிந்திருந்தான். அதனால், ''சேரா! ஃபிலிம் பழுதாகவில்லை. மிகவும் பயன்பட்டது. பெயர்ப்பட்டியலில் உள்ளவரில் ஒருவனைத் தவிர மற்ற அனைவரையும் கைது செய்து விட்டதாகக் கமிஷனர் தெரிவித்தார். நாம் அவரைச் சந்திக்கச் செல்லும் போது அந்த ஒருவனும் கைதாகியிருப்பான். நீ கவலைப்படாமல் காப்பியைக் குடி'' என்றான்.

சேரன் காப்பியைக் குடிக்க



முயன்ற போது காலண்டர் கண்ணில் பட்டது. அது நவம்பர், 14 என்பதைப் பெரிய எழுத்துக்களில் காட்டியது. உடனே அவன் முகம் குவிந்ததை ஹனிமேன் கவனித்தான்.

நவம்பர் 14.

பாரதத்தின் முதல் பிரதமர் நேருவின் பிறந்த நாள். சின்னஞ்சிறுவரிடம் பேரன்பு கொண்ட நேரு மாமா, தம் பிறந்த நாளை, குழந்தைகள் நாளாகக் கொண்டாடக் கோரினர். இந்தியா முழுவதும் அந்த நாள் குழந்தைகள் நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. குழந்தைகளின் மாபெரும் திருநாளாக மாறிவிட்ட ஒரு நாள், நவம்பர் 14! அன்று குழந்தைகள் ஆடிப் பாடுவார்கள்! ஆனந்தமாக இருப்பார்கள்! சுவையான தின்பண்டமும் கிடைக்கும். அதனால் நவம்பர் 14, என்பதைக் கேட்டால் அழுத பிள்ளை சிரிக்க வேண்டும்! சோம்பிக் கிடப்பவரும் துள்ளிக் குதிக்க வேண்டும்! அந்தக் குதூகல நாளைக் கொலைக்காகத் தேர்ந்தெடுத்த கொடியவர்கள், இரக்கமற்ற அரக்கர்கள்! பாசமற்ற பாதகர்கள்! இதோ, நவம்பர் 14 என்பதைப் பார்த்து மலர வேண்டிய சேரனின் முகம் குவிந்து விட்டதே...!

ஹனிமேன் தன் சிந்தனையை நிறுத்தினன். ''சேரா! கவலைப்படாதே! உன்னுடைய தேச பக்தி இன்றைய நாளைக் குழந்தைகள் நாளாகவே வைத்திருக்கும். கொலை நாள் ஆக்காது! காப்பியைக் குடி!'' என்று கூறினன்.

சேரனின் நா காப்பியைச் சுவைத்தாலும் மனம் மட்டும் தேனீ கூறியதையே நினைத்தது!

''வரும் நவம்பர் பதினலாம் தேதி சென்னையில் ஒரு அரசியல்வாதியைக் கொலை செய்யத் திட்டமிட்டிருக்கிறூர்கள்.''

''முருகா! கொலை நடக்காமல் தடை செய்! தேனீயின் உயிர்த் தியாகம் பயனுடையதாக இருக்கட்டும்! குழந்தைகள் நாள், குழந்தைகள் நாளாகவே திகழட்டும்!''





அங்கும் செல்வேன்

முதன் முதலில் மனிதன் நிலவில் இறங்கிய போது, உலகம் முழுவதும் பரபரப்பு ஏற்பட்டது. அப்போது ஒரு பெண்மணி, அன்னை தெரசா விடம், "நீங்கள் நிலவுக்குப் போக விரும்புகிறீர்களா?" என்று கேட்டாள்.

"ஏழை மக்கள் அங்கு இருப்பார்களேயானால், அங்கும் நான் அவசியம் செல்வேன்" என்றார் அன்னை தெரசா.

—நெ. அன்புசெழியன் (1727), பண்ணுருட்டி.

சேரன் மனத்துக்குள்ளேயே வேண்டிக் கொண்டான்.

****

சரியாகப் பத்து மணிக்கு ஹனிமேனும் சேரனும் டாலருடன் கமிஷனர் அறைக்குள்ளே நுழைந்தனர். கமிஷனர் இருவரையும் வரவேற்றார். ஹனிமேனும் சேரனும் கமிஷனர் எதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்தனர். டாலர் அடக்க ஒடுக்கமாக, சேரனுக்கு அருகே உட்கார்ந்தது.

கமிஷனரின் ஆணையின்படி 'கூல் டிரிங்க்ஸ்' வந்தன. இருவரும் குடித்தனர்.

இதற்குச் சுமார் பத்து நிமிடம் ஆகியிருக்கும். அந்தப் பத்து நிமிடமும் கமிஷனரிடம் ஹனிமேனோ, சேரனோ எதுவும் பேச முடியாமல், அவர் தொடர்ந்து நான்கைந்து முறை தொலைபேசியில் பேசினார். மூன்று முறை, அலுவலர்கள் டெலக்ஸ் செய்திகளைக் கொண்டு வந்து அவரிடம் கொடுத்தனர்.

அப்போது துணைக் கமிஷனர் உள்ளே வந்தார். அவரிடம் தொலைபேசியைக் கவனித்துக் கொள்ளுமாறு கூறிவிட்டு, கமிஷனர் சேரனையும் ஹனிமேனையும் பார்த்தார்.

"சேரா! இந்தியக் குடியரசுக்கு எதிராக வெளிநாட்டார் செய்யும் சூழ்ச்சியில் ஈடுபட்ட மாபெரும் துரோகிகளின் கூட்டத்தைச் சுற்றி வளைக்கத் துணை செய்தது, துணை செய்து வருகிறது, நீ உயிரைப் பணயம் வைத்துக் கொண்டு வந்து கொடுத்த மைக்ரோ ஃபிலிம். அதிலிருந்த வெளி மாநிலப் பட்டியலை நேற்றிரவே சம்பந்தப்பட்ட மாநிலங்களின் காவல் துறைக்கு அனுப்பி விட்டோம். அப்பட்டியலில் குறிப்பிட்ட நபர்களைக் கைது செய்த செய்திகள் விடியற்காலையிலிருந்து தொலைபேசி மூலமும் டெலக்ஸ் மூலமும் வந்து கொண்டிருக்கின்றன. ஒரு சிலர் இப்போது சிக்காமல் தப்பினாலும், மிக விரைவில் அவர்களைக் கைது செய்துவிடலாம் என்ற நம்பிக்கை வந்துள்ளது."

கமிஷனர் சொன்னார்.

"அப்படியானால் ராத்திரி முழுவதும் நீங்கள் தூங்கலையா சார்?"

கமிஷனர் சிரித்தார்.

"நான், ஒரு மணி நேரமாவது தூங்கியிருப்பேன். துணைக் கமிஷனர் தான் ஒரு நிமிஷம் கூடத் தூங்கவில்லை."

கமிஷனரின் குரலில் பெருமிதம் தொனித்தது. துணைக் கமிஷனர் தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தாரே தவிர, கமிஷனர் பக்கம் திரும்பவே இல்லை.

"இங்கு இன்னும் ஒருவனைக் கைது செய்ய வேண்டும் என்றீர்களே! கைது செய்து விட்டீர்களா?"

ஹனிமேன் கேட்டான்.

"இல்லை."

இதைச் சொல்லும்போது கமிஷனரின் குரலில் கவலை தெரிந்தது..

"ஏன் கைது செய்யவில்லை? நீங்கள் கைது செய்யப்போவது தெரிந்து, அவன் தலைமறைவாகி விட்டானா?"

—இது சேரனின் கேள்வி.

"அப்படியும் இல்லை. இந்த ஆசாமியின் பெயர் ஆர். சேகர். இவன் மேற்கு அண்ணா நகரில் ஒரு வீட்டில் இருக்கிறான். அந்த வீடு பூட்டியிருக்கிறது. அங்கே விசாரித்ததில், அவன் ஆறு நாளுக்கு முன்பு வெளியூருக்குப் போவதாகச் சொல்லிவிட்டுப் போனானாம். திரும்பவில்லை. இரண்டு மணி நேரத்துக்கு முன்புதான் அந்த வீட்டின்

பூட்டை உடைத்து உள்ளே சென்று பார்த்தோம். நமக்குத் தேவையான எந்தத் தடயமோ, தகவலோ கிடைக்க வில்லை. அவன் வந்தால் கைது செய் வதற்காக ஆளை நிறுத்தியிருக்கிறோம்."

இதைச் சொல்லும் போதும் கமிஷ னரின் குரலில் அதே கவலை தொனித் தது.

"துரோகக் கும்பலில் ஒருவனைத் தவிர, மற்றவரைக் கைது செய்து விட் டார்கள். கிடைக்காத ஒருவனும், தனது வீட்டுக்கு வந்தவுடன் கைதாவான். அதனால் தேனீ குறிப்பிட்ட கொலை நடக்காது, இல்லீங்களா?"

சேரன் கேட்டான்.

கமிஷனர் உடனே பதில் சொல்ல வில்லை.

இப்போது துணைக் கமிஷனர் தொலைபேசியில் பேசி முடித்திருந் தார். அவர் பதில் சொன்னார்.

"சேரா! இன்று நடைபெறவிருக்கும் கொலைத் திட்டம் வெளிநாட்டின் தூண்டுதலினால் போடப்பட்டது. அத னால் இதில் ஈடுபட்டவர்கள் சர்வ தேச அரங்கத்தில் அரசியல் கொலை களை நிகழ்த்தும் திறமையானவர்க ளிடம் பயிற்சி பெற்றிருக்க வேண் டும். அத்தகைய பயிற்சி பெற்ற ஒரு வன், தான் செய்ய நினைப்பது முற்றி லும் வெற்றிகரமாக நடைபெறத் தகுந்த முன்னேற்பாட்டைச் செய்து கொள்வான். கொலைத் திட்டம் வெளிப்பட்டாலும், கொலையாளி சிக் காமல், திட்டமிட்டபடி கொலையைச் செய்தேதீர வேண்டும். அதனால் அவன் சில நாட்களுக்கு முன்னரே இருக்கும் வீட்டை விட்டு, இருக்கும் ஊரை விட்டு வெளியூருக்குப் போய் விடு வான். கொலை நடக்க வேண்டிய நேரத் தில் சரியாக வந்து விடுவான். இப் போது சேகர் என்பவன்தான் கொலை செய்யப் போகிறவன் என்றும், இவன் கொலை நடக்க வேண்டிய இடத்துக்கு கொலை நடக்க வேண்டிய நேரத்தில் சரியாய் வந்து சேர்ந்துவிடுவான் என் றும் நாங்கள் யூகிப்பதால், கவலைப்படு கிறோம்."

"யார் அந்த சேகர்! மிஸ்டர் கமி ஷனர்! அவன் இந்த நகரத்தில் எங்கே ஒளிந்திருந்தாலும் கண்டுபிடித்துக் கைது செய்யுங்கள்!" என்று கூறினான், ஹனிமேன்.

இப்போதும் துணைக் கமிஷனரே பேசினார்.

"சேகர் பற்றி எதையும் சொல்லக் கைது செய்யப்பட்டவர்கள் மறுக்கி றார்கள். சேகர் வீட்டின் அருகே இருப் பவர்களிடம் கேட்டால், சேகர், சில சமயம் தாடி வைத்திருப்பானும். சில சமயம் மொட்டை அடித்திருப்பானும். சில சமயம் மீசையோடும், சில சமயம் மீசை இல்லாமலும் இருப்பானும். சுமார் ஐந்தரை அடி உயரம், மாநிறம், சுமாரான உடல்வாகு — இவ்வளவு தான் தெரியும். இதைக் கொண்டே, சந்தேகத்துக்கு இடமான அனைவரை யும் விசாரணைக்காகக் கைது செய்து அழைத்து வரச் சொல்லியிருக்கிறோம். என்றாலும் கவலைப்படுகிறோம்."

துணைக் கமிஷனர் மட்டுமா? ஹனி மேன் கவலை அடைந்தான். சேரன் கவலை அடைந்தான்.

தேனீயின் உயிர்த் தியாகம், சேர னின் வீரப் பயணம் — எல்லாம் வீண் தானா?

அங்கே சில நொடிகள் நிலவிய அமைதியைக் கமிஷனரின் குரல் கலைத் தது.

"சேரா! தேனீ உயிர் விடும் முன் உன்னிடம் ஏதோ சொல்ல முயன்ற தாகக் கூறினாய். அதை மீண்டும் சொல்!"

சேரன் கண்களை மூடிக் கொண் டான். அவன் காதுகளில் தேனீயின் கடைசிக் குரல் கேட்டது.

சேரன் இதை அப்படியே சொன் னான்.

"இதுதான் புதிராக இருக்கிறது! கொலையாகப் போகிறவர் யார் என் னும் கேள்விக்கு விடை, கு... கு... ம... ம...! இந்தப் புதிர் விடுவிக்கப்பட் டால், கொலையாகப் போகிறவர் யார் என்பது தெரியும். உடனே அவருக்குத் தகுந்த பாதுகாப்புக் கொடுக்க லாம்" என்றார் கமிஷனர்.

"கு... கு..." என்பது குடியரசுத் தலைவரைக் குறிக்கலாமோ?" என்று கேட்டான், சேரன்.

"நாங்களும் அப்படி நினைத்தோம். ஆனால் குடியரசுத் தலைவர் இன்று சென்னையில் இல்லை. தமிழ்நாட்டில் இல்லை. அவர் டெல்லியில் இருக் கிறார்."

''குடியரசுத் தலைவர் இல்லை என்றால், மந்திரியாக இருக்குமோ...? ம... ம... என்று தேனி சொல்லியிருப்பது மந்திரியைத்தான் குறிக்க வேண்டும்" என்றான், ஹனிமேன்.

''அதையும் நாங்கள் நினைத்துப் பார்த்தோம். ஆனால் துரதிர்ஷ்டத்தைப் பாருங்கள். இன்று காலை முதல் இரவு வரை நகரத்தில் நடக்கும் பல நிகழ்ச்சிகளில் மூன்று மத்திய மந்திரிகளும் ஐந்து மாநில மந்திரிகளும் கலந்து கொள்கிறார்கள். இவர்களில் தேனி குறிப்பிட்டது, யாரை?'' — இது துணைக் கமிஷனரின் கேள்வி.

''ம... ம... ம... ம...'' என்று முணுமுணுத்த கமிஷனர், திடீரென்று முகம் பிரகாசம் அடைய, ''ம... ம... என்பது மத்திய மந்திரியைக்குறிப்பதாகத்தான் இருக்க வேண்டும். அப்படி எடுத்துக் கொண்டாலும் இன்று மூன்று மத்திய மந்திரிகள் சென்னையில் இருக்கிறார்கள், இவர்களில் யார்?'' என்று கேட்டார்.

''ம... ம... என்பது மத்திய மந்திரியானால், கு... கு... என்பது என்ன?'' என்று கேட்டான், ஹனிமேன்.

''கு என்பது குழந்தைகள் நாளைக் குறிப்பதாகலாம். மீண்டும் நமக்கு அதிர்ஷ்டம் இல்லை. மத்திய மந்திரிகள் மூன்றுபேரும், மூன்று அமைப்புகளின் குழந்தைகள் நாளில் கலந்து கொள்கின்றனர். அதனால் எந்த மத்திய மந்திரியைத் தேனி குறிப்பிட்டார் என்பது தெரியவில்லை!''

துணைக் கமிஷனர் கூறியவுடனே, ஹனிமேன், ''மிஸ்டர் துணைக் கமிஷனர்! ம... ம... என்பதை மத்திய மந்திரி என்று இரண்டுசொற்களாகக்கொண்டீர்கள். கு... கு... என்பதில் ஒரு கு, குழந்தைகள் நாள் எனக் கொள்ளலாம். மற்றொரு கு என்ன?'' என்று கேட்டான்.

''தெரியவில்லை'' என்றார் துணைக் கமிஷனர்.

சேரன் திடீரென்று ஒரு கேள்வி கேட்டான்.

''குழந்தைகள் நாள் கொண்டாடும் அமைப்பில் குழந்தை எழுத்தாளர் சங்கம் இருக்குமே! அது ஆண்டுதோறும் குழந்தைகள் நாள் கொண்டாடும். கமிஷனர் ஸார்! குழந்தை எழுத்தாளர் சங்கம் குழந்தைகள் நாள் கொண்டாடுகிறதா?''

சேரன் சிறுவர் பத்திரிகைகளைத் தொடர்ந்து படிப்பவன். அதனால், அவன் இவ்வாறு கேட்டான்.

''குழந்தை எழுத்தாளர் சங்கம்..'' என்று கூறிய துணைக் கமிஷனர் சுவரில் இருந்த அறிவிப்புப் பலகையைப் பார்த்தார். அதில் அன்று நகரத்தில் நடக்கும் நிகழ்ச்சிகள், கால முறைப்படி இருந்தன. ''அஸோஸியேஷன் ஆஃப் ரைட்டர்ஸ் ஃபார் சில்ட்ரன்...'' என்று படித்தார்.

''ஆமாம் சார். அதுதான் குழந்தை எழுத்தாளர் சங்கம். அங்கே மத்திய மந்திரி கலந்து கொள்கிறாரா?'' — சேரன் கேட்டான்.

''ஆமாம்.''


''அப்படியானால் கு... கு... ம... ம... என்பது குழந்தை எழுத்தாளர் சங்கத்தில் நடக்கும் குழந்தைகள் நாள் விழாவில் கலந்து கொள்ளும் மத்திய மந்திரியைக் குறிக்கலாம்'' என்ற கமிஷனர், ''தேங்க்யூ சேரன்! சங்கத்தின் பெயர் ஆங்கிலத்தில் இருந்ததால் கவனிக்கத் தவறி விட்டோம்!'' இப்போதே குழந்தை எழுத்தாளர் சங்கத்தில் கலந்து கொள்ளும் மத்திய மந்திரிக்குப் போதுமான பாதுகாப்புத் தருகிறோம்'' என்றார், கமிஷனர்.

அப்போது, ''சார்! இட் இஸ் வெரி லேட்! இந்தச் சங்கத்தின் நிகழ்ச்சி காலை பதினொரு மணிக்குத் தொடங்குகிறது. இப்போது நேரம், பத்து ஐம்பது'' என்றார் கமிஷனர்.


''உடனே கவர்னர் மாளிகைக்குப் போன் செய்! அந்த மத்திய மந்திரி அங்கிருந்து புறப்பட வேண்டாம் என்றும் சொல்! கொலைத் திட்டம் என்பதையும் சொல்!''

கமிஷனர் ஆணையிட்டவுடனே துணைக் கமிஷனர் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். மத்திய மந்திரியுடன் பேச வேண்டும் என்று குறிப்பிட்டார். தொடர்ந்து ''வாட்! மத்திய மந்திரி குழந்தை எழுத்தாளர் சங்க நிகழ்ச்சிக்குப் புறப்பட்டுப் போய்விட்டாரா? ஓ... காட்!'' என்று கூறினர்.

(தொடரும்)


வத்ஸ நாட்டில் கௌசாம்பி
நகரில் ஆட்சி புரிந்தவன்
உதயணன். அவன்
மிருகங்களைக் கூடத் தன்
யாழ் ஒலியால் மயக்கும்
ஆற்றல் உடையவன்.
அவன் வரலாற்றைக் கூறும்
"பெருங்கதை"யை எழுதியவர்
கொங்குவேளிர் என்பவர்.
அந்தக் காப்பியம் கூறும்
கதையைச் சுருக்கமாய்க்
காண்போமா?
உதயணன் - வாசவதத்தை
கதை: ஆனந்தி
படம்: வினு
சதானிக மன்னனுடைய பட்டத்தரசி
மிருகாவதி நிலா முற்றத்தில் தோழிகளுடன்...
மிருகாவதி கருவுற்றிருந்தாள்...
தேவி! களைத்திருக்கிறீர்கள். இந்த மஞ்சத்தில் சயனியுங்கள்.
மிருகாவதி கண்ணயர தோழிகளும் தூங்கிவிட்டனர். அப்போது...


சரபப் பறவை மிருகாவதியைக் கட்டிலோடு தூக்கிச் சென்று...
... விபுல கிரி என்னும் மலையை அடைந்து சேடக முனிவரின் இருப்பிடத்துக்கருகே இறக்கியது.
சரபப் பறவை பறந்து சென்று விட்டது.... அரசி விழித்தெழுந்தாள்... திடுக்கிட்டாள்...
நான்... நான்... எங்கே இருக்கிறேன்...?
தெய்வமே! சோதனை வேதனையோடு அளவிட முடியாத சந்தோஷத்தையும் கொடுத்திருக்கிறாயே!
அப்போது அங்கு வந்தார் சேடக முனிவர்.
அம்மா! இந்தக் காட்டுக்கு எப்படி வந்து சேர்ந்தாய்?
எனக்கே தெரியவில்லை. மிகப் பெரிய பறவை ஒன்று பறந்து போனதை மட்டும் பார்த்தேன்!



சில தினங்கள் சென்று...
உதயகாலத்தில் பிறந்த உன்மகனை 'உதயணன்' என்று அழைப்போம். உலகம் புகழும் பேரரசனாக விளங்குவான்...
முனிவரின் ஆசிப்படியே அழகும் கலைஞானமும் கல்வி அறிவும் மிக்கவனாய் வளர்ந்தான் உதயணன். சேடக முனிவர் அரசகுமாரனுக்குரிய கலைகளையெல்லாம் கற்றுத் தந்தார்.
அதோ அந்த மாங்கனியின் காம்பை உன் அம்பு ஒரே முயற்சியில் துண்டிக்க வேண்டும்!
பிரமசுந்தர முனிவரின் மகன் யூகி. யூகியும் உதயணனும் ஆருயிர் நண்பர்களானார்கள். ஒன்றாகப் பயிற்சி பெற்றார்கள் — சேடக முனிவரிடம்.
பலே! பலே!
பிரம சுந்தர முனிவர் மிருகங்களின் மொழிகளைக் கற்றுத் தந்தார். மதயானையை அடக்கும் மந்திரத்தையும் கோடபதி என்ற யாழினை வாசிக்கும் கலையையும் போதித்தார்.
ஒருநாள் காட்டில் ஒரு தெய்வ யானையைக் கண்ட உதயணன் யாழ் வாசித்தான். யானை அந்த இசைக்குக் கட்டுப் பட்டது.
யானை மீது லாவகமாக ஏறிக் கொண்டு முனிவர்கள் இருப்பிடத்தை அடைந்தான் உதயணன்.



அன்றிரவு தூங்கும்போது உதயணன் கனவில் யானை...
என் மேல் பாகன் ஏறினாலும் எனக்கு முன்னால் நீ உணவு உண்டாலும் என்னைக் கயிற்றால் கட்டினாலும் நான் உன்னை விட்டுப் போய் விடுவேன்!
மறுநாள் காலை...
என் உயிரினும் மேலான நண்பனே! நீ கனவில் சொன்னதை மறக்கவே மாட்டேன்!
வைசாலி நகரில் விக்கிரன் ஆண்டு வந்தான். தன் தந்தையான சேடக முனிவரைக் காண கானகம் வந்தான்.
ஐயனே! எனக்கு ராஜ்ய பாரம் அலுத்து விட்டது. துறவறம் பூண விரும்புகிறேன். ஆனால் எனக்குப் பின் நாடாள சந்ததி இல்லையே...?
கவலைப்படாதே விக்கிரா. உதயணனை அனுப்புகிறேன், உனக்குப் பின் ராஜ்ய பாரம் ஏற்க.
ஆ! இந்த இளைஞனைக் காணும் போதே என் உள்ளத்தில் அன்பு சுரக்கிறதே!
சேடகர் தம் மகன் விக்கிரனுக்கு உதயணன் பற்றிக் கூறினார்.
விக்கிரா! உதயணன் உன் தங்கை மிருகாவதியின் புதல்வன். விதி வசத்தால் இங்கு வந்து என் மகள் இவனைப் பெற்றாள்.


அப்போது அங்கு வந்த பிரம்மதத்த முனிவர்...
இவன் என் மகன் யூகி. உதயணனின் இணைபிரியா நண்பன். இவனையும் அடைக்கலமாகக் கொடுக்கிறேன்.
யானை மீது ஏறிக்கொண்டு உதயணனும் அன்னை மிருகாவதியும் வைசாலி நகர் சென்றனர். விக்கிரனும் அவன் வீரர்களும் யூகியும் குதிரைகளில் பின் தொடர்ந்தனர்.
வைசாலியில் உதயணனுக்குக் கோலாகலமாக முடிசூட்டு விழா நடந்தது.
வாழ்க! வாழ்க!
ஜெய விஜயீபவ!
செய்தி கேட்டு கௌசாம்பி நகர் மன்னர், வைசாலி நகர் சென்றார். மனைவி மிருகாவதியையும் மகன் உதயணனையும் பார்த்து மகிழ்ந்தார்.
உதயணா! நீதான் இனி கௌசாம்பி நகருக்கும் அரசன்!


இரு நாடுகளையும் மூன்று மதி மந்திரிகள் உதவியுடன் ஆண்டான் உதயணன். அவன் புகழ் திக்கெட்டும் பரவியது. உதயணன் கௌசாம்பியில் இருக்க வைசாலியில் யூகி பிரதிநிதியாக விளங்கினான்.
தேவி! பேரழகியான நம் மகள் வாசவதத்தைக்குத்தந்த கணவன் எங்கு பிறந்திருக்கிறானோ!
கவலையாகத் தான் இருக்கிறது.
சில தினங்கள் சென்று மந்திராலோசனையின்போது...
அரசே! கௌசாம்பியிலிருந்தும் வைசாலியிலிருந்தும் சில ஆண்டுகளாகவே கப்பம் செலுத்தப்படவில்லை.
காரணம் என்ன அமைச்சரே!
மன்னன் உதயணன் பேரழகன், மாவீரன். தெய்வ யானை ஒன்று அவனுக்குத் துணையாக இருக்கிறதாம்
அமைச்சரே! அவனை எப்படியாவது சிறைப்பிடித்து வர வேண்டும்.
இதற்கிடையில் ஒரு நாள் அரண்மனையில் ஆடல் பாடல்களை ரசித்துக்கொண்டிருந்த உதயணன் யானைக்குக் கொடுத்த வாக்கை மறந்து...
ஆஹா என்ன ருசி...




யானைக் கொட்டிலிலிருந்து பட்டத்து யானை பிளிறிக் கொண்டு ஓடியது.
ஆ! என் தலைவர் எனக்கு முன்னதாக உணவருந்தி விட்டார்!
யானையைப் பிரிந்த உதயணன் மனம் நொந்து யாழும் கையுமாகக் காட்டில் தேடி அலைந்தான்.
இதை அறிந்த பிரச்சோதன சக்கரவர்த்தியின் மந்திரி...
உதயணனை சூழ்ச்சியால் தான் வெல்ல வேண்டும்! அவனுடைய தெய்வ யானை போலவே ஒரு யந்திர யானை உருவாக்குவேன்!
காட்டில் தெய்வ யானையைத் தேடிக்கொண்டிருந்த உதயணனிடம் வேடர்கள் சிலர் வந்து...
அரசே! நீலமேகம் போல் ஒரு பெரிய யானையைப் பார்த்தோம்!
எங்கே? எங்கே?
உதயணனை வேடர்கள் அழைத்துச் சென்று காட்ட...
அதோ!
ஆ! அது என் தெய்வ யானை போலவே இருக்கிறதே! யாழ் மீட்டுகிறேன்.
யாழிசைக்குக் கட்டுண்டது போல் நெருங்கி வந்தது யந்திர யானை.


திடீரென்று யானையின் அடிவயிற்றில் கதவு திறக்க ஆயுதம் தாங்கிய வீரர்கள் வெளியே குதித்து...
விடாதே பிடி!
ஆஹா! மோசம் போனேன்.
உதயணன் உருவியவாள் யந்திர யானையின் தந்தத்தில் பட்டு ஒடிய...
இழுத்துக் கட்டு! இறுக்கமாய் முடிச்சுப் போடு!
இதற்கிடையில் பிரச்சோதன சக்கரவர்த்தியின் ஒரு பெரிய சேனை வைசாலி மீது படையெடுக்க யூகி தீரத்துடன் போரிட்டான்.
யுத்தத்தினிடையில் அந்தப் பயங்கரச் செய்தியை ஒற்றன் கொண்டு வந்தான்.
மன்னர் உதயணனை யந்திர யானையைக் காட்டி ஏமாற்றி சிறைப் பிடித்து விட்டார்கள்!
யூகியின் சபதம்:
கள்ள யானையைக் காட்டி உதயணனை மயக்கிய பிரச்சோதன சக்கரவர்த்தியின் உஜ்ஜயினி நகரை யானை யாலேயே அழிப்பேன்!


யூகி எதிரிகளிடம் பிடிபடாமல் யுத்த களத்திலிருந்து தப்பினான். உதயணன் சிறை வைக்கப்பட்டிருக்கும் உஜ்ஜயினி நகரை மாறுவேடத்தில் அடைந்தான்.
நகரின் பல பகுதிகளில் யூகி அலைந்து சுற்றிவர, ஓரிடத்தில்....
ஆ! குழல் ஒலி! இது உதயணனின் இசைதான்! அரசர் இங்குதான் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்!
ஒருநாள் இரவு... நளகிரி என்ற பட்டத்து யானைக்கு யூகி உன்மத்தம் தரும் தழைகளைத் தர...
நளகிரி வெறி பிடித்துக் கட்டுக்கடங்காமல் ஓடிற்று.
மன்னன் பிரச்சோதனனுக்குச் செய்தி எட்டியதும்
நளகிரிக்கு மதம் பிடித்து விட்டது! நகரையே அழித்து விடும் போலிருக்கிறது!



மந்திரியை மன்னன் யோசனை கேட்க.....
அரசே! உதயணன் ஒருவனே நளகிரியை அடக்க வல்லவன்.
உதயணனை வருவித்தனர். அவன் யாழிசை கேட்டு நளகிரி அடங்கியது.
நளகிரி மேல் ஏறிக்கொண்டு அரண்மனை நோக்கிச் சென்றான் உதயணன்.
உதயணன் வாழ்க!
மேன்மாடத்திலிருந்து உதயணனின் வீரத்தைக் கண்டு வியந்தாள் வாசவதத்தை. உதயணன் அரசகுமாரியின் அழகைக் கண்டு ஆச்சர்யப்பட்டான்.
மன்னர் பிரச்சசாதனர் உதயணனை அரண்மனைக்குள் வரவேற்றார்.
உன் வீரத்தைப் பாராட்டுகிறேன். உனக்கு நாங்கள் இழைத்த குற்றத்தைப் பொறுக்க வேண்டும்...


அழகிய தனி மாளிகையில் உதயணனை இருக்கச் செய்தார் சக்கரவர்த்தி.
வாசவதத்தைக்கு நீங்கள் தான் யாழ் வாசிக்கக் கற்றுத் தர வேண்டும்.
நல்ல நாளில் சுப வேளையில் திரை மறைவிலிருந்து வாசவதத்தைக்கு யாழ் பயிற்சி தொடங்கியது. இருவரும் மகிழ்ந்தனர்.
வாசவதத்தை அரங்கேறினாள்.
ஆஹா!
அற்புதம்.
பல தேச மன்னர்கள் வாசவதத்தையை மணந்து கொள்ளத் தூது அனுப்பினார்கள். உதயணன் ஏங்கினான்.
எனக்கு சக்கரவர்த்தி பிரச்சோதனன் மரியாதை காட்டிய போதிலும் என்னை மன்னனாக மதிக்கத் தயாராயில்லையே...
சில தினங்கள் சென்று... உ நாட்கள் நடக்கும் நீர் விழா வந்தது. உஜ்ஜயினி நகர மாந்தர் நதிக்கரையில் தெய்வம் தொழுதார்கள்.
பீச்சாங் குழலால் நீர் அடித்து விளையாடினார்கள்.


உதயணனை
அழைத்து வர
ஆள் அனுப்பினார்
பிரச்சோதனர்.
பத்திராவதி என்ற
இந்த யானை மீதேறி
நீங்கள் நீர் விழாவுக்கு
வரவேண்டும் என்பது
மன்னர் விருப்பம்.
நதிக்கரையில் நகரமக்கள்
நீர் விளையாட்டில் ஈடு
பட்டிருந்த போது யூகி
மாறுவேடத்தில் தன்னுடன்
வந்திருந்த தன் படை வீரர்
களிடம்...
ஓசைப்படுத்தாமல்
நகரில் ஆங்காங்கே
தீ வைத்து
விடுங்கள்!
உஜ்ஜயினி பற்றி எரியவும்
மக்கள் பதறினர்...
ஐயோ! என் வீடு
எரிகிறதே!
ஐயோ! என் சொத்தெல்
லாம் போச்சே!
மன்னர் பிரச்சோதனர் மனம்
கலங்கி...
அடேய்! யாரங்கே!
வாசவதத்தையைக்
காப்பாற்ற வேண்டும்
என்று நான் கேட்டுக்
கொண்டதாக உதயணனிடம்
சொல்லு! நான் மக்களுக்கு
உதவப் போகிறேன்.
மன்னரின் கருத்தறிந்த உதயணன்
உடனே பத்திராவதி மீதமர்ந்து
வாசவதத்தை இருக்குமிடம்
சேர்ந்தான்.
இளவரசி
அஞ்ச
வேண்டாம்!



நகரம் பற்றி எரிகிறது. தங்களைக் காப்பாற்ற தங்கள் தந்தையார் சொற்படி வந்தேன்.
தோழி காஞ்சன மாலையுடன் யானை மீதேறினள் வாசவதத்தை.
உங்களை என் நாட்டுக்கு அழைத்துப் போகிறேன். பயப்படாமல் வருவீர்களா?
வருகிறேன்.
யானையிடம் பேசினான் உதயணன்
பத்ராவதி! நீ விரைந்து சென்று எங்களைப் பிடி படாமல் காப்பாற்ற வேண்டும்!
இதற்கிடையில் பிரச்சோதனர் தாம் ஏமாந்துவிட்டதை உணர்ந்தார்.
அரசே! உதயணன் இளவரசியைக் காப்பாற்றியது மட்டு மல்ல... யானை மீது ஏற்றிக் கொண்டு நகரைவிட்டே போய்விட்டார்!
ஆ! படை கிளம்பட்டும்! அவனைத் தொடர்ந்து சென்று பிடித்தே ஆக வேண்டும்!



யூகியுடன் மாறு
வேடத்தில் வந்திருந்த
படையினர், உதயணனைப்
பின்தொடரப்புறப்பட்ட
பிரச்சோதனன் படையைப்
போரிட்டுத் தாமதப் படுத்
தினர்கள்.
இருள் கவியும் நேரம். காட்டு வழியே செல்லும்போது வாசவதத்தை
நடுங்க, தோழி காஞ்சனமாலை ஆறுதல் கூறினாள்.
பயப்படாதே! உன் மனம் கவர்ந்த அரசிளங்குமாரர் தானே உன்னை அழைத்துப் போகிறார்.
வெகு தூரம் சென்ற பின்...
பத்ராவதி களைத்து விட்டது. நாம் இறங்கி விடுவோம்.
அவர்கள் இறங்கவே காத்திருந்தது
போல் பத்ராவதி சாய்ந்து விழுந்தது...
இறந்து போனது...
பத்ராவதி கடமை வீரனாக மடிந்தாய்! உன் பெருமை காலம் கடந்து நிற்கும்!



காட்டு வழி நடந்த மூவரும் களைத்துப் போயினர்.
நீங்களிருவரும் இளைப்பாறுங்கள். நான் காவலிருக் கிறேன்.
உதயணன் தன் அமைச்சனை வயந்தகனுக்கு ஏற்கனவே செய்தி அனுப்பியிருந்தான்.
வயந்தகன் இன்னும் படையுடன் வரவில்லையே, ஏன் தாமதம்?...
ஒரு கள்ளர் கூட்டம் உதயணனைச் சூழ்ந்தது... வீரத்துடன் போரிட்டு நாற்பத்தொன்பது பேரை வீழ்த்தினான் உதயணன்.
உதயணன் சோர்வுற்ற சமயம் வயந்தகன் சேனையோடு வந்து கள்ளர்களைப் பின் புறமிருந்து தாக்க...
ஓ! உதவி வந்து விட்டது!
தப்பி ஓடுங்கள்...!
கள்ளர்கள் சிதறி ஓடினர்.
வயந்தகா! சரியான சமயத்துக்கு வந்தாய்.
உதயண குமாரர் வாழ்க!
வாழ்க!


பயணம் தொடர்ந்தது... வயந்தகன் கோரிக்கை...
ஜயந்தி நகரின் அருகே பாடி வீடு அமைத்துள்ளோம். தங்கி இளைப்பாறுங்கள்.
படை வீரர் தங்கும் அப் பாசறையில் உதயணனும் வாசவதத்தையும் மகிழ்ச்சியோடிருந்தனர்.
ஒரு நல்ல நாளில் வாசவதத்தையை மணந்து கொண்டான் உதயணன்.
அருக தேவனை வணங்கிய பிறகு...
மக்களின் மகிழ்ச்சி ஆரவாரத்துக் கிடையே நகர் வலம் வந்தனர்.
வாழ்க!
வாழ்க!

சுட்டிக் காத்தான் - 6

எம். சோலைமன்

சென்ற இதழ் தொடர்ச்சி—

4 பக்கோடா! பக்கோடா!

ஆதிவாசிகளின் தலைவன் தானே நேரில் சிறைத் தோட்டத்திற்கு வந்து பார்த்தான். கிறிஞ்சிப் பூக்களைப் பார்த்து வியப்பால் மலைத்து நின்றான்.

ஆனாலும் காத்தானைப் பார்த்து, "அடே பொடியா! ஏதோ மந்திரம் செய்து பூக்களைப் பூக்க வைத்து விட்டாய்! எனவே உன்னை இப்போது நான் விடுவிக்கப் போவதில்லை. உனக்கு மூன்று சோதனைகள் வைக்கப் போகிறேன். அவை எல்லாவற்றிலும் வெற்றி பெற்றுப் பிழைத்து வந்தால் உனக்கு விடுதலை கிடைக்கும்! என் ஆட்கள் உன் நாட்டிற்கே படகில் கொண்டு போய் உன்னை விட்டு விடுவார்கள்! இல்லையேல், நீ இங்கேயே சாக வேண்டியதுதான்!" என்று கூறினான்.

காத்தானுக்குத்தான் இப்போது ஆதிவாசி மொழி தெரியுமே! எனவே தலைவனின் புதிய நிபந்தனைகளைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தான்.

"தலைவரே! முதல் சோதனை என்ன வென்று சொல்ல முடியுமா?" என்று பணிவுடன் காத்தான் கேட்டான்.

"முதல் சோதனையா? ஹூம்! மிகவும் எளிய சோதனை! எலிப் பள்ளத் தாக்கில் கொண்டு போய் உன்னைத் தள்ளி விடுவோம்! நீ அங்கிருந்து மீண்டு தப்பி வர வேண்டும்!" என்று கூறிவிட்டுப் போனான் தலைவன்.

அந்தத் தீவின் எலிகள் எல்லாம் சாதாரணமான எலிகள் அல்ல! மனிதனின் இரத்தத்தையே உறிஞ்சிக் குடிக்கக் கூடியவை அவை! எனவேதான் அப்படிப்பட்ட எலிகள் ஆயிரத்தை ஒரு பள்ளத்தில் வளர்த்து வந்தனர். குற்றவாளியை அப்பள்ளத்தில் தள்ளி விடுவது வழக்கம். உடனே அவனைச் சூழ்ந்து எலிகள், உடலைக் கடித்து, இரத்தத்தை எல்லாம் உறிஞ்சி விடும். குற்றவாளி தப்ப இயலாது! அப்பள்ளத்தில் வீழ்ந்தவன் அவ்வெலிகளிடமிருந்து தப்பி ஏறி வந்ததாகச் சரித்திரமே கிடையாது!

அப்படியிருக்க, காத்தான் மட்டும் எப்படித் தப்பப் போகிறான்?

மறு நாள் விடிகாலை நேரம்!

ஆதிவாசிக் கும்பல் டமாரம் ஒலிக்கச் சிறைத் தோட்டத்திற்கு வந்தது. உடன் காத்தானுக்கு அது கிறிஞ்சி மாலைகளை அணிவித்தது. பிறகு அக் கும்பல் அவனை அழைத்துக் கொண்டு எலிப் பள்ளத்தாக்கிற்குப் போயிற்று.



. பள்ளத்தாக்கின் மேலேயிருநது கீழே பார்த்தபோது எண்ணற்ற எலிகள் அங்குமிங்கும் ஓடுவது தெரிந்தது! ஆதிவாசிகள் இருவர் மேலேயிருந்து நூலேணி ஒன்றைக் கீழே இறக்கினர்கள்.

பிறகு டமாரத்தை உரக்கத் தட்டினார்கள். ஆதிவாசிப் பெண்கள் வேறு குரவையிட்டது காத்தானுக்கு அச்சத்தை அதிகப்படுத்தியது.

காத்தான் மெல்ல நூலேணியில் இறங்கினன். அவன் பாதி தூரம் இறங்குவதற்குள் சில எலிகள் நூலேணி மூலம் மேலேறி வந்தன! ஏதோ பாதி வழியிலேயே விருந்தாளியை வரவேற்க வந்தது போல் இருந்தது அக்காட்சி!

காத்தானின் தோளில் அவன் பை இப்போதும் தொங்கிக் கொண்டிருந்தது. மெல்ல அவன் டார்ச் விளக்கு போன்ற கருவியை வெளியே எடுத்தான். அதற்குள் அவன் காலை ஓர் எலி கவ்விக் கடித்தது! அவன் காலை உதறினன். 'கரகர' வென்று இரத்தம் வடிய ஆரம்பித்தது! முக்கால் வழியிலேயே இப்படி என்றல் முழுவதும் கீழே இறங்கினல் என்ன ஆவது?

காத்தான் சற்றுத் தயங்கினன்.

ஆனல் மேலேயிருந்தவர்கள், ''பக்கோடா! பக்கோடா! பக்கோடா!'' என்று ஆவேசமாக உரக்கக் கத்தினர்கள்.

அப்படியென்றல் ''இறங்கடா! இறங்கடா!'' என்று அர்த்தம்!

* * * * *

5D நொண்டு!

காத்தான் டார்ச் லைட் போன்ற கருவியின் பட்டனைத் தட்டினன். பிறகு அதைக் கீழ் நோக்கிப் பிடித்தபடி இறங்கினன். அக்கருவியிலிருந்து கிளம்பிய மீ ஒலி அலைகள் என்ன செய்தன தெரியுமா? காத்தானின் இரத்தத்தைச் சுவைக்கத் துடித்த எலிகளைச் சுருண்டு சாக வைத்தன!

நூறு! இருநூறு! ஐந்நூறு! ஆயிரம்!

இரண்டே நிமிடங்களில் அத்தனை எலிகளும் செத்து ஒழிந்தன! எல்லாம் மீ ஒலி அலைகளின் மாயம்!

காத்தான் நூலேணியை விட்டுத் தரையில்—மன்னிக்கவும்—எலிகளின் மீது காலை வைத்த போது உயிரோடு ஒரெலி கூட இல்லை!

மேலேயிருந்து ஆதிவாசிகள் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எலிகள் எல்லாம் எப்படிச் செத்தன என்று அவர்களுக்குப் புரியவில்லை! அதற்கெல்லாம் காரணம் காத்தானின் கையிலிருந்த கருவி என்பதும் அவர்களுக்கு விளங்கவில்லை!

ஆனால் எல்லோரும் பேசிக் கொண்ட ஒரே விஷயம் இதுதான்:

"இந்தப் பொடிப் பயல் பெரிய மந்திரவாதியாக இருப்பான் போலிருக்கிறதே!"

நூலேணியின் வழியாக மீண்டும் காத்தான் மேலேறி வந்தான்.

அப்போது ஆதிவாசிகளின் தலைவன் கடுமையாகச் சொன்னான்:

"எலிகளிடமிருந்து தப்பி விட்டோம் என்று இறுமாப்பு அடையாதே! அடுத்தபடியாகப் புலிகள் இருக்கின்றன. ஒன்று இரண்டல்ல! எட்டுப் புலிகள்! அவற்றையும் நீ வென்று வர வேண்டும்!"

காத்தானுக்கு மிகவும் அச்சம் ஏற்பட்டது. புலிகளா? புலிகளை மீ ஒலிகளைக் கொண்டு கொல்ல முடியாதே! இருந்தாலும் இந்த அலைகளைக் கொண்டு அவற்றை நிலைகுலைய வைக்கலாம்!

மறுநாளும் அவனுக்குக் கிறிஞ்சி மாலைகளை அணிவித்துப் பெரிய திடலுக்குக் கொண்டு போனார்கள். வட்டமான திடலைச் சுற்றிலும் இருந்த மிக உயர்ந்த மேடைகளில் ஆதிவாசிகள் அமர்ந்து கொண்டார்கள்.

கீழே திடலின் நடுவே காத்தான் நிறுத்தப்பட்டான். அவனைச் சுற்றிலும் எட்டுத் திக்குகளில் எட்டுக் கூண்டுகள் இருந்தன: அவற்றில்தாம் புலிகள் அடைக்கப்பட்டிருந்தன. பல நாட்களாகப் பட்டினி போடப்பட்ட புலிகள் அவை!

கூண்டுகளின் கதவுகளைத் திறக்கக் கூடிய கயிறு இணைப்புக்களை உயர்ந்த மேடையிலிருந்த காவலர்கள் பிடித்திருந்தார்கள்.

ஆதிவாசிப் பெண்கள் பாட ஆரம்பித்தார்கள்.

"ஹெறக்கோட டொக்கோட ஹெறக்கோட
டொக்கோட ஹொக்கோட் டொக்கோட...."

அவர்கள் பாடி முடித்ததும் தலைவன் எழுந்து, "மொண்டு! கொண்டு! நொண்டு!" என்றான். (ஒன்று, இரண்டு, மூன்று!' என்று அர்த்தம்).

நொண்டு என்று தலைவன் முடித்தவுடன் மேலே மேடையில் நின்ற எட்டுக் காவலரும் கயிற்றைச் 'சரசர' வென்று இழுத்தார்கள்.


கீழே திடலில் இருந்த எட்டுப் புலிக் கூண்டுகளின் கதவுகள் திறக்கப்பட்டன!

பசியோடிருந்த எட்டுப் புலிகளும் துப்பாக்கி ரவைகளைப் போல் வெளியே பாய்ந்து வந்தன!

* * * * *

6ற கொக்கொரோ சோமாஸ்

புலிகள் எட்டும் எட்டுத் திக்குகளிலிருந்தும் பாய்ந்து வரக் கண்ட காத்தான் கடவுளை வேண்டிக் கொண்டான்.



முருகன் சொன்ன பதில்

உடல்நிலை நன்றாக இருந்தும் சோம்பேறியாக இருந்த ஒருவன் பன்னிரண்டு கைக் கடவுளாகிய முருகக் கடவுளின் முன் போய் நின்று, "கடவுளே, நான் ஏழை, நான் வாழப் பொருள் கொடு," என்றான். அதற்குக் கடவுள், "உழைப்பதற்கு இரண்டு கைகள் போதவில்லை என்று மேலும் பத்துக் கைகளைப் பெற்று நான் உழைக்கிறேன். நீ உன்னிடமுள்ள இரண்டு கைகளைக் கூட உபயோகிக்காமல் என்னிடம் வந்திருக்கிறாயே போய் உழை," என்று கூறினாராம்.

—ஆர். எஸ். சுப்பிரமணியன்



அதே வேளையில் தன் கையிலிருந்த 'டார்ச் லைட்' போன்ற கருவியின் பட்டனை அழுத்தினான். அக்கருவியைப் பிடித்தபடி சுழன்று சுழன்று வந்தான்!

அக்கருவியிலிருந்து வெளிப்பட்ட மீ ஒலி அலைகள் புலிகளைத் தாக்கி நிலைகுலைய வைத்தன! புலிகள் தங்கள் கட்டுப்பாட்டை இழந்து விட்டன.

மீ ஒலி அலைகளின் தாக்கத்தால் மயங்கிக் கீழே சாய்ந்தன அவை! எட்டுப் புலிகளும் காத்தானின் காலடியில் வந்து சாய்ந்து கிடந்தன! உயிர் இருந்தும் மதி மயங்கிக்கிடந்தன அவை!

ஆதிவாசிகளின் தலைவனுக்கு ஏமாற்றம்! ஆனாலும் ஆதிவாசிப் பெண்கள் குரவையிட்டுக் காத்தானை வாழ்த்தினர்.

இதற்கிடையில் ஆதிவாசிகளின் கும்பலில் புத்திசாலி ஒருவனும் இருந்தான். அவன் மெல்லத் தலைவனை அணுகி அவன் காதில் ஏதோ ஓதினான். அவ்வளவுதான்!

காத்தான் வெற்றிப் பெருமிதத்துடன் தலைவனின் முன்னால் வந்து நின்றபோது ஏளனச் சிரிப்பு ஒன்றை உதிர்த்தான் தலைவன்!

''அடே பொடியா! அந்த மந்திரக் கோலை என்னிடம் கொடு! அதனால் அல்லவோ நீ இத்தனை தடவைகளும் தப்பி வந்தாய்!'' என்று உறுமினான் அவன்.

காத்தானுக்கு மிகுந்த வருத்தம் ஏற்பட்டது. ஆனாலும் தலைவனின் கட்டளையை மீற முடியுமா?

'மந்திரக் கோலை' வாங்கிய தலைவன், ''இதைக் கொண்டு போய் நடுக் கடலில் வீசி விடுங்கள்!'' என்று தன் வீரர் இருவரிடம் கட்டளையிட்டான்

பிறகு அவன் காத்தானைப் பார்த்து ''அடே, பொடியா, இதோ, கடைசிச் சோதனையைக் கேள்! இப்போது உன் கண்களில் குருட்டுத் தைலத்தை ஊற்றுவோம். ஒருமணி நேரத்திற்கு நீ பார்வை இழந்தவனாக மாறிவிடுவாய்! அந்த நிலையில் உன்னை 'அரோகரா' மரங்களுக்கு இடையில் கொண்டு விடுவோம். அங்கே பறையொலிக்குத்

தக்கவாறு நடனமாடியபடி நீ 'அரோகரா' மரங்களினூடே புகுந்து வர வேண்டும்!'' என்றான்.

''எளிய சோதனைதானே!'' என்றான் காத்தான்.

''ஆமாம்! ஆனால் ஒன்று! தப்பித் தவறி 'அரோகரா' மரத்தை உன் உடலின் எப்பகுதியாவது தொட்டால் போதும். அவ்வளவுதான்! மரம் உன் உடலைச் சேர்த்திழுத்து இரத்தத்தை உறிஞ்சிவிடும்! கொஞ்சம் கவனமாக மரங்களினூடே புகுந்து புகுந்து வர வேண்டும்! ஒரு மணி நேரத்திற்குப் பிறகும்நீஉயிரோடிருந்தால்'தெளிவுத் தைலத்தை' உன் கண்களில் ஊற்றிப் பார்வையை மீண்டும் வர வைப்போம்! அப்புறம்...'' என்று இழுத்தான் தலைவன்.

''அப்புறமாவது என்னை என் நாட்டில் கொண்டு போய் விடுவீர்களா?' என்று கேட்டான் காத்தான்.

''ஹூம்! அவ்வளவு எளிதில் விட்டு விடுவோமா? என் மகள் ஜீஹூஜூஹூவின் மீது சாமி வந்து முடிவு சொல்ல வேண்டும்! உன்னைப் பலி கொடுத்து விருந்து படைக்கலாமா, அல்லது விடுதலை செய்யலாமா என்பதை அவள்தான் முடிவுசெய்யவேண்டும்!'' என்று தலைவன் கூறியதைக் கேட்டதும் காத்தானுக்குப் 'பக்' கென்றது.

'அரோகரா' மரங்கள் அடர்ந்த தோப்பு அது! காத்தானின் கண்களில் குருட்டுத் தைலம் ஊற்றப்பட்டது! அவனுக்குப் பார்வை இப்போது முழுக்கமுழுக்கத்தெரியவில்லை! ஆனாலும் அவனுக்குத் தன் மூக்குக் கண்ணாடி உதவும் என்ற தைரியத்தில் அசையாமல் நின்றான்.

அது ஒரு சிறப்பான கருவி. மூக்குக் கண்ணாடியுடன் இயர்ஃபோனும் இணைந்த கருவி. அக்கருவியை அணிந்து கொண்டால் தடைகளை எளிதில் அறியலாம். தடைகளை மிக நெருங்கிப் போகும் போது ''பீப்... பீப்...'' என்னும் ஒலி உச்ச ஸ்தாயியில் ஒலிக்கும். எனவே நாம் பாதை விலகிச் செல்ல வேண்டும். இக்கருவியை மேல் நாடுகளில் பார்வை இழந்தவர்கள் பயன்படுத்துகிறார்கள்.

இப்போதுதான் காத்தான் தற்காலிகமாகப் பார்வையை இழந்து விட்டானே! தோள் பையிலிருந்து மூக்குக் கண்ணாடியை எடுத்து அவன் அணிந்து கொண்டான். அத்துடன் இணைந்திருந்த இயர்ஃபோனையும்காதுகளில் செருகிக் கொண்டான்.

பறை ஒலி தாள லயத்துடன் ஒலிக்க ஆரம்பித்தது. காத்தான் மனம்போன போக்கில் கைகளையும் கால்களையும் உதறிக் கொண்டு முன்னேறினான். 'பீப்' ஒலி உரக்கக் கேட்கும் போது திசையை மாற்றிக் கொண்டு நடந்தான்.

இப்படியாக ஒரு மணி நேரமும் நடனமாடியபடி மரங்களினூடே வெற்றிகரமாக உலவி விட்டான் அவன்.

இறுதியில் பெண்களின் குரவையொலிக்கு நடுவில் 'தெளிவுத்தைலம்' அவன் கண்களில் ஊற்றப்பட்டது!

காத்தானுக்கு மீண்டும் பார்வை வந்தது! ஆனாலும் அவன் உள்ளத்தில் அச்சம்! அவனை நரபலியிட்டு எல்லோரும் உண்டு விடுவார்களோ? தலைவனின் மகள் என்ன முடிவு சொல்லப் போகிறாளோ?

இதற்கிடையில் கன்னங்கரேல் என்ற நிறத்துடன் ஒரு சித்திரக் குள்ளி அங்கு கிறிஞ்சி மாலைகள் அணிந்து

ஏன் கூடாது?

தேனீ—1: அந்தப் பூப் பக்கம் போகாதே.
தேனீ—2: ஏன் போகக் கூடாது?
தேனீ—1: அது காலி பிளவர். அது காலியாத்தான் இருக்கும். தேன் இருக்காது.

—தஞ்சை. சிவ. கனகசபை.



கொண்டு வந்து நின்றாள். உயரமாகத் தான் அவள் வளரவில்லையே தவிரப் பக்கவாட்டில்நன்குவளர்ந்திருந்தாள்! அவள்தான் ஜூஹூ ஜூஹூ!

பறையொலிக்க ஆரம்பித்தது. குள்ளி நடனமாட ஆரம்பித்தாள். அவனைப் பார்த்துக் கொண்டே நடனமாடினாள் அவள். அப்போது அவள் வாயிலிருந்து உமிழ் நீர் சுரந்து வழிந்தது! ஹல்வாவைப் பார்த்த சிறுவனின் நிலையிலும், அதிரசத்தைப் பார்த்த சிறுவனின் நிலையிலும் அவள் இருந்தாள்.

அப்படியானால்?

தான் தப்புவது சிரமம் எனக் காத்தான் உணர்ந்து கொண்டான். அப்போது பளீரென்று அவன் உள்ளத்தில் ஏதோ பளிச்சிட்டது. தன் தோள் பையைத் திறந்து பார்த்தான்.

அடடே! இன்னும் நான்கு 'சோமாஸ்கள்' பையில் கிடக்கின்றனவே!

அவனும் நடனமாடியபடி மெல்லக் குள்ளியின் கையில் ஒரு சோமாஸைத் திணித்தான்! வாங்கி அதைக் கடித்துப் பார்த்தாள் குள்ளி ஜூஹூ ஜூஹூ.

"டொக்கோ! டொக்கோ!" என்றபடி மறுகையை நீட்டினாள். (பேஷ்! பேஷ்!)

இன்னொரு சோமாஸை மறு கையில் திணித்தான்.

தலையைப் பெரிதாக ஆட்டினாள் குள்ளி!

"இவனை விடுதலை செய்யுங்கள்!" என்று கத்தி விட்டுக் கீழே சாய்ந்தாள். சாய்ந்து கொண்டே சோமாஸை மென்று கொண்டிருந்தாள்!

"விடுதலை செய்வதா!" என்று தலைவன் ஆச்சரியப்பட்டான். அவர்கள் வரலாற்றில் யாரையும் விடுதலை செய்ததே கிடையாது!



காத்தான் மெல்ல நகர்ந்து சென்று தலைவனிடமும் இரண்டு சோமாஸ்களைத் திணித்தான்.

சோமாஸ்களைச் சுவைத்த தலைவன், "விடுதலை! விடுதலை! விடுதலை!" என்று கூவினான்.

"என்னை எங்கள் நாட்டில் கொண்டு விட்டால், ஒருபடகுநிறைய சோமாஸ்களை அனுப்பி வைப்பேன்!" என்றான் காத்தான்.

"அப்படியே ஆகட்டும் இவனைப் படகில் ஏற்றி நடுக்கடலுக்குக் கொண்டு போங்கள்! ஏதாவது ஒரு பெரிய 'கொக்கொரோ'வில் (கப்பலில்) தலையிலிருந்து கால் வரை உடை உடுத்திக் கொண்டு நாகரிகமில்லாத மனிதர்கள் போவார்கள்! அவர்களிடம் இவனை ஒப்படைத்துவிட்டுவாருங்கள்!" என்றுதன் ஆட்களிடம்கட்டளையிட்டான் தலைவன்.

காத்தானுக்கு மிக்க மகிழ்ச்சி. அது எந்த நாட்டுக் கப்பலாக இருந்தாலும் தனக்குத் தெரிந்த அரைகுறை ஆங்கிலத்தில் பேசித் தாய்நாடு திரும்பி விடலாமே!

"ஆனால் ஒன்று! கட்டாயம் எங்களுக்குநீ ஒரு 'கொக்கொரோ' நிறைய சோமாஸ்களை அனுப்ப வேண்டும்!" என்று காத்தானைப் பார்த்துக் கடுமையாகச் சொன்னான் தலைவன்.

"அக்காரோ, ஹூவோ! ஆண்டி பரமாண்டி! என்று பதிலளித்தான் காத்தான். (அப்படியே செய்வேன் மகாராஜா அவர்களே!)

தொடர்ந்து காத்தான் மகிழ்ச்சிப் பெருக்கில், "கொக்கொரோ சோமாஸ்! கொக்கொரோ சோமாஸ்" என்று(கப்பல்நிறையசோமாஸ்என்று பொருள்) கத்தினான்.

"கொக்கொரோசோமாஸ்!கொக்கொரோ சோமாஸ்!" என்று கத்தியவாறு எழுந்து ஆடினான் தலைவன்!


"கொக்கொரோசோமாஸ்!கொக்கொரோ சோமாஸ்!" என்று கீச்சுக் குரலில் கத்தினாள் ஜூஹூ ஜூஹூ!

"கொக்கொரோசோமாஸ்!கொக்கொரோ சோமாஸ்!" என்று அங்கிருந்தவர் எல்லோரும் கூக்குரலிட்டவாறே குதித்து ஆடினார்கள்!

* * * * *

சித்திரப்புதிர்! 7

ஆழி




1 இது எந்தப் பிராணியின் எலும்புக்கூடு?

இந்தச் சிறுமி தனது நாட்டின் தேசிய உடையில் இருக்கிறாள். எந்த நாட்டுச் சிறுமி இவள்? **2**


அ. ஆஸ்திரேலியா
ஆ. ஜப்பான்
இ. சுவிட்சர் லாந்து.




3 எந்தெந்த பறவைகளின் கால்கள் இங்கே இருக்கின்றன?



எந்த இரண்டு அம்புகள் ஒரே மாதிரியானவை? **4**



5 இந்தச் சிங்கத்தின் படம் சரியாகப் பூர்த்தி செய்யப்படவில்லை. பென்சிலை வைத்துக் கொண்டு பூர்த்தி செய்யுங்கள், பார்ப்போம்!



விடை: வேறுபக்கம்



* சாப்பாடு தயார் — நாடகம்

திண்டுக்கல்லில்

உள்ளம் விரிவடையக் கள்ளமில்லாச் சிரிப்புத் தேவை. வளரும் குழந்தைகளை மகிழ்ச்சியோடு இருக்கச் செய்தால் மகத்தான சாதனைகளை நிகழ்த்திவிடலாம்! திருச்சி வானொலி நிலையத்தார் இதை மனத்தில் எண்ணி சிறப்பானதோர் நிகழ்ச்சியை திண்டுக்கல்லில் ரசிகர்கள் முன்னிலையில் நடத்திக் காட்டினார்கள்.

அந்நிகழ்ச்சி—

முழுக்க முழுக்க நகைச்சுவை அம்சங்கள் நிறைந்த ''நகைச்சுவை அரங்கம்'' என்ற அற்புதமான — ஆனந்தமான நிகழ்ச்சி ஆகும்.

திண்டுக்கல் எம். எஸ். பி. சோலை நாடார் நினைவு மேல் நிலைப் பள்ளி கலை அரங்கில் 3.7.85 அன்று நடைபெற்ற இந்தப் புதுமை நிகழ்ச்சியில் முற்றிலும் குழந்தைகளே பங்கு கொண்டு சிறப்பித்தனர்.

திருச்சி வானொலி நிலையம் ரசிகர்கள் முன்னிலையில் பல பல்சுவை நிகழ்ச்சிகளை நடத்தியிருந்தாலும், நகைச்சுவைக்கென்றே தனி நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து ரசிகர்கள் முன்னிலையில் சுமார் இரண்டு மணி நேரம் நடத்தியது இதுவே முதன் முறை என்பது குறிப்பிடத்தக்கதாகும்!



* குழந்தைகள் கூட்டத்தின் ஒரு பகுதி



* நகைச்சுவை வில்லுப்பாட்டு

சிரிப்பு மழை!

தனது வரவேற்புரையில் திருச்சி வானொலி நிலைய இயக்குநர் திரு எஸ். வேணுகோபால்ரெட்டி இதை அழுத்தமாகக் குறிப்பிட்டார். அது மட்டுமல்ல. சென்னை வானொலி நிலைய அண்ணா திரு கூத்தபிரான், திருச்சி வானொலி அண்ணா திரு இளசை சுந்தரம் ஆக இந்த இரண்டு வானொலி அண்ணாக்களையும் ஒன்று சேர்த்து நடத்தும் இந்த நிகழ்ச்சி மேலும் போற்றுதற்குரியது என்றும் குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியின் தனித்தன்மை பற்றி திருச்சி வானொலி அண்ணா திரு இளசை எஸ். சுந்தரம் அவர்கள் சுருக்கமான ஆனால் சுவையான ஓர் அறிமுகம் கொடுத்தார்.

"மனிதன் கறுப்பாக இருக்கலாம், சிகப்பாக இருக்கலாம். குட்டையாக இருக்கலாம். நெட்டையாக இருக்கலாம். எப்படியிருந்தாலும் எல்லாருமே சிரிக்கும்போது அழகாக இருப்பார்கள். நீங்களெல்லாம் அழகாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறீர்கள் அல்லவா? அப்படியானால், எங்கே நன்றாகச் சிரியுங்கள், பார்க்கலாம்" என்று தமது தலைமை உரையில் குழந்தைக் கவிஞர் சொன்னாரோ இல்லையோ, கூடியிருந்த ஆயிரக்கணக்கான குழந்தைகளும் மனம் விட்டு, வாய் விட்டுச் சிரித்த காட்சியே மிக அழகாக இருந்தது.

திண்டுக்கல் பகுதியில் உள்ள ஏழு



* திருச்சி அகில இந்திய வானொலி இயக்குநர் வேணுகோபால்ரெட்டி வரவேற்றுப் பேசுகிறார்.

இரண்டு வானொலி அண்ணாக்கள்



இளசை எஸ். சுந்தரம்



கூத்தபிரான்

பள்ளிகளைச் சேர்ந்த சுமார் இருநூறு குழந்தைகள் இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்டு கூடியிருந்த ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட ரசிகப் பெருமக்களைச் சிரிப்பு வெள்ளத்தில் ஆழ்த்தினர்.

புனித மரியன்னை பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் பங்கு கொண்ட வேடிக்கை விடை—வினா எல்லோரையும் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தன. இந்தப்புதுமையான விடை—வினாவை திரு எஸ். பாஸ்கரன் நடத்தினார்.

அண்ணாமலையார் ஆலை மகளிர் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவிகள் வழங்கிய சிங்கன்—சிங்கி நவீன பரமார்த்த குரு—நகைச்சுவை வில்லுப்பாட்டு ஆகியவை அனைவரின் கண்களையும் கருத்தையும் கவர்ந்தன. அறிவூட்டும் கருத்துக்களை நகைச்சுவையில் குழைத்து, குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா சொன்ன கதையைக் குழந்தைகளும், பெரியவர்களும் வெகுவாக ரசித்தனர். டட்லி மேனிலைப் பள்ளி மாணவர்கள் ''சிலேடைச் சிதறல்'' என்ற நிகழ்ச்சியை நடத்தி சர வெடிகளாக நகைச்சுவை ததும்ப உதிர்த்தனர்.

பாடலோடு கூடிய பலகுரல் நிகழ்ச்சியை வழங்கி எம். எஸ். பி. சோலைநாடார் நினைவு மேல்நிலைப் பள்ளி புதிய சாதனை புரிந்தது. இந்தப் பலகுரல் நிகழ்ச்சியில் இருபது மாணவர்கள் கலந்து கொண்டு தங்கள் குரல் விநோதத்தைக் காட்டினார்கள். இதே பள்ளி மாணவர்கள் நடித்த ''சாப்பாடு தயார்'' என்ற நகைச்சுவை நாடகம் எல்லோரையும் வயிறு குலுங்கச் சிரிக்க வைத்தது. மா. கமலவேலன் இந்த நாடகத்தை எழுதியிருந்தார்.

திடீரென்று விண்வெளி மனிதன் அரங்கில் இறங்கி அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினான். அவனுடைய உடை அலங்காரம்.... அவன் பேசிய நூதன ஒலி கொண்ட மொழி.... அதற்குச் செய்யப்பட்ட நகைச்சுவை மொழி பெயர்ப்பு.... எல்லாமே ஏக அமர்க்களம்! இந்நிகழ்ச்சியை நேரு நினைவு நகராட்சி மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் வழங்கினார்கள்.

''தனி நடிப்பு'' என்ற நிகழ்ச்சியை புனித வளனார் மேல்நிலைப் பள்ளி மாணவியர் வழங்கினர். மோடி மஸ்தானாக மேடையில் தோன்றித் தனது அட்டகாசமான நடிப்பால் அனைவராலும் பாராட்டப்பட்டாள் அபிராம சுந்தரி என்ற மாணவி.

நகைச்சுவைத் துணுக்குகளை வாரி வழங்கினர் அரசினர் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள். திரு கூத்தபிரான் இந்நிகழ்ச்சியை நடத்தினார்.

''குழந்தைகள் மனத்தில் ஒன்று; வாக்கில் ஒன்றுமாகச் சொல்ல மாட்டார்கள். எனவே அவர்கள் ஹாஸ்யம் சிறப்பாக இருக்கும்'' என்று தமது வாழ்த்துரையில் திரு கூத்தபிரான் குறிப்பிட்டார்.

எம்.எஸ்.பி.சோலைநாடார் நினைவு மேல்நிலைப் பள்ளித் தாளாளர் எஸ். எம். பி. மாணிக்கம் நாடார், காந்தி கிராமத்தைச் சேர்ந்த டாக்டர் கௌசல்யா தேவி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இந்த அரிய நிகழ்ச்சியைப் பின்னணியில் இருந்து இயக்கி, மாணவ மாணவிகளை ஒன்று கூட்டி, திண்டுக்கல் மக்களை மகிழ்ச்சிக் கடலில் திளைக்கச் செய்த திருச்சி வானொலி அண்ணா திரு இளசை எஸ். சுந்தரம் அவர்களை எல்லாரும் ஒருமனதாகப் பாராட்டினார்கள்.

— மா. கமலவேலன்


பிருந்தாவனம்

தெர்மாஸ் பிளாஸ்க்

நாம் உபயோகிக்கும் தெர்மாஸ் பிளாஸ்க் 1892ல் சோதனைச் சாலைகளில் மட்டுமே உபயோகப்படுத்தப் பட்டது. ரெயின் ஹோல்டு பர்கர் என்ற ஜெர்மானியர் 1904ல் தெர்மாஸ் பிளாஸ்கை வீடுகளிலும் உபயோகிக்க வகை செய்தார். தெர்மாஸ் என்றால் கிரேக்கமொழியில் 'சூடான' என்று பொருள்.

— எஸ். மாதவன் (204),
திருச்சி—14.





உறைவிடங்கள்

உலகில் முக்கியமான சிலரின் உறைவிடங்கள்:

10 டவுனிங் தெரு — பிரிட்டிஷ் பிரதமரின் இருப்பிடம்.

வெள்ளை மாளிகை — அமெரிக்க ஜனாதிபதியின் மாளிகை

ராஷ்டிரபதிபவன் — இந்திய ஜனாதிபதி மாளிகை

வாட்டிகன் நகரம் — போப்பாண்டவர் அலுவலக இல்லம்.


— இரா. இராமசாமி (3026)
திருநெல்வேலி.

உணவுப் பொருள்களில் ஊர்கள்

நெல்லூர்
நெய்வேலி
துவரங்குறிச்சி
உளுந்தூர்ப்பேட்டை
புளியங்குடி
பறங்கிமலை
உப்பு வேலூர்
வாழைப் பாடி
மாங்காடு

— ஜெ. ரெங்கநாதன் (1796)
திருக்கோவிலூர்.





சில நாடுகளின் தேசியப் பறவைகள்

இந்தியா	— ஆண்மயில்
ஐக்கிய அமெரிக்கா	— கழுகு
ஜெர்மனி	— வெள்ளைக் கொக்கு
பர்மா	— பர்மிய மயில்
கனடா	— வாத்து
பிரிட்டன்	— ராபின்
தென் ஆப்பிரிக்கா	— நீலக்கொக்கு
ஹவாய்	— குள்ளவாத்து
டென்மார்க்	— வானம்பாடி

— ப. தினேஷ்குமார் (3312), சென்னை — 7.

காந்திஜி பெற்ற மதிப்பெண்கள்

1887 டிசம்பரில் காந்திஜி மெட்ரிகுலேஷன் பரீட்சை எழுதினர். அப்பரீட்சையில் அவர் பெற்ற மார்க்குகள் :

ஆங்கிலம்	89
சுதேச பாஷை	45½
கணக்கு	59
பொது அறிவு	54
400க்கு	247½

ஆதாரம்: காந்திஜியின் 'சத்திய சோதனை'

— ஏ. ஆர். சுந்தர் (340), சென்னை — 44.





மிகப் பெரிய பொய்

நான்கு நண்பர்கள் தங்களுக்குள் ஒரு போட்டி வைத்துக் கொண்டார்கள். யார் மிகப் பெரிய பொய் சொல்கிறுர்கள் என்பதுதான் போட்டி.

முதல் நண்பர்: முதலமைச்சர் எம். ஜி. ஆர். அமெரிக்காவில் இருந்த போது நான் இங்கிருந்தபடியே அவருடன் நேருக்கு நேராகப் பேசிக்கொண்டிருப்பேன்.

2—வது நபர்: பிரதமர் ராஜீவ் காந்தி எனக்கு மிக மிக வேண்டியவர்தான் ஆனுலும், எனக்கு இருக்கும் வேலையில் அவரை இதுவரை நான் சந்தித்துப் பேச நேரம் கிடைக்கவே இல்லை.

3—வது நபர்: கடவுள் என் எதிரில் வந்து "உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார். "எல்லாம் இருக்கிறது, எதுவும் வேண்டாம்" என்று கூறி அனுப்பிவிட்டேன்.

4—வது நபர்: நான் என் பையனை ஆங்கிலப் பள்ளியில் 6—வது வகுப்பில் ஒரு பைசா நன்கொடை கொடுக்காமல் சேர்த்துவிட்டேன்.

இவர்களில் வெற்றி பெற்றவர் 4வதாகப் பேசிய நண்பர்தான்!

—ப.விஜயகுமார் (241), சென்னை—10.



ஒரே இடத்தில் 9 ஸ்தல விருட்சங்கள்!

மதுரை மீனாட்சியம்மன் கோவிலின் கிழக் கோபுர வாசல் வழியாகச் சிறிது தூரம் சென்றதும், இடது பக்கமாக ஒரு வழி உள்ளது. அவ்வழியாகச் சென்றால், ஒரு பிள்ளையார் சன்னதி இருக்கும். எல்லாக் கோயிலிலும்தான் பிள்ளையார் சன்னதி இருக்குமே என்கிறீர்களா? உண்மைதான். ஆனால், இங்கு ஒரு விசேஷம்.

இந்தப்பிள்ளையாருக்குவன்னிமரத் தடிப் பிள்ளையார் என்று பெயர். ஒவ்வொரு கோயிலிலும் ஒரு ஸ்தல விருட்சம்தான் இருக்கும். அப்படிப்பட்ட ஸ்தல விருட்சங்களில் ஒன்பதை இந்த ஒரே இடத்தில் காணலாம். அந்த விருட்சங்களுக்கு எண்கள் கொடுத்திருப்பதோடு, சுவரிலும் எண்களுடன் பெயர்களைக் காணலாம்.

1. வன்னி; 2. நெல்லி;
3. அரசு; 4. வேம்பு;
5. வில்வம்; 6. கொன்னை
7. மந்தாரை; 8. அத்தி
9. பவளவல்லி.

— ஏ.எல். ராமு (3674), மதுரை.

மறைந்திருந்த எழுத்துக்கள்!

ராமுவுக்கு ஏப்ரல் முதல் தேதி ஒரு கடிதம் வந்தது. அதைப் பிரித்துப் பார்த்தவன் வியப்படைந்தான். காரணம், அக்கடிதத்தில் ஓர் எழுத்தைக் கூடக் காணோம்!


அப்போது பக்கத்திலிருந்த அவனுடைய அக்காள் அக்கடிதத்தை வாங்கி நன்றாகப் பார்த்துவிட்டு சிறிது குங்குமத்தை எடுத்து வந்தாள். அக்கடிதத்தில் தடவி ஊதிவிட்டாள். உடனே அக்கடிதத்தில் சிவப்பு நிற எழுத்துக்களில், ''ஏமாந்தியாடா ராமுப் பையா! ஏ. எஃப் — இப்படிக்கு நண்பன் சோமு" என்று இருந்தது.

''ராமு, மெழுகு வர்த்தியால் எழுதியபிறகுஅதில்குங்குமத்தைத்தேய்த்து ஊதிவிட வேண்டும். எழுத்துக்கள் நன்றாகத் தெரியும்'' என்று விளக்கினாள் அக்காள்.

''சரி,நானும்உடனே அந்தசோமுப் பயலுக்கு மெழுகு வர்த்தியால் எழுதி அனுப்புகிறேன்'' என்றான் ராமு.

— பி. குமரகுரு (7162), திருச்சி—1.





என் அன்புள்ள அம்மா

இங்கிலாந்திலுள்ள டெவான்ஷயர் என்ற இடத்திலுள்ள மாதா கோயில் மணிக் கூண்டுக் கடிகாரத்தில் எண்களுக்குப் பதிலாக என் அன்புள்ள அம்மா (My Dear Mother) என்று இருக்கிறது.

— ஏ. ஆர். ஆனந்த் (421),
கோட்டையூர்.

கோகுலம் சிறுவர் சங்க 10,001-வது உறுப்பினர்




சா. ரேவதி,
த/பெ. சாரங்கபாணி
59, கம்மாளத் தெரு,
ஒரத்தநாடு.



முக்தியார் ..

இந்தக் காலத்தில் ஆங்கிலம் தெரியாதவர்கள் வக்கீலாகத் தொழில் நடத்த முடியாது. ஆனால், சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலம் தெரியாதவர்களும் வக்கீலாக இருந்தார்கள். ஆங்கிலம் தெரியாதவர்கள் வக்கீலாக விரும்பினால், 'முக்தியார்' என்று ஒரு பரீட்சை நடத்துவரர்கள். அந்தப் பரீட்சையை எழுதித் தேர்ச்சி பெற்றுவிட்டால், அப்போதிருந்த சமஸ்தான நீதிமன்றங்களுக்குச் சென்று வக்கீலாக வாதாடலாம். சிறந்த தேசபக்தராகவும், சென்னை மேயராகவும் விளங்கிய எஸ். சத்தியமூர்த்தி அவர்களின் அப்பாவான சுந்தர சாஸ்திரி அப்படிப்பட்ட ஒரு வக்கீலாக இருந்தவர்தான்!

— ஏ. பழனியப்பன் (3035), சென்னை — 40.



குழந்தைகளைப் பற்றி....

* தானாகத்தடுக்கிவிழுந்தகுழந்தை அழுவதில்லை — கால்மிக்
* குழந்தைகளை இதயத்தால் நேசிக்கவும். ஆனால் கைகளால் பயிற்சி அளிக்கவும் — ரஷ்யா
* குழந்தைகளுக்கு முதற்பாடம் பணிவு — இங்கிலாந்து.

— ப. தேவேந்திரகுமார் (1418) சென்னை — 7.




எருமை வெளியனார்
கழாத் தலையார்
கழைதின் யானையார்
நரிவெரூஉத் தலையார்
வெண்ணிக் குயத்தியார்
வெள்ளி வீதியார்
நச்செள்ளையார்
ஆதி மந்தியார்

இவர்களெல்லாம் யார் என்று தெரிகிறதா? நம் தமிழகத்தில் வாழ்ந்த பெரும்புலவர்கள்தான்! இவர்களில் கடைசியிலுள்ள நால்வரும் பெண் புலவர்கள்!

— பழ. சாந்தி (5939), இராயவரம்.

ஜிம்மியின் உள்ளம்



அந்த வீட்டின் கலகலப்புக்கு, குழந்தை சுரேஷும் குட்டிநாய் ஜிம்மியும்தான் காரணமாக விளங்குபவர்கள். சேலத்திலுள்ள அரசாங்க அலுவலகமொன்றில்வேலை பார்த்து வரும் சதாசிவம், பாண்டியன் தெருவில், முதல்வரிசையில்மூன்றாவதாய் உள்ள வீட்டில் வசித்து வந்தார்.

சுரேஷுக்கு மற்ற உடன்பிறப்புக்கள் எவரும் இல்லாத காரணத்தால் ஜிம்மிதான் பெரும்பாலும் அவனது பொழுதுபோக்கு. ஜிம்மியும் அந்த வீட்டை வளைய வந்து அவ்வப்போது புது மனிதர்களின் வரவைத் தன் குரைப்பால் உணர்த்தியும், சுரேஷுடன் கொட்டமடித்தும் படிப்படியாகப் பெரிய நாயாக வளர்ந்தது.

ஜிம்மியை சுரேஷ் குளிப்பாட்டும் காட்சியை ஒரு "நீராட்டுப் படலம்" என்றே வர்ணிக்கலாம். அடடா... கையில் வாளியுடனும், சோப்புடனும் சுரேஷ் ஜிம்மியைத் துரத்து, துரத்து என்று துரத்திக் கட்டிப் போட்டுக் குளிப்பாட்டுவானே...! கண்கொள்ளாக் காட்சிதான் அது!

ஜிம்மியின் கழுத்திலுள்ள பெல்ட்டும், லைசென்ஸும், தான் ஒரு கண்ணியமான குடும்பத்தில் வளர்க்கப் படுவதைப் பறைசாற்றுவதாய் அமையும். அவ்வீட்டில்யாவரும்ஜிம்மியிடம் கொண்டிருந்த அன்பைக் காட்டிலும், ஜிம்மிக்குத் தன் எசமானரிடம் இருந்த அன்பு ஒரு படி உயர்ந்ததே!

அன்று மாலை அலுவலகத்திலிருந்து திரும்பிய சதாசிவம், தன் மனைவி உமாவிடம், தனக்கு மைசூருக்கு உத்தியோக மாற்றல் வந்திருப்பதாகவும், ஒருமாத காலத்திற்குள் அங்குகுடியேற வேண்டும் என்றும் தெரிவித்தார்.

வீடு அன்று வழக்கத்தை விடச் சற்று அதிகமாகவே கலகலப்பாக இருந்தது. சுரேஷ் தந்தையிடம் கேட்டான். "அப்பா! நம்ம ஜிம்மியையும் கொண்டு செல்லலாமா?" சதாசிவம் சிந்தனையில் ஆழ்ந்தார். இவ்வளவு தொலைதூரத்திற்குச் சாமான்களைக் கொண்டு செல்வதே சிரமமான காரியம். நாயை எப்படித் தன்னுடன் கூட்டிச் செல்வது?

சதாசிவம், தன் மனைவியிடம் இது பற்றிக் கலந்தாலோசனை செய்தார். இறுதியில் ஜிம்மியை,சேலத்திலேயே விட்டுச் செல்வது என்று முடிவாயிற்று.

சுரேஷுக்கு இந்த முடிவால் சற்று ஏமாற்றம்தான்! ஆனால், அப்பாதான் இன்னும் அழகான அல்சேஷன் நாய்க் குட்டி வாங்கித் தருவதாய்க் கூறியுள்ளாரே என்று சமாதானமடைந்தான்.

இவர்களது பேச்சிலிருந்து ஒன்றும் புரிந்து கொள்ளாமல், ஒவ்வொரு

—பிரேமா பாலசுப்பிரமணியம்

வரது முகத்திலிருந்த மகிழ்ச்சிக் களையைப் பார்த்த ஜிம்மி, வாலைக் குழைத்து, சுரேஷை இடித்தவாறு அமர்ந்தது. சுரேஷும், பிரியப் போகிறோமே என்று வாஞ்சையுடன் ஜிம்மியைத் தடவிக் கொடுத்தான்.

சதாசிவம் தன் குடும்பத்துடன் சேலத்தை விட்டுக் கிளம்பும் நாளும் வந்தது. உமா தெரிந்தவர்கள் வீட்டுக்குச் சென்று சொல்லிக் கொண்டு வந்தாள்.

வாசலில் வந்து நின்ற டாக்ஸியிலிருந்து இறங்கி வந்த சதாசிவம், ''என்ன உமா? எல்லாம் தயாரா? கிளம்பு! நேரமாகிறது'' என்றவர், குழைந்து நின்ற ஜிம்மியை அன்புடன் தட்டிக் கொடுத்து, ''கவலைப்படாதே ஜிம்மி... உன்னை எதிர்வீட்டுப் பரமசிவம் நன்றாகக் கவனித்துக் கொள்வார்,'' எனக் கூறிவிட்டு டாக்ஸியில் ஏறினார்.

சுரேஷுக்கு வெளியூர் செல்கிறோம் என்ற ஒரே குஷி! ஓடிப் போய் ஒரே தாவலில், டாக்ஸியின் பின் ஸீட்டில், தாய்க்கருகில் அமர்ந்து கொண்டான்.

சுரேஷ் பின்னாலேயே ஜிம்மியும் டாக்ஸியில் ஏறியது. உடனே சதாசிவம், ''இது என்ன விபரீதம்! கிளம்புகிற நேரத்தில்...'' என்று சலித்துக் கொண்டார். திடீரென்று அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. அதன்படி, பெட்டியிலிருந்து ஒரு பிஸ்கட் பொட்டலத்தை எடுத்து, அதை வெளியே வீசி எறிந்து, ''ஜிம்மீ... பிஸ்கட்டை எடுத்துக் கொண்டு வா! ஓடு...!'' என்று கூறினார்.

காரிலிருந்து வெளியில் குதித்த ஜிம்மி, பொட்டலத்தைக் கவ்வச் சென்றதும், சதாசிவம், 'டிரைவர்! வண்டியை எடுங்கள்! ம்.. சீக்கிரம்!' என்று சொல்ல நிலைமையைப் புரிந்து கொண்ட டிரைவரும், உடனே காரை ஸ்டார்ட் செய்து, வேகமாகச் செலுத்தினார்.

பிஸ்கட்டைக் கவ்விய ஜிம்மி, ஆவலுடன் திரும்பிய போது, கார் நகர்ந்து சென்று கொண்டிருந்தது. இதைக் கண்ட ஜிம்மி, வாயில் பொட்டலத்துடன் காரைப் பின் தொடர்ந்து ஓடி வந்தது! சாலையில் சென்ற சிலர் இக்காட்சியினை வியப்புடன் பார்த்தனர்.


எத்தனை முயன்றும் ஜிம்மியினால் ஒரு மைலுக்கு மேல் காருடன் ஓட முடியவில்லை. ஜிம்மியின் வேகம் குறைந்தது. டாக்ஸி ரயில்வே ஸ்டேஷனை அடைவதற்கும் ரயில் பிளாட்பாரத்துக்குள் நுழைவதற்கும் சரியாக இருந்தது. பத்து நிமிடங்கள் அங்கு நின்ற ரயில், சதாசிவம் குடும்பத்தினருடனும், மற்றவர்களுடனும் தன் பயணத்தைத் தொடர்ந்தது.


ஓடித் தளர்ந்த ஜிம்மி, ப்ளாட்பாரத்தை அடையும் போது ரயில் சென்று விட்டிருந்தது! ஜிம்மி அங்கு சிறிது நேரம் சுற்றிப் பார்த்துவிட்டு வீடு வந்து சேர்ந்தது. காலியாய் இருந்த வீட்டைச் சுற்றி வந்து விட்டு, வாசலில் அமர்ந்தது. அது கவ்விக்கொண்டு வந்த பிஸ்கட் பொட்டலம் நாதியற்றுச் சிதறிக் கிடந்தது.

அதுவரை ஜிம்மி மனத்திலிருந்த ஏக்கம், தவிப்பு, இவை அன்று மாலை

சித்திரப்புதிர்-7 விடைகள்

1. தவளை.
2. (இ) சுவிட்சர்லாந்து.
3. அ. வாத்து, ஆ. கிளி, இ. கழுகு, ஈ. புறா, உ. காகம், ஊ. ஆந்தை.
4. அ, உ. இரண்டும் ஒரே மாதிரியானவை.
5. இப்படி பூர்த்தி செய்ய வேண்டும். →





பெரிய ஊளையாக உருவெடுத்தது. "ஓ..." என்று பெரிதாக ஊளையிட்ட ஜிம்மியைத் தெருவில் சென்ற சிலர் அருவருப்புடன் பார்த்துவிட்டுச்சென்றனர்.

"சே! சனியன்! எவன் வளர்த்த நாயோ! ஊளையிடுவதைப் பார்! இந்த நாய் ஜென்மங்களே இல்லாதிருந்தால், அசுத்தமாவது நாட்டில் குறையுமே!" என்று அங்கலாய்த்தது -ஒரு சுகாதார ஜென்மம்.

எதிர்வீட்டுப் பரமசிவம், ஜிம்மியை அமைதியாய் இருக்கும்படி பலமுறை சொல்லியும், ஜிம்மி தொடர்ந்து ஊளையிட்டது. வீட்டிலுள்ள பெண்களும் குழந்தைகளும் பயந்து போயினர். பரமசிவத்துக்கு ஜிம்மியிடம் இருந்த பரிதாபத்தை விடக் கோபமே அதிகமாயிருந்தது.

ஒரு சிறு கழியை எடுத்து ஜிம்மியை அடித்துத் துரத்தினார். அநாதையாக விடப்பட்ட ஜிம்மி தனியே மூலையில் அமர்ந்து இருந்தது. சுரேஷ் தன்னைக் குளிப்பாட்டுவதை நினைத்துக்கொண்டதோ என்னவோ.... அதன் கண்களிலிருந்து நீர் வழிந்தது. நாட்கள் நகர்ந்தன. நாளொன்றுக்கு அரை வயிற்றுத்-தீனி கூடக் கிடைக்கவில்லை ஜிம்மிக்கு. அன்று சொகுசாக வளர்க்கப்பட்ட ஜிம்மியோ, இன்று சிறுவர்களின் கல்லெறிக்கும் குறும்புத்தனத்துக்கும் ஆளாக்கப்பட்டது.

இப்போது அது பழைய ஜிம்மி இல்லை! அதன் உடம்பில் எலும்பைப் போர்த்திய தோல் தவிர எதுவும் இல்லை. ஜிம்மி முதுகெலும்புள்ள பிராணிதான் என்பதை ஐயமுற நிரூபித்தது அதன் தோற்றம்.

ஜிம்மியின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த பெல்ட், லைசென்ஸ் இவை தேய்ந்து, அறுந்து, மறைந்துவிட்டிருந்தன. வெளித் தோற்றத்தில் ஜிம்மி மாறுபட்டிருந்தாலும் அது சுரேஷையோ, மற்றவர்களையோ மறக்கவே இல்லை! ஆம், அந்த ஒரு உள்ளம் தன்

எசமானர்களை நினைத்து ஏங்கியது. மனிதனாகப் பிறந்திருந்தால் ஒருவேளை ஜிம்மிக்கு மறக்கத் தெரிந்திருக்கும். ஆனால், அது நாய் ஜென்மமாயிற்றே! நன்றி உணர்வினால் ஏற்பட்ட ஏக்கம் அதன் உள்ளத்தை வாட்டியது.

மற்ற நாய்களுடன் குப்பைத் தொட்டியில் எச்சில் இலைக்காகச் சண்டையிட்ட களைப்பில் சாலை ஓரத்தில் படுத்துக் கிடந்தது ஜிம்மி. அப்போது அந்த வழியாக வந்த ஸ்கூட்டர் ஒன்று அதன் வால் மீது ஏறி, சர்ர்.... என்று சென்று மறைந்தது! துடிதுடித்துக் கதறிய ஜிம்மி, வேதனையுடன் தன் துண்டான வாலைப் பார்த்தது! வேதனையைத் தாங்கக் கூடிய வலியும் துணிவும் உடலுக்கும் மனத்திற்கும் இல்லையென்றாலும் வேறு வழி?

வாலை இழந்த ஜிம்மி அநேகமாகத் தன் வலிமை முழுவதையும் இழந்து விட்டது. சொறி, சிரங்கு யாவும் சொல்லிக் கொள்ளாமல் பற்றிக் கொண்டன ஜிம்மியை! வருடங்கள் உருண்டன. அத்தெருவில் வசித்து வந்தவர்களில் பலர் மாற்றலாகிச் சென்று விட்டனர்.

அந்தத் தெருவே அன்று அல்லோல கல்லோலப்பட்டது. நாய் பிடிப்பவன் வந்திருப்பதுதான் அதற்கு முக்கிய காரணம். நாய்களைப் பிடிக்கும் வேலன், அரை உயிருடன் நாய் வண்டிக்குள் முனகிக் கொண்டிருந்த நாய்களின் பட்டியலில் ஜிம்மியையும் சேர்க்க எண்ணி அதைத் துரத்தினான்.

கையிலிருந்த கம்பியின் நுனியிலுள்ள வளையை ஜிம்மியின் கழுத்தில் மாட்டினான். ஆனால் எப்படியோ ஜிம்மி தப்பித்துக் கொண்டது! அதன் பிறகு என்ன முயன்றும் வேலனால் ஜிம்மியைப் பிடிக்கவே முடியவில்லை.

ஜிம்மியின் பழைய எஜமானராகிய சதாசிவம் அலுவல் விஷயமாகவும், தன் நண்பர்களைச் சந்திக்கலாமென்றும் அன்று சேலத்துக்கு வந்திருந்தார். அவரது காலில் சிறு கோளாறு காரணமாகக் கைத்தடியின் உதவியுடன் நடந்தார். பழைய சில நண்பர்களுடன் உரையாடலாம் என்று பாண்டியன் தெருப் பக்கம் வந்தார்.

ஜிம்மி சதாசிவத்தைக் கவனித்து விட்டது ஓடோடி அவரிடம் வந்தது! நன்றியையோ, மகிழ்ச்சியையோ, நாய்கள் வாலை ஆட்டித்தானே காட்ட முடியும்? ஆனால், ஜிம்மிக்குத்தான் வால் இல்லையே! என்ன செய்யும் பாவம்!

நாயைக் கவனித்த சதாசிவம் அருவருப்புடன் மிக வேகமாக நடக்க ஆரம்பித்தார். ஜிம்மியும் அவரைத் தொடர்ந்தது. எலும்பும் தோலுமாய், சொறி சிரங்கு பிடித்து, வாலறுந்த நாயை அவர் எவ்வாறு ஜிம்மி என்று அறிய இயலும்?

சாலையில் சென்ற சிலர் இக்காட்சியைப் பார்த்துவிட்டு, "ஐய்யோ! என்ன சார் இது! ஒரு நாய் உங்களைத் துரத்துகின்றது!" என்றபடி, நாயை நன்றாக நோட்டம் பார்த்துவிட்டு, "சார்! இது ஒரு வெறி நாய் போல் இருக்கிறது! கடித்துவிடப் போகிறது. ஜாக்கிரதை!" என்று எச்சரிக்கவும் சதாசிவம் கைத்தடியை அரையும் குறையுமாகத் தரையில் ஊன்றிக் கொண்டு ஓட ஆரம்பித்தார். ஜிம்மி இப்போது அவரை வேகமாகத் தொடர ஆரம்பித்தது.

ஒரு சிலர் நாயை அணுக அஞ்சியவராய் "சார்! கடித்துவிடப் போகிறது! உங்கள் கைத்தடியால் நாயின் தலையில் ஓங்கி ஒரு அடி போடுங்கள்! இல்லையேல் உங்களுக்கும், மற்றவர்களுக்கும் ஆபத்து!" என்று கூச்சலிடவும், சதாசிவம் தன் கைத்தடியை ஓங்கி ஜிம்மியின் மண்டையில் ஒரே ஒரு அடி போட்டார். நிலைகுலைந்து கீழே விழுந்த ஜிம்மி அவரது காலடியிலேயே சரிந்தது. இதுவரை ஜிம்மியின் உடலில் ஒட்டியும் ஒட்டாமலும் இருந்த உயிர், நிரந்தரமாக அதன் சிறிய கூட்டை விட்டுப் பிரிந்தது!

இதற்காகத்தானோ என்னவோ, ஜிம்மி கல்லடி பட்டும், வாலை இழந்தும், வேலனிடமிருந்து தப்பித்தும் தன் உயிரைக் காத்துக் கொண்டு இருந்தது! இப்போது, வளர்த்தவன் கையாலேயே அழிக்கப்பட்ட ஜிம்மியின் அன்பு உள்ளம் சாந்தி அடைந்திருக்குமோ, என்னவோ யார் கண்டது?



கலையாத கனவுகள்

ஆ.ஜோசப்ஸ்டாலின்

நானும்கூட இமயம்மீது
ஏறப் போகிறேன் — நம்
நாட்டுக் கொடியை ஏற்றிப்புகழ்
கூறப் போகிறேன்.

வானம்பாடி போலநானும்
பறக்கப் போகிறேன் — நாளும்
வளர்ந்துவரும் அறிவியலில்
சிறக்கப் போகிறேன்.

நீதிநெறி விதைகளையே
விதைக்கப் போகிறேன் — தீய
நேர்மையற்ற களைகளையே
அகற்றப் போகிறேன்.

சாதி, சமயச் சண்டைகளை
ஒழிக்கப் போகிறேன் — என்றும்
சமரசமே உயர்ந்ததென
உணர்த்தப் போகிறேன்.


வேற்றுமையின் தீமைகளை
விலக்கப் போகிறேன் — நல்ல
விரிந்தபெரும் மனங்களையே
வளர்க்கப் போகிறேன்.

ஒற்றுமையின் அவசியத்தை
உணர்த்தப் போகிறேன் — நாளும்
உழைப்பவரின் கரங்களையே
உயர்த்தப் போகிறேன்:

ஏழை செல்வர் ஏற்றத்தாழ்வை
நீக்கப் போகிறேன் — இங்கே
எல்லாருக்கும் இனியவாழ்வை
ஆக்கப் போகிறேன்.

நாளை இந்த நாட்டைநானும்
ஆளப் போகிறேன் — என்றும்
நன்மைசெய்து, புகழைப்பெற்று
வாழப் போகிறேன்.








அமெரிக்காவில் குழந்தைகள் பத்திரிகைகள்

வான்முகில்

வீடியோ விளையாட்டுகளும், தொலைக்காட்சியும் மலிந்துள்ள போதிலும், இருபதுக்கும் மேற்பட்ட சிறுவர் இதழ்கள், 10 மில்லியன்களுக்கும் அதிகமாக அமெரிக்காவில் விற்பனையாகின்றன.





செயின்ட் நிக்கோலஸ் (முதல் சிறுவர் இதழ்) — 1873ல், மேரி மேப்பஸ் டாட்ஜினால் தொடங்கப்பட்டு, 70 ஆண்டுகள் வெற்றிகரமாக வெளியாகியது. நாடு, வீடு, இயற்கை, அழகு, நேர்மை—முதலானவை பற்றிய சிறந்த படைப்புகள் அதில் வெளியாயின. மார்க் ட்வெய்ன், எமர்சன், லாங்ஃபெலோ, தோரோ, கிப்ளிங்—முதலான புகழ் பெற்ற அமெரிக்க எழுத்தாளர்கள் அதில் எழுதினர். அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட் கூட அதில் எழுதியுள்ளார். அதில் வெளியானவற்றை ஒருவர் உரக்கப் படிப்பதும், குடும்பத்தினர் அனைவரும் கேட்டு மகிழ்வதும் அந்நாளையப் பழக்கம். தொலைக்காட்சி, வானொலி, திரைப்படம் ஆகியவற்றால், அமெரிக்கரின் வாழ்க்கை முறைகள் மாறிவிட்டதனால் "நிக்கோலஸ்" நின்றுவிட்டது.

எல்லா வயதுக் குழந்தைகளுக்கும் எல்லாப் பொருள்கள் பற்றியும் வெளியிட்ட "நிக்கோலஸ்" நிலை மாறி, ஒரு குறிப்பிட்ட வயதுக் குழுவினருக்கு ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றிச் சிறப்பிதழ் வெளியிடும் நிலையே இன்றுள்ளது. ஒரு நிறுவனம், "உடல் நலம்" என்ற ஒரே பொருள் பற்றிக் கீழ்க்குறித்த இதழ்களை வெளியிடுகிறது.

"கடலாமை"—பள்ளிமுன் வயதுக் குழந்தைகளுக்குப் பெரியவர்கள் படித்துக் காண்பிக்க;

''ஹம்டி டம்டி இதழ்'' — பள்ளியில் படிக்கத் தொடங்குவோருக்கு;

''ஹெல்த் எக்ஸ்புளோரர்'' — 9 முதல் 12 வயதினருக்கு;

''ஜூனியர் மெடிக்கல் டிடெக்டிவ்'' — அடுத்தவயதுக்குழுவினருக்கு.

''நேஷனல் ஜியோகிராபிக் வேர்ல்டு'' — பெரியவர்களுக்கு, நேஷனல் ஜியோகிராபிக் நிறுவனம் இதை வெளியிடுகிறது. இது சிறுவர்களால் மிக அதிகமாகப் படிக்கப்படும் ஏடு. இதேபோல் பெரியவர்களுக்கு ''வானியலை'' வெளியிடுவோர், சிறுவர்களுக்கு ''ஆடிசி'' — யை வெளியிடுகின்றனர். வானியல், விண்வெளி பற்றிய இவ்விதழில் வெளியாகும் விண்மீன் வரை படத்தைக் கொண்டு இரவில் தோன்றும் விண்மீன்களின் பெயர்களைச் சிறுவர்கள் ''டக் டக்'' என்று சொல்லிவிடுவார்கள்.

''ஜூனியர் இபொனி'' — கறுப்பு அமெரிக்கச் சிறுவர்களுக்கான படைப்புக்களை வெளியிடுகிறது.

'காபிள் ஸ்டோன்': மாணவர்களுக்கு வரலாற்றினைச் சுவையாக எடுத்துச் சொல்ல, ஆரம்பப் பள்ளி ஆசிரியர் இருவர் 1980ல் இதைத் தொடங்கினர்.

''ஸ்டோன் சூப்'' — 14 — வயதுக் குட்பட்டவர்களின் படைப்புகளே இதில் வெளியாகின்றன.

''கிரிக்கெட்'' — பிற இதழ்களின் சிறந்த படைப்புகளைத் தொகுத்து வெளியிடுவது.

''ஹை லைட்ஸ் ஃபார் சில்ட்ரன்'' இதழில் பெற்றோர், ஆசிரியர்களுக்கான குறிப்புகள் வெளியிடப்படுகின்றன. 'கல்வியையும் நீதியையும் போதிக்கிறது இந்த இதழ்.

சைக்கிள், விளையாட்டுப் பொருள்கள் பற்றிய விளம்பரங்கள் ஓரிரு இதழ்களில் உள்ளன. அவை தவிரப் பெரும்பாலானவற்றில் விளம்பரங்கள் இல்லை.

10,000 படிகள் விற்பனையாகும் 'ஸ்டோன் சூப்' — தவிர மற்றவை மில்லியன் கணக்கில் விற்பனையாகின்றன. ஒரு சில இதழ்கள் மட்டுமே கடைகளில் காணப்படும்; பெரும்பாலானவை அஞ்சல் வழியே விற்பனையாகின்றன.





பெரும்பாலான இதழ்கள் சிறுவர் சங்கங்களை நடத்துகின்றன. அவற்றின் செயல் திட்டங்கள் மூலம் சிறுவர்கள் நன்முறையில் பொழுது போக்கலாம்; பணமும் சம்பாதிக்கலாம். இப்படிச் சிறுவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதால்தான், சிறுவர் இதழ்கள், தொலைக்காட்சியுடன் போட்டி போட்டுக் கொண்டு வெற்றிகரமாக வெளிவருகின்றன. அடுத்த இதழ் எப்போது அஞ்சலில் வரும் என்று ஆவலுடன் காத்திருக்கும் சிறுவர்கள், அமெரிக்காவிலும் ஏராளம்.

நன்றி: 'ஸ்பான்'.

கோகுலம் சிறுவர் சங்கம்

கிண்டி, சென்னை - 600 032

இச்சங்கத்தில் யார் சேரலாம்?

தமிழ் தெரிந்த குழந்தைகள் உலகில் எங்கிருந்தாலும், அவர்கள் கோகுலம் குழந்தைகள் சங்கத்தில் சேரவேண்டும் என்பது எங்கள் ஆசை.

15 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டுமே இதில் உறுப்பினர் ஆகலாம்.

உறுப்பினர் ஆனதும்.....

கோகுலத்திற்கு நீங்கள் எதை எழுதினாலும் எப்போது எழுதினாலும் மறக்காமல் உறுப்பினர் எண்ணைக் குறிப்பிடுங்கள்.

உங்கள் ஒவ்வொருவருக்கும் கோகுலம் முத்திரையுடன் (பிள்ளையாரும் கண்ணனும்) கூடிய உறுப்பினர் அட்டையை அனுப்புவோம்.

அதில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஓர் எண் கொடுக்கப் பட்டிருக்கும். உறுப்பினர் பெயரும், பிறந்த நாளும் முகவரியும் அதில் இருக்கும்.

பயன் என்ன?

உறுப்பினர் ஆனவர்களின் பெயர்களை முகவரியுடன் கோகுலத்தில் வெளியிடுவோம். உறுப்பினர்கள் இதன் மூலம் பேனு நண்பர்கள் ஆகலாம்.

உறுப்பினர்கள் கோகுலத்துக்குக் கதைகள், கவிதைகள், துணுக்குகள், இன்னும் பயனுள்ள விஷயங்களை அனுப்பலாம். யோசனைகளையும் கருத்துக்களையும் தெரிவிக்கலாம். நன்றாயிருந்தால் வெளியிடுவோம்.

உறுப்பினர்களுக்கான பலவிதப் போட்டிகளை நடத்துவோம். வெற்றி பெறுவோர் பரிசுகள் பெறலாம். அவர்களின் படங்களையும் வெளியிடுவோம்.

'கோகுலம்' கௌரவ ஆசிரியர், ஆசிரியர், அல்லது 'கோகுலத்தின் பிரதிநிதிகள் உங்கள் பகுதிக்கு வந்தால் அறிவிப்போம். சந்தித்து உரையாடலாம்.

ஆண்டுக்கு ஒரு முறை நல்ல முறையில், பயன் தரும் வகையில் விழா நடத்தலாம்.

உறுப்பினராகக் கட்டணம் உண்டா?

இல்லை. கீழேயுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து இப்பக்கத்தை அப்படியே கோகுலம் முகவரிக்கு அனுப்பினால் போதும். தமிழ் நாட்டுக்கு வெளியில் உள்ளவர்கள் முகவரியை ஆங்கிலத்தில் எழுத வேண்டும்.

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர் மனு

பெயர்:

பிறந்த தேதி:

முகவரி:

கையெழுத்து

பிருந்தாவனக் கதையரங்கம்



வழிப்போக்கன் ஒருவன், வழியில் ஒரு குளத்தினைக் கண்டதும் களைப்புத் தீர குளிக்க எண்ணினான். கையில் உள்ள துணி மூட்டையையும், பையில் உள்ள 100ரூபாயையும்எங்கேவைப்பதென்று யோசித்தான். படியில் வைத்தால் குளிக்கும்போது யாராவது எடுத்துக் கொண்டு விடுவார்கள். எனவே, எதிரில் உள்ள மளிகைக் கடையில் அவற்றைக் கொடுத்துப் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டுக் குளிக்கப் போனான்.

மளிகைக் கடைக்காரர் அவற்றை பெட்டியில் வைத்தார். அந்தக் கடைக்கு எண்ணெய் விற்பவன் வந்தான். அவன் ''செட்டியாரே! எனக்குக் கொர்டுக்க வேண்டிய 100 ரூபாயைக் கொடுங்கள் அவசரச் செலவு'' என்றான்.

கடைக்காரரிடம் வழிப்போக்கன் கொடுத்த நூறு ரூபாயைத் தவிர வேறு இல்லை. உடனே அதைக் கொடுத்து விட்டார்.

எண்ணெய்க்காரன் போய்க் கொண்டிருந்தபோது அவனுடைய செக்குக்கு மாட்டை விற்றவன் எதிர்ப்பட்டான். ''ஐயா! நீங்கள் கொடுக்க வேண்டிய பாக்கி இன்னும் தீரவில்லையே! எனக்கு ரொம்பச் சிரமமாக உள்ளது'' என்றான். எண்ணெய்க்காரன் உடனே தன்னிடமிருந்த 100 ரூபாயைக் கொடுத்துவிட்டான்.

மாட்டைவிற்றவன்வீட்டைநோக்கி நடந்தான். அங்கே அவன் மனைவி, ''எங்கே போயிருந்தீங்க? நம்ம கேஸை ஜெயித்துக் கொடுத்த வக்கீலய்யாவின் குமாஸ்தா வந்திருந்தார். 100 ரூபாய் கொடுக்கணுமாம்'' என்றாள்.

வக்கீலய்யாவின் வீட்டுக்குச் சென்று 'பீஸ்' 100ரூபாயைக்கொடுத்தான். பணத்தைப் பெற்ற வக்கீல், தன் மனைவியிடம் அதைக் கொடுத்தார்.

''அம்மா!'' என்ற குரல் கேட்டு வக்கீலின் மனைவி திரும்பினாள். மளிகைக் கடை ஆள் நின்றிருந்தான். ''செட்டியார் பாக்கி 100 ரூபாயை வாங்கி வருமாறு சொன்னாருங்கம்மா'' என்றான். வக்கீலின் மனைவியும் அவனிடம் 100 ரூபாயைக் கொடுத்துவிட்டாள். ஆள் கடைக்குச் சென்று கடைக்காரரிடம் கொடுத்தான்.

செட்டியார் பணத்தைப் பெட்டியில் எடுத்துப் போடுவதற்கும், வழிப்போக்கன் வருவதற்கும் சரியாக இருந்தது. அவனது பொருட்களையும், பணத்தையும் செட்டியார் திருப்பிக் கொடுத்தார். நன்றி சொல்லி வழி நடந்தான் அவன். வழிப்போக்கனின் 100 ரூபாயினால் எண்ணெய்க் கடன், மாட்டுப் பணம் பாக்கி, வக்கீல் பீஸ், வக்கீல் வீட்டு மளிகைப் பாக்கி, ஆகிய நான்கு கடன்களும் தீர்ந்தன அவன் குளித்து விட்டு வருவதற்குள்ளாக. அந்த நூறு ரூபாய் நோட்டு வழிப்போக்கனிடமே இருந்திருந்தால் நான்கு கடன்களும் தீர்ந்திருக்குமா? அதுபோல் மீதமுள்ள

பணத்தை நம்மிடம் வைத்துக் கொள்ளாமல் வங்கியில் போட்டால், அந்தப் பணம் நாட்டுப் பணிக்கும் உதவும்; நமக்கும் வட்டியுடன் கிடைக்கும்.

இராமசாமி என்பவன் படு முட்டாள் தனம் உடையவன். அத்துடன் மகாக்கஞ்சனும்கூட. இதற்கு உதாரணமாக, ஒரு முறை அவன் மனைவி, யாரோ தன்னுடைய தோழியின் வீட்டில் உள்ள கறவை மாடு கன்று ஈன்றதால் கிடைத்த பாலை, வீட்டிற்கு எடுத்து வந்து காய்ச்சினாள்.



அன்றைய தினம்தான் இராமசாமியும் ஒரு கறவை மாடு வாங்குவதாக இருந்தான். இராமசாமி, அவனுடைய மனைவி கொடுத்த பாலைக் குடித்தான். இராமசாமிக்குப் பிள்ளைகள் என்று ஒருவருமில்லை. அவனும் அவனுடைய மனைவியும்தான். ஆனால் அவனுடைய மனைவியின் தங்கை பக்கத்துத் தெருவில் இருக்கிறாள். அவளுக்கு ஐந்தாறு பிள்ளைகள் இருக்கின்றனர். எனவே இராமசாமியின் மனைவி மீதமிருந்த பாலை, தன்னுடைய தங்கையின் வீட்டிற்கு எடுத்துச் செல்லலாம் என்று எண்ணிப் புறப்பட்டாள்.

அப்போது, இராமசாமி அவளை நோக்கி, "எங்கே போகிறாய்?" என்று கேட்டான். அவளும் "என் தங்கை வீட்டிற்கு மிச்சமிருந்த பாலை எடுத்துக் கொண்டு போகிறேன்" என்றாள்.

உடனே இராமசாமிக்கு வந்ததே கோபம், "என்னது, நம்ம வீட்டுப் பாலை உன் தங்கைக்குக் கொடுப்பதா?" என்று கோபத்துடன் கேட்டான்.

"என்னங்க இது, நமது வீட்டில் ஒரு கறவை மாடுகூட இல்லை, அப்படியிருக்கையில் இந்தப் பால் எப்படி நமதாகும்? இது என்னுடைய தோழி கொடுத்த பால். அதனால் இதை நான் யாருக்காவது கொடுப்பேன்" என்று கத்தினாள்.

இப்போது இராமசாமிக்குக் கோபம் அதிகரித்தது. "என்னையா நீ எதிர்த்துப் பேசுகிறாய்?" என்று கூறி, தன் கையில் வைத்திருந்த விசிறியால் அவளை அடியென்று அடித்தான். அவளும் வலி பொறுக்க முடியாமல், "ஐயோ! அம்மா!" என்று கத்தினாள்.

அப்போது தெருவில் போய்க் கொண்டிருந்த கோபால் என்பவன் இவர்களது சண்டையைக் கவனித்தான். கோபால் ஒரு இளைஞன். அவன் பல வித கடினமான வழக்குகளையும் தீர விசாரித்து நியாயமான தீர்ப்புக் கூறுவதில் வல்லவன். அவன் இராமசாமியின் வீட்டில் நுழைந்து, "என்ன நடந்ததற்காக இப்படி அடிக்கிறீர்கள்? முதலில் அடிப்பதை நிறுத்துங்கள்" என்று கத்தினான். இராமசாமியும் அடிப்பதைநிறுத்தினான். அவனுடைய மனைவியும் நடந்தவற்றையெல்லாம் அழுது கொண்டே கூறினாள்.

உடனே கோபால், "என்னப்பா நீ, உங்க மனைவிதான் சொல்றாங்க. அந்தப் பால் அவங்க தோழியார் இலவசமாகக் கொடுத்தாங்களாமே! அதுவும் அந்தப் பாலில் இருந்த மிச்சத்தைத்தானே அவங்களுடைய தங்கையின் வீட்டிற்கு எடுத்துச் செல்றாங்க. இதுக்குப் போய் வீணாக அடிக்கிறீங்களே!" என்று கேட்டான்.

இதைக் கேட்டதும் இராமசாமி, "என்னய்யா நீ, நானே இன்று ஒரு கறவை மாடு வாங்குவதாக இருக்கிறேன். அதனால்தான், இப்போது இவள் எடுத்துக் கொண்டு போகும் பால் நான் வாங்க இருக்கும் கறவை மாட்டினுடையதாக இருந்தால், எனக்குத்தானே அந்தப் பால் சொந்தம்.

அந்தப் பாலை விற்றால் பணம் கிடைக்கும். ஆனால், இவளோ என் பேச்சைக் கேளாமல் இவளது தங்கைக்குக் கொடுக்கப் போகிறாளாம். அதனால் எனக்குத்தானே நஷ்டம்? அதற்காகத்தான் இவளை அடித்தேன்'' என்று கூறினான்.

இராமசாமியின் முட்டாள் தனத்தை நன்றாகப் புரிந்துக் கொண்ட கோபால் சிறிது நேரம் யோசித்து விட்டு, தன் கையில் இருக்கும் மூங்கில் பிரம்பால் இராமசாமியைப் பலமாக அடித்தான். வலி பொறுக்காமல், ''ஏய்! ஏய்! என்னை ஏன் இப்படி அடிக்கிறாய்?'' என்று கத்தினான். அதற்கு கோபால் அடிப்பதை நிறுத்தி விட்டு, ''ஐயா, நான் இன்று காலையில் இவ்வூரில் உள்ள கம்புத் தோட்டத்தில் ஒரு கறவை மாடு மேய்ந்து பயிர்களை யெல்லாம் நாசம் செய்வதைப் பார்த்தேன்'' என்றான்.

"அதற்கு என்னை ஏன் இப்படி அடித்தாய்?'' என்று உரக்கக் கத்தினான் இராமசாமி.

''ஐயா, நான் அந்தக் கம்புத்தோட்டத்தை விலைக்கு வாங்குவதாக இருக்கிறேன், எனவே, நான் வாங்க இருக்கும் கம்புத் தோட்டம், நான் இன்று காலையில்பார்த்தகறவைமாடுமேய்ந்த தோட்டமாக இருக்கலாம் என்றும், அதில் மேய்ந்த கறவை மாடு நீங்கள் வாங்க இருக்கும் கறவை மாடாக இருக்கலாம் என்றும் எண்ணியே உங்களை இப்படி அடித்தேன்'' என்று கோபால் இராமசாமியிடம் கூறினான்.

இராமசாமியும் கோபால் கூறியதைக் கேட்டு, தன்னுடைய முட்டாள் தனத்தினால் தன் மனைவியை அடித்ததை எண்ணிப் பெரிதும் துயருற்றான். அதற்குப் பிறகு அவனே அந்தப் பாலை எடுத்துக் கொண்டு தன் மனைவியின் தங்கையினுடைய வீட்டிற்கு ஓட்டம் பிடித்தான். கோபாலும், இராமசாமியின் முட்டாள்தனத்தை எண்ணிச் சிரித்துக் கொண்டே வந்த வழியே திரும்பினான்.

'ப்ளார், தப், தொப்.'

''ஏண்டி! என் ஸ்கெட்சை எடுத்தே?'' என்று கேட்டு பாஸ்கர் தன் தங்கை விமலியை அடிக்கும் சத்தமே அது!

விமலி அழாதிருக்கவே, மறுபடியும் அவள் தலையில் குட்டினான் பாஸ்கரன்.

'ஓ'வென அலறினாள் விமலி!


அதற்குள் உள்ளிருந்து ''இரண்டு பேரும் வாங்க இங்கே. கடலையை எடுத்துக்குங்க'' என்ற அம்மாவின் குரல்.

இருவரும் ஓடினார்கள்.

ஒரு பங்கை பெரிதென்று பாஸ்கர் எடுக்க, அவன் கையைக் கிள்ளினாள் விமலி.

சிப்பிக்குள் முத்து

ஆர். சிதம்பரம் (2505)



முடிவில்பாஸ்கரிடமிருந்து 4 கடலைகளுக்காக அடியும், திட்டும் பட்டுக் கொண்டு சின்னப் பங்கையே எடுத்துக் கொண்டாள் விமலி!

வாசலில் ரிக்ஷா மணி.

முதலில் ஓடிய பாஸ்கர் ரிக்ஷாவின் நடுவில் கால்களை அகட்டி உட்கார்ந்து கொண்டான்.

யாராவது அவனை ஒடுங்கி அமரும்படி கூறிவிட்டால் தொலைந்தது! வழியெல்லாம் திட்டு, கிள்ளு! சில சமயம் நன்றாக இடித்துவிட்டுவிடுவான். ''ஏண்டா இடித்தாய்?'' என்றால், ''நானா இடித்தேன்! ரிக்ஷா குலுங்கியது!'' என்பான். ரிக்ஷாக்காரன் வாயையே திறக்க மாட்டான்.

ஏனெனில் வண்டி குலுங்கியது உண்மைதான்.

பள்ளியில்....

"ரகுவைக் காணுமே?" வினவினான் சக மாணவனிடம்.

"லீவோ என்னவோ தெரியலே!"

"ச்! அவன் என்னுடை மேப் நோட்டை வாங்கிக்கிட்டுப் போயிட்டானே! இதுக்குத்தான் நான் யாருக்குமே ஓசி கொடுக்கிறதில்லே!" — அலுத்துக் கொண்டான் பாஸ்கரன்.

உண்மையில் மேப்பில் சில இடங்கள் குறிக்கத் தெரியாததால் அதைக் குறித்துத் தரும்படி ரகுவிடம் கெஞ்சி, அவன் மறுக்க மறுக்க அவன் பையிலே திணித்திருந்தான் நோட்டை!

மதிய இடைவேளையின்போது ரகுவின் வீட்டுக்குப்போனான். மேப்நோட் இல்லாவிட்டால் பிரம்படி உண்டே.

ரகுவின் வீட்டுப் பக்கம் பாதைகள் ஒழுங்காகவே இல்லை!

முதல்நாள் மழையினால்சேறும்சகதியும்! சாக்கடை நாற்றம்.

ரகுவின் வீடு, இல்லை, குடிசை மிகச் சிறியது.

ரகுவின் அம்மாதான் இருந்தாள்.

"ரகு இல்லீங்களா?"

"இப்பவந்துடுவான். அந்தபெஞ்சியிலே உட்காருங்க தம்பி!"

கடிகாரத்தைப் பார்த்தபடியே தூசி தட்டிவிட்டு அமர்ந்தான் பாஸ்கரன்.

அப்பொழுது ஒரு கூடையுடன் அங்கே வந்தார் வயோதிகர் ஒருவர்.

"அம்மா! இந்த வெள்ளரிப் பிஞ்சுகளை ரகுகிட்டே கொடுங்க" என்றார்.

"என்னத்துக்கு ஐயா, இவ்வளவு தூரம் சிரமப்பட்டு வர்ரீங்க?" என்றாள் ரகுவின் அம்மா.

"என்னம்மா சிரமம்? ரகுத்தம்பி தான் காலையில என் தோட்டத்துக்கு வந்து, வெள்ளரிகளை பறிச்சுக் கழுவி, கூடையில அடுக்கி வச்சு, அதை என் தலையில தூக்கி வைச்சுட்டும் போவுதுங்க. ஏதோ என்னால முடிஞ்சது இரண்டே வெள்ளரிப்பிஞ்சு!"

கிழவர் வெளியேறிய சற்று நேரத்திற்கெல்லாம் ரகு வந்துவிட்டான்.

ரகுவின் அம்மா, "என்னடா ரகு முழங்காலெல்லாம் ஒரே சிராய்ப்பு! எங்கே விழுந்தே?" பதற்றத்துடன் கேட்டாள்.

"ஒண்ணுமில்லேம்மா! நம்ம இட்டிலிக் கடைப் பாட்டி விறகெடுக்கணும். பரண் மேலஏறிஎடுக்க ஆளைக் காணுமே'ன்னு சொல்லிக்கிட்டிருந்தாங்க. நான் எடுத்துத் தர்ரேன்' ன்னு ஏணியிலே ஏறி எடுத்தேன். இறங்கும் பொழுது ஏணி டான்ஸ் ஆடிச்சு. கரணம் போட்டேன்! லேசாய்த்தான் அடி" என்று சிரித்த ரகு அப்பொழுதுதான் பாஸ்கரனைப் பார்த்தான்.

"அடடே! வா!... வா!" என்றான்.

"என்னுடை மேப் நோட்டை...." இழுத்தான் பாஸ்கரன்.

"இதோ தர்ரேன்! இடமும் குறிச்சிட்டேன்."

அங்கே வந்த ரகுவின் தம்பி "ஹய் வெள்ளரி" என்றான்.

"ஆமாம். உனக்கு ஒண்ணு. பாஸ்கருக்கு ஒண்ணு" என்றான் ரகு.

ரகுவின் தம்பி, "அண்ணா ஒனக்கு? என்றான்.

"எனக்கு வேணாம்பா! நீ தின்னு" பரிவுடன் கூறிய ரகு உள்ளே சென்று மேப் நோட்டை எடுத்து வந்து தந்தான்.

பாஸ்கரன் வெளியே வந்தான்.

முத்துச் சிப்பி பார்க்கக் கவர்ச்சியற்றதாய் இருப்பினும் அதனுள்ளிருக்கும் முத்து விலை உயர்ந்தது; ஒளி மிகுந்தது.

அதுபோல் ரகுவின் வீடும் சூழ்நிலையும் அசுத்தம் நிறைந்ததுதான். ஆனால், அவன் மனத்திலே பரோபகாரமும் தயையும் அன்பும் நிறைந்திருக்கின்றன.

ஆனால் பாஸ்கர்?

அவனது உடை, வீடு அனைத்தும் தூய்மைதான். இருப்பினும், அவன் நெஞ்சத்திலோ பொய்யும், புரட்டும், வஞ்சகமும், விட்டுக் கொடுக்காத மனப்பான்மையும் ஆகிய அழுக்குகளல்லவா இருக்கின்றன!

பாஸ்கரன் ஒரு 'புது பாஸ்கர'னாக ரகுவின் வீட்டை விட்டுப் பள்ளியை நோக்கி விரைந்து வரும்போது அவன் மனத்தைப் போலவே மழை மூட்டம் நீங்கி சூரியன் 'பளிச்'சென்று பிரகாசித்தான்!

புதிர்க்கதை-3

அறிவும் நேர்மையும்

ஏ. சோதி



முன்னொரு காலத்தில் பவழ நாட்டை அரசன் ஒருவன் நேர்மையோடு ஆண்டு வந்தான். அவன் புகழும், பெருமையும் பல நாடுகளிலும் பரவி இருந்தது.

அந்நாட்டில் அறமன்றத் தலைவராக இருந்த அறிவரசு என்பவர் நோயால் படுத்த படுக்கையாக இருந்தார். அவரைச் சோதித்த வைத்தியர்கள் 'இனி அவர் பிழைப்பது கடினம். அப்படிப் பிழைத்தாலும் அவரால் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்குவது இயலாது'' என்று கருத்துத் தெரிவித்தனர்.

இதைக் கேள்விப்பட்ட அரசன் ''நீதி தவறாமல் நேர்மையோடு தீர்ப்பு வழங்கும் அறிவரசு இருந்த அறமன்றத் தலைவர் பொறுப்பில் யாரை அமர்த்துவது?'' என்று எண்ணினான்.

உடனே அமைச்சனை அழைத்து, ''நம் நாட்டு அறமன்றத் தலைவர் பொறுப்பிற்கு அறிவும், நேர்மையும் கொண்ட ஒருவரை நியமிக்க வேண்டும். யாருக்கு அப்பதவியைத் தருவது?'' என்று கேட்டான்.

''அரசே! நம் நாட்டு மக்களுக்கு ஏதேனும் அறிவுச் சோதனை வைத்து அறிவுள்ளவர்களைக் கண்டுபிடித்து விடலாம். ஆனால் அவர்களுக்குள் நேர்மையானவனைக் கண்டுபிடிப்பது கடினமாயிற்றே'' என்றான் அமைச்சன்.

''முதலில் நீ அப்பதவிக்குத் தகுதியுள்ள அறிவுள்ளவர்களைத் தேர்ந்தெடு. அவர்களுள் நேர்மையானவனைக் கண்டுபிடிப்பது என் பொறுப்பு. உனக்குப் பத்து நாட்கள் அவகாசம் தருகிறேன். அதற்குள் உன் வேலையை முடித்து என்னிடம் வா'' என்றான் அரசன்.

'என்ன செய்வது?' என்று சிந்தித்துக் கொண்டே அமைச்சன் தன் வீட்டிற்குச் சென்றான். 'அறமன்றத் தலைவர்' பதவிக்காக வரும் அனைவரிடமும் ஒரு விடுகதையும் ஒரு கணக்கும் போடுவது, யாரெல்லாம் சரியான விடை தருகின்றார்களோ அவர்களை அறிவுள்ளவர் என்று தேர்ந்தெடுப்பது என்ற முடிவுக்கு வந்தான் அமைச்சன்.

அமைச்சன் உடனே முரசு அடிப்பவனை அழைத்து, ''அறமன்றத் தலைவர் பதவிக்கான போட்டி நாளைக் காலை

அரண்மனையில் நடக்க உள்ளது. அறிவும், நேர்மையும் உள்ள ஒருவர்க்கே அப்பதவி தரப்படும். விருப்பம் உள்ள அனைவரும் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம் என்று நாடெங்கும் தெரிவி'' என்றான்.

அதன்படியே முரசடிப்பவன் நாடெங்கும் முரசடித்து இந்தச் செய்தியைத் தெரிவித்தான்.

இதைக் கேள்விப்பட்ட பலர் போட்டியில் பங்கு கொள்ள அரண்மனைக்கு வந்தனர். ஒவ்வொருவரையும் அமைச்சன் தனித்தனியே அழைத்து, ''நான் கேட்கும் இரண்டு கேள்விகளுக்குச் சரியான பதிலைத் தந்துவிட்டால் அறிவுப் போட்டியில் வென்று விட்டதாகப் பொருள்.

என் முதல் கேள்வி: காலையில் நான்கு கால், நண்பகலில் இரண்டு கால், மாலையில் மூன்று கால் — இப்படி வாழும் உயிரினம் எது?

இரண்டாவது கேள்வி: ஒரு பெரிய மரத்தில் மேலே ஒரு கிளையும், கீழே ஒரு கிளையும் உள்ளது. இரண்டு கிளைகளிலும் சில பறவைகள் இருந்தன. மேல் கிளையிலிருந்து ஒரு பறவை கீழ் கிளைக்குப் பறந்து வந்தால் இரண்டு கிளைகளிலும் சமமான எண்ணிக்கையில் பறவைகள் இருக்கும். மாறாகக் கீழ்க் கிளையிலிருந்து மேல் கிளைக்கு ஒரு பறவை பறந்து செல்லுமானால், மேல் கிளையில் இருப்பதைப் போல் பாதி எண்ணிக்கையுள்ள பறவைகள் தான் கீழ்க் கிளையில் இருக்கும். அப்படியானால் மேல் கிளையில் இருந்த பறவைகள் எத்தனை? கீழ்க் கிளையில் இருந்த பறவைகள் எத்தனை?'' என்று கேட்டான் அமைச்சன்.

தனித்தனியே வந்த பலரால் எந்தக் கேள்விக்கும் விடை தர முடியவில்லை. சிலர் ஒரு கேள்விக்குச் சரியான பதில் தந்தனர். பத்துப் பேர் மட்டுமே இரண்டு கேள்விகளுக்கும் சரியான விடை தந்தனர்.

அமைச்சன் போட்டியில் வெற்றி பெற்ற பத்துப் பேரையும் ஒரு அறையில் தங்க வைத்தான். அவர்களிடம், ''இரண்டாம் போட்டிக்கு அரசரே உங்களை அழைப்பார்'' என்று சொன்னான். பிறகு அரசனிடம் சென்று நடந்ததை எல்லாம் விளக்கமாகக் கூறினான் அமைச்சன்.

எல்லாவற்றையும் கேட்ட அரசன் ஆர்வத்தை அடக்க முடியாதவனாய், ''முதல் கேள்விக்கும், இரண்டாம் கேள்விக்கும் சரியான விடை என்ன?'' என்று வினவினான்.

''அரசே! முதல் கேள்விக்கான விடை மனிதன். காலை என்பது குழவிப் பருவத்தைக் குறிக்கும். குழந்தை இரண்டு கால்களாலும், இரண்டு கைகளாலும் தவழ்ந்து செல்கிறது. ஆகவே, காலையில் நான்கு கால்; நண்பகல் என்பது வாலிபப் பருவம். இளைஞன் இரண்டு கால்களாலும் நடந்து செல்கிறான். அதனால் நண்பகலில் இரண்டு கால்; மாலை என்பது முதுமை. கிழவன் கையில் தடி ஒன்றைத் தரையில் ஊன்றியபடி நடக்கிறான். அதனால் மாலையில் மூன்று கால்.

இரண்டாம் கேள்விக்கான விடை: மேல் கிளையில் ஏழு பறவைகள். கீழ்க் கிளையில் ஐந்து பறவைகள். மேல் கிளையிலிருந்து ஒரு பறவை கீழ்க் கிளைக்கு வந்தால் இரண்டு கிளைகளிலும் சரியாக ஆறு பறவைகள் இருக்கும். கீழ்க் கிளையிலிருந்து மேல் கிளைக்கு ஒரு பறவை சென்றால் மேல் கிளையில் எட்டு பறவைகள், கீழ்க் கிளையில் நான்கு பறவைகள் இருக்கும்'' என்றான் அமைச்சன்.

உலகிலேயே அதிகமாக விற்பனையாகும் சிறுவர் இதழ்

சீனாவில் சிறுவர்களுக்கான ஒரு வார இதழ் வெளிவருகிறது. 'சீனச் சிறுவர் செய்தி' என்பது அந்த இதழின் பெயர். உலகிலேயே மிக அதிகமாக விற்பனையாகும் சிறுவர் பத்திரிகை இதுதான். வாரந்தோறும் 1 கோடியே 10 லட்சம் பிரதிகள் விற்பனையாகின்றன!

—வசந்தா கோவிந்தன்.





மகிழ்ச்சியடைந்த அரசன், அமைச்சனைக் கட்டித் தழுவிக் கொண்டான். பிறகு, அமைச்சனைப்பார்த்து, "அந்தப் பத்து பேரையும் நான் விசாரிக்கப் போவதாகக் காலம் கடத்திக் கொண்டே வா. இரவு நெடுநேரம் ஆனதும் இனி அரசர் வர மாட்டார். நீங்கள் இந்நேரத்தில் வீட்டிற்கும் செல்ல முடியாது. அரண்மனைக் கருவூலத்தில் பாதுகாப்பாகத் தங்கி இருங்கள்., விடிந்ததும் அவரவர் வீட்டிற்குச் சென்று நல்ல ஆடை அணிந்து அரண்மனைக்குத் திரும்பி வாருங்கள். பின்பு அரசர் உங்களை விசாரிப்பார் என்று கூறு. நான் இதற்குள் நேர்மையான மனிதனைக் கண்டுபிடித்து விடுகிறேன்" என்றான் அரசன்.

அரசன் சொன்னபடியே அமைச்சனும் அந்தப் பத்துப் பேரையும் அன்றிரவு அரண்மனைக் கருவூலத்தில் பாதுகாப்பாகத் தங்க வைத்தான்.

கருவூலத்தில் பளபளவென்று மின்னியபடி தங்கக் காசுகள், வெள்ளிக் காசுகள், பலவகைகளில் அச்சடிக்கப்பட்டு ஏராளமாகக் கொட்டி வைக்கப் பட்டிருந்தன.

விடியற்காலை நேரம்.

அங்கு காவல் இருந்த வீரர்கள் அரசரும், அமைச்சரும் அப்பொழுதே—அங்கேயே அவர்களைச் சந்திக்க வருவதாக எழுப்பினார்கள்.

அவர்களும் தங்கள் உடைகளை அவசரமாக அணிந்து கொண்டு அரசரைச் சந்திக்கத் தயாரானார்கள்.

சிறிதுநேரத்தில் அரசனும், அமைச்சனும் அங்கே வந்தார்கள்.

அமைச்சன் பத்துப் பேரையும் பார்த்து, "அரசர் உங்கள் ஆட்டத்தைப் பார்க்க விரும்புகின்றார். உங்களுக்கு ஆடத் தெரிந்தாலும், தெரியாவிட்டாலும் ஏதேனும் ஒரு ஆட்டம் உடனே ஆட வேண்டும்" என்றான்.

பத்துப் பேரில் ஒருவன் மட்டும் ஏதோ ஆட்டம் ஆடுவது போல் இரண்டு முறை குதித்து, கைகாலை ஆட்டினான். மற்றவர்கள் எல்லோரும் தயங்கியபடி ஆடாமல் நின்றார்கள்.

இதைப் பார்த்த அரசன் அமைச்சரிடம், "ஆட்டம் ஆடினானே அவன் தான் நேர்மையான மனிதன். அவனுக்கே அறமன்றத் தலைவர் பதவி கொடுப்போம்" என்று சொல்லி விட்டுச் சென்றான்.

அரசன் ஆட்டம் ஆடியவனை நேர்மையான மனிதன் என்று எப்படிக் கண்டுபிடித்தான்?

விடை 83-ஆம் பக்கம்



நல்ல தண்டனை

சு. நீலகண்டன்

'கோழைநல்லூர்' கோவிலில் திருவிழா, கோலாகலமாகவே நடக்கும். திருவிழா அன்று எல்லோரும் புத்தாடையே அணிவார்கள். திருவிழாவிற்காக குழந்தைகளுக்குத் துணி எடுப்பதற்காக, சுடலையும், முனியனும் பட்டணம் வந்தனர். புதுத் துணிகளை எடுத்து அழுக்குப் பையினுள் அடைத்தனர். துணிகளுக்கு மத்தியிலே சில ஆங்கிலக் காய்கறிகளையும் திராட்சைப் பழங்களையும் வாங்கி இருவரும் பையினுள் அமுக்கினர். டவுனைச் சுற்றிப் பார்த்துவிட்டு, பஸ் நிலையம் வர இரவு பத்தாகி விட்டது. கடைசி பஸ்ஸூம் போய் விட்டது.

வேறு வழியின்றி, சுடலை முனியனைப் பார்த்து,

''அண்ணே! வண்டியைத் தவற விட்டுட்டோம். எனக்கு இங்கே ஒரு மாட்டு வியாபாரியைப் பார்க்க வேண்டி இருக்கு. வீணா இந்தப் பையையும் என்னத்துக்குச் சுமக்கணும்? அதான் ஒண்ணு சொல்லுறேன்! நீ உன் பையோட என் பையையும் பத்திரமா வச்சுக்கிட்டு இங்கே நிம்மதியா உறங்கு! உள்ளே துணியெல்லாம் இருக்கு, பத்திரம்! நான் மாட்டு வியாபாரியைப் பார்த்துட்டு, சீக்கிரம் வந்துடுறேன். இந்தத் துணியை விரிச்சுப் படு'' என்று கூறி, தோளில் இருந்த துணியையும் கொடுத்துவிட்டுச் சென்ருன்.

முனியன், இரண்டு பைகளையும் பக்கத்தில் வைத்துவிட்டுப் படுத்தான். தூக்கம் வரவில்லை. கழுத்து வலித்தது. 'தலையணை இருந்தால் சுகமாக இருக்குமே! தன் பையைத் தலைக்கு வைத்தால், உள்ளே இருக்கும் திராட்சைப் பழம் நசுங்கி, துணிகள் நாசமாகி விடுமே! ஆலோசித்தான். 'சுடலையின் பையிலும் திராட்சைப் பழம் இருந்தது. 'அவன் பைதானே! துணிகள் நாசமாகட்டுமே! ஏன் இங்கு வைத்துவிட்டுப் போகிருன்?' என்ற எண்ணத்தில் சுடலையின் பையைத் தலையணையாக்கிக்கொண்டு, தன் பையைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு படுத்தான். நன்ருக உறங்கிவிட்டான்.

சிறிது நேரத்தில் ஏதோ சப்தம் கேட்டு எழுந்து பார்த்தான். அவன் தலையணை (சுடலையின் பை) பத்திரமாக இருந்தது. பக்கத்தில் வைத்த தன் பை எங்கே என்று பார்த்தான். 'ஐயோ! என் பையைக் காணுேமே!' என்று அலறி அடித்துக் கொண்டு எழுந்தான். எவனே வழிப்பறிக்காரன் அதைக் கொண்டு போய்விட்டான்! 'ஓ'வென அழுதான்.

''கெட்டதை நினைத்தால் இறைவன் உனக்கு இட்டதை இழப்பாய்.''

கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல் - தொடர்ச்சி

உறுப்பினர் எண், பெயர், முகவரி

2796 கே. ஆர். ராஜா அனந்த சேகர், 116, ரயில்வே பீடர் ரோடு, ராசபாளையம் 626117.
2797 எம். செண்பகம், 17 — B, பெரிய கம்மாளத் தெரு, மன்னார்குடி — 614 001.
2798 தே. சதீஷ்குமார், 40, பெரிய மணியக்காரத் தெரு, செங்கற்பட்டு — 603 001.
2799 ஏஞ்சல் பிரீத்தி, 13, காலேஜ் தெரு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி — 2.
2800 ப. கந்தவேல், 15A/4, பாவாணை வீதி, ஈரோடு — 1.
2801 என். ஸ்ரீதேவி ப்ரியா, எம். 3, எல். ஐ. சி. காலனி, ஆர். எஸ். புரம், கோவை — 2.
2702 சே. பெ. கோபிராஜ், 58 — நரசிம்மன் பாதை, செவ்வாய்பேட்டை, சேலம் — 2.
2803 தி. ஆனந்தி, அமுதா இல்லம், 14 — 32 — 1 B நாடார் பேட்டை தெரு, அருப்புக்கோட்டை.
2804 தி. அமுதா, அமுதா இல்லம், 14— 32—1B, நாடார் பேட்டை, அருப்புக்கோட்டை.
2805 கே. ராஜசேகரன் 12, பார்க்லிஷ் ரோடு, நாகல் நகர், திண்டுக்கல் — 624 003.
2806 மோ. ராஜேஷ், S/o. கே. எஸ். மோகன்லால், தி. க. கு. ந. பள்ளி, குன்றக்குடி 623206
2807 எச். ரகோத்தமன், 35 E சினியன் தோட்டம், வெங்கடசாமி வீதி, ஈரோடு 638001
2808 பி. ராம்குமார், 208, லாயிட்ஸ் ரோடு, சென்னை — 86.
2809 தா. ஹாரிஸ், S/o. எஸ். ஏ. தாஹிர், திசையன்விளை — 628 657.
2810 எம். சிவசண்முகம், 24 ஏ, தாஜ் பில்டிங்ஸ், சிந்துபூந்துறை, திருநெல்வேலி — 1.
2811 பி. ரா. பிரபு, 39, செல்வ விநாயகர் கோவில் தெரு, சென்னை — 11.
2812 இ. ல. மகாதேவன், C-A, 0—4, தபால் தந்தி குடியிருப்பு, சாயிபாபா காலனி, கோவை — 11.
2813 இ. ரா. ரத்தனு, பிளாட் எண் 30, இலட்சுமி நகர், ஆதம்பாக்கம், சென்னை — 88.
2814 இரா. ரஞ்சனு, பிளாட் எண் 30, இலட்சுமி நகர், ஆதம்பாக்கம், சென்னை — 88.
2815 டி. சி. வெங்கடேசன், 37, பெரிய மணியகாரத் தெரு, செங்கற்பட்டு.
2816 பி. எஸ். கோமதி, 271, சுப்பைய முதலியார் வீதி, கோவை — 641 001.
2817 V. Nagarajan, Type II Qrts. No.8, Rajnagar, New Delhi-29.
2818 வே. இராமநாதன், 5, ரங்கநாதன் தெரு, கணேஷ் நகர், சென்னை — 32.
2819 க. ஆனந்தவேல், செந்தில் மோகன் ரைஸ்மில், இலவம்பேடு, பொன்னேரிதாலுகா.
2820 S. Indran, P.B. No.769, Bahrain.
2821 ஆர். ராதாகிருஷ்ணன், சி 8, ஜவஹர் மெயின் ரோடு, என். ஆர். டி. நகர், தேனி — 626 531.
2822 மு. மறைமலை முத்துகுமாரசுவாமி, 2, மேட்டுத் தெரு, சென்னை — 1.
2823 என். குணசேகரன், த/பெ. வி. நவகோடி, சாவுக்கட்டுப்பாளையம், 638 460.
2824 ஆர். ராஜேந்திரன், 22/700, பெரிய கடைத் தெரு, கோவை.
2825 ஏ. எஸ். நந்தகுமார், 10, எஸ். பி. ஜி. சர்ச் லேன், மதுரை — 625 001.
2826 எல். விஸ்வநாதன், 127, சின்னக்கடை வீதி, சேலம் — 1.
2827 ஏ. சம்சுதீன் C/o. வி. ஏ. அப்துல் அன்வர் பாஷா, மளிகைக் கடை T. கைலாசம் பாளையம், திருச்செங்கோடு.
2828 R. Sujatha, 12, Satyen Dutta Road, Flat-4, Calcutta-700 029.
2829 பி. எஸ். ஸ்ரீதேவி, 12 ஏ, மூன்றும் வீதி, சுப்பிரமணியபுரம், காரைக்குடி — 2.
2830 வை. சிவநேசன், த/பெ. வையாபுரி, ஆசிரியர், கட்டமங்கலம், அல்லியந்தல் அஞ்சல் — 604 503.
2831 க. சக்ரபாணி, 1, ரெட்டியார் அக்ரஹாரம், கும்பகோணம் — 1.
2832 எஸ். சாந்தி, 17, தாண்டவராயப் பிள்ளை தெரு, நாகப்பட்டினம்.
2833 கே. மாலா, 28, மூன்றும் தெரு, மன்னார்குடி.
2834 எஸ். எம். ஸ்ரீவித்யா, 9, பீமாராவ் வீதி, சத்தியமங்கலம் — 638 401.
2835 எஸ். எம். ஸ்ரீராம், 9, பீமாராவ் வீதி, சத்தியமங்கலம் — 638 401.
2836 இரா. திருமூர்த்தி, த/பெ. கே. ராமசாமி, புளியமரத்தோட்டம், மேட்டுப்பாளையம் ரோடு, அன்னூர், கோவை மாவட்டம்.
2837 ஆர். உமா, பி — 7, பெரியார் நகர், ஈரோடு.
2838 ஆர். ராதாகிருஷ்ணன், பி — 7, பெரியார் நகர், ஈரோடு.
2839 சி. தேவி, 24, குமாரசாமி கவுண்டர் லே அவுட், முத்து நகர் விரிவு, திருப்பூர் — 7.
2840 நா. விசாலாட்சி, 48, டாக்டர் அன்சாரி தெரு, பொள்ளாச்சி

2841 நா. சுப்பிரமணியன், 48, டாக்டர் அன்சாரி தெரு, பொள்ளாச்சி.
2842 ப. பார்வதி 32, நந்தவன வீதி, குறிஞ்சிப்பாடி—607 302.
2843 அ. அன்சர் அலி, 816, சந்திப்பு சாலை, விருத்தாசலம்.
2844 ஆர். சிவகுமார், 18, குட்டி மேஸ்திரி தெரு, ஏழு கிணறு, சென்னை—1.
2845 டி. ஸ்ரீநிவாஸ், 19, 4—வது தெரு, போஸ்டல் காலனி, சென்னை—33.
2846 ப. மகேஸ்வரி, த/பெ. ந. பழனியப்பன், பரமத்தி, சேலம் மாவட்டம்.
2847 ஜெ. விஜயலெட்சுமி, 'கோகுலம்', சாமையன் தோட்டம், கோவை—20.
2848 ஜெ. விஜயகிருஷ்ணகுமார், 'கோகுலம்' சாமையன் தோட்டம், கோவை—20.
2849 ஆர். ஜம்ஷீர் பாஷார், 584, பூந்தமல்லி நெடுஞ்சாலை, அரும்பாக்கம், சென்னை—106.
2850 S. Arul Devan, U.45, M.V. Block, P.G. Halli, V.R. Puram, Bangalore-560 003.
2851 கி. ரமேஷ், S/15, அகதிகள் காலனி, சக்தி ரோடு, காந்திபுரம், கோவை—44.
2852 மா. ஆதவன், 2, முத்து வேல் நாயக்கன் தெரு, டாக்டர் ராகவன் காலனி,
சென்னை—24.
2853 Krishnamurthi, 69/537, G.H.B., Amraiwadi, Ahmedabad-380 026.
2854 Suresh, 69/537, G.H.B. Amraiwadi, Ahmedabad-380 026.
2855 இரா. வெங்கடகிருஷ்ணன்; த/பெ. கே. என். ஆர். சக்ரவர்த்தி, 5/620,
பாய் காலனி, சுப்பிரமணிய நகர், சேலம்—5.
2856 மா. நப்பின்னை, 2, முத்துவேல் நாய்க்கன் தெரு, டாக்டர் ராகவன் காலனி,
சென்னை—24.
2857 R. Ganapathy Subramanian, B2/B209, Janakpuri, New Delhi-58.
2858 எம். ஜி. ராஜா பிமராஸ், டாக்டர் அம்பேத்கார் நகர், பெரியகுளம், மதுரைமாவட்டம்
2859 செந்தில், 127, நாபாளைய தெரு, விழுப்புரம்.
2860 ச. சீனிவாசன், 1, திரு. வி. க. தெரு, நெல்லிக்குப்பம்.
2861 எஸ். நந்தகுமார், 1, திரு. வி. க. தெரு, நெல்லிக்குப்பம்.
2862 எஸ். ரெங்கலட்சுமி, 3/17, இரட்டைத் தெரு, சோழவந்தான்—624 214.
2863 எஸ். லட்சுமி நாராயணன், 3/17, இரட்டைத் தெரு, சோழவந்தான்—624 214.
2864 சி. வி. ரமணன், A 17/2, M.I.G. Flats, வைகை அபார்ட்மெண்ட், மதுரை—20.
2865 எல். வளர்மதி, த/பெ. எஸ். லட்சுமணன், சரஸ்வதி இல்லம், குமரேச சீனிவாசன்
நகர், கடையம்—627 415.
2866 செ. ரெங்கநாயகி, 18, கோனூர்பேட்டை சந்து, தெற்கு கடைவீதி, பாளையங்
கோட்டை—627 002.
2867 ஏ. ரபீக் முகமது ஜாபர், 21/421, ஆர். ஜி. தெரு, கோவை—1.
2868 எல். ஆர். வெங்கடரமணன், ஈ—40, 9வது மேற்குத் தெரு, திருவான்மியூர்,
சென்னை—41.
2869 வி. இந்திரா, 321, 'பி' ரயில்வே காலனி, ஈரோடு—2.
2870 ஆர். காமாட்சி, 5, வின்சென்ட் காலனி, கோவை—2.
2871 வி. பாலாஜி, 93, ஏ, தண்டியல் சாவடி தெரு, திருநெல்வேலி டவுன்.
2872 எஸ். கிதாம்புஜா, 3ஏ, நாகலிங்கம் தெரு, அரிசிப்பாளையம், சேலம்—9.
2873 ஏ. சுந்தரராஜ், கொங்கல் நகரம் போஸ்ட்—638 205.
2874 எஸ். சந்திரசேகர், த/பெ. பி. வி. ஸ்ரீதரன், ஆசிரியர், மானியதஹள்ளி அஞ்சல்,
தர்மபுரி மாவட்டம்.
2875 எல். ஜெரால்ட் ஜோசப், சி—45, ஸ்பிக் நகர், தூத்துக்குடி.
2876 வி. கிருஷ்ணன், 390, தடாகம் ரோடு, கோவை—40.
2877 இரா. ஆறுமுகம், 3/238, எஸ். வி. புரம், எஸ். வி. மில்ஸ், உடுமலைப்பேட்டை.
2878 வலம்புரி நாகராஜன், 3, வாரணாசி வீதி, இடையன் காட்டுவலசு, ஈரோடு—638009.
2879 எஸ். முத்துக்குமார், பிளாட் எண் 3052, அண்ணா நகர், சென்னை—40.
2880 K. Bharat M. 8/46, Pragati Nagar, Ahmedabad-380 013.
2881 ச. கமலாராணி, 14—A, 4வது தெரு, கற்பகம் அவென்யூ, சென்னை—28.
2882 பி. விஷ்ணுராஜ், 159, பாரதி சாலை, பாண்டிச்சேரி—605 001.
2883 L. Jayaraman, S/o. Lakshmanan, Coconut, Union Potatoe Shop, Dacca Colony,
Bombay-400058.
2884 ஆர். பரதன், 9/45, லஜபதிராய் வீதி, சீனிவாசபுரம், கோவை—9.
2885 K. Annapoorani, 223 B, Railway Colony, Pakala, Chittor Dt. (Andhra Pradesh)
2886 ஜி. ஜெயமோகன், த/பெ. கோவிந்தசாமி, வனப்பாதுகாப்பாளர், சிங்காரப்
பேட்டை, ஊத்தங்கரை தாலுகா.
2887 எஸ். சுதர்சன் குமார், 157, மேலச் சித்திரை வீதி, ஸ்ரீரங்கம்.
2888 ஆர். ஸ்ரீகிருஷ்ணன், 60 D, பாரதியார் ரோடு, ஜெய்ஹிந்துபுரம், மதுரை—11.
2889 எஸ். ஸ்ரீராம், 60 A, திருவள்ளுவர் தெரு, ஸ்ரீரங்கம்.
2890 எஸ். உமா, 3.4.4. கிருஷ்ண ஐயர் தெரு, நிலக்கோட்டை—624 208.

(இன்னும் வரும்)



காட்டிலே பாட்டுப் போட்டி

டி. ஜானகி

1

பாட்டு ஆசிரியர் குயில் வகுப்பிற்குள் நுழைந்ததும், அந்தக் காட்டுப் பள்ளியில் உள்ள எல்லா (விலங்குகளும்) மாணவர்களும் எழுந்து நின்று கொண்டன.

''குட்மார்னிங் டீச்சர்.''

''குட்மார்னிங் சில்ரன். உங்களுக்கு இப்பொழுது நான் மகிழ்ச்சியான செய்தி சொல்லப் போகிறேன். வருகிற திங்கட்கிழமை, மதியம் மூன்று மணி அளவில், நம் பள்ளியில் உங்கள் அனைவரின் முன்னிலையிலும் பாட்டுப் போட்டி நடைபெறும். பாட்டுப் போட்டியில் முதல் பரிசு பெறும் மாணவனுக்கு வெள்ளிக் கோப்பை ஒன்று பரிசு தரப் போவதாக நம் மன்னர் சிங்கமகா ராஜா கூறியுள்ளார். எனவேபோட்டியில்சேர்ந்துகொள்ள விரும்புபவர்கள் தங்கள் பெயர்களை என்னிடம் நாளை மாலைக்குள் கொடுத்து விட வேண்டும். வீட்டில் நன்றாகப் பாடிப் பாடிப் பயிற்சி செய்து கொள்ளுங்கள்.''

எல்லாமாணவர்களின்முகத்திலும் மகிழ்ச்சி.

''நான்சேரப்போகிறேன்'' என்றது கரடி.

''நானும்தான்'' என்றது கழுதை.

''எனக்கு என்னவோ நம்ப முயல் குட்டி மகேஷ்தான் பரிசு வாங்கும்னு தோணுது'' — இது மயில்.

இதைக் கேட்ட நரியின் உள்ளம் பொறாமையினால் துடித்தது. அதுவும் நன்றாகப் பாடும். மயில் கூறியது போன்று, முயல் குட்டி மகேஷுக்குப் பரிசு கிடைத்து விட்டால்...? கூடாது... கூடாது... எப்படியாவது மகேஷை மட்டம் தட்டி நான்தான் வாங்க வேண்டும்' —சிந்தித்தபடியே நரிக்குட்டி வைத்தியர் ஒட்டகத்தின் வீட்டை நோக்கி விரைந்தது.

2

தன் முன்னே ரூபாய் நோட்டுக்களைப் பார்த்ததும் வைத்தியர் ஒட்டகத்தின் முகம் மலர்ந்தது. நரியைப் பார்த்து, ''தம்பி! உனக்கு என்ன வேண்டும்?'' என்று அன்போடு கேட்டது.

நரி தான் வந்த விஷயத்தைத் தெரிவித்தது. ''தம்பி! என்னிடம் ''டமடம—33'' என்ற மருந்து இருக்கிறது. நீரைப் போல் இதற்கு நிறமோ, மணமோ, சுவையோ கிடையாது. இந்த மருந்தைச் சாப்பாட்டிலோ, நீரிலோ,

காப்பியிலோ எதில் வேண்டுமானாலும் கலக்கிச் சாப்பிடலாம். சாப்பிடுகிறவர்களுக்கு எந்த ருசியும் தெரியாது. ஆனால், சாப்பிட்ட ஒரு மணி நேரத்திற்குள் தொண்டை கட்டிக் கொண்டு பாட இல்லை... இல்லை... பேசக் கூட முடியாது. இந்த மருந்தைத் தரட்டுமா?'' என்றது ஒட்டகம்.

இதைக் கேட்டதும் நரியின் உள்ளமெல்லாம் குளிர்ந்தது. மேடையில் மகேஷ் பாட முடியாமல் தவிப்பது போலவும், தானே முதல் பரிசு வாங்குவது போலவும் எண்ணிக் களித்தது.

''சீக்கிரம் கொடுங்கள்'' என்று மகிழ்ச்சியோடு கூறியது.

உள்ளே சென்ற ஒட்டகம் சீக்கிரமாக வெளியே வரவில்லை. சிறிது நேரம் கழித்துத்தான் வந்தது.

''தம்பி! என் மூக்குக் கண்ணாடியை எங்கோ மறந்தாப்பலே வச்சுட்டேன். அதனால், மருந்தைக் கண்டு பிடிக்க நேரமாயிடுச்சு. இந்தா!''

பொட்டலத்தைவாங்கிக்கொண்ட நரி, தன் வீட்டை நோக்கி நடக்கலாயிற்று. பாதித் தூரம் கூடச் சென்றிருக்காது. நல்ல மழை பொழிய ஆரம்பித்து விட்டது. மழையில் நனைந்து கொண்டே நரிக்குட்டி வீட்டை அடைந்தது.

3


திங்கள் கிழமை. மதியம்சாப்பாட்டு மணி அடித்து விட்டது. எல்லா மிருகங்களும் கைகழுவக் கிணற்றடியை நோக்கிச் சென்றன. பெஞ்சுக்கு அடியில் பதுங்கிக் கொண்டிருந்த நரி, மெதுவாக வெளியே வந்தது. மகேஷின் டிபன் பாக்ஸைத் திறந்தது. உள்ளே தயிர்ச் சாதம் இருந்தது. அந்தச் சாதத்தோடு தன் கையிலிருந்த மருந்தைக் கலக்கி, பழையபடியே, டிபன்பாக்ஸை வைத்துவிட்டது. மறுவிநாடி அதுவும் கிணற்றங்கரையை நோக்கிச் சென்றது. கையைக் கழுவிவிட்டு மெதுவாக வகுப்பிற்குள் நுழையும்போது, மகேஷ் தன் நண்பர்களுடன் பேசியபடியே டிபன் பாக்ஸைக் காலிசெய்துகொண்டிருந்தது. மகிழ்ச்சியோடு தன் டிபன் பாக்ஸை எடுக்க ஆரம்பித்தது நரி.

4

மணி மூன்று....

இதோ.... பாட்டுப் போட்டி நடைபெறப்போகிறது. மேடை போட்டாய் விட்டது. அலங்கரிக்கப்பட்ட மேடையில்நடுவர்களாக நான்கு ஆசிரியர்கள் உட்கார்ந்திருந்தனர். ஒவ்வொருவர் கையிலும் பேனாவும், வெள்ளைத் தாளும் இருந்தன.

''அக்சூ... அக்சூ...'' — பத்தாவது தடவையாக நரிக்குட்டி தும்மியது. மழையில் நனைந்த காரணத்தினால், மூக்கிலிருந்து குழாய் போல் நீர் கொட்டிக் கொண்டிருந்தது. அமிர்தாஞ்சனத்தை எடுத்து நெற்றி, மூக்கு,



தொண்டை எல்லாம் அப்பிக் கொண்டது. கைக்குட்டையால் மூக்கைத் துடைத்த வண்ணம் இருந்தது.

முதலில் சேவலின் பெயர் கூறப்பட்டது.

''சேவல் மேடையின் மீது ஏறி நின்றது.

''ஜன கன மன அதி நாயக ஜயஹே, பாரத பாக்ய விதாதா'' என்று பாட ஆரம்பித்ததோ இல்லையோ — மறு விநாடி அத்தனை மாணவர்களும் எழுந்து நின்று கொண்டனர்.

நடுவரில் ஒருவரான புலி, ''இப்பத்தான் போட்டியே ஆரம்பிக்கப் போகிறது. பாட்டை நிறுத்து'' என்று கத்தியது.

சேவல் பயந்தபடியே கீழே இறங்கியது.

அடுத்து கழுதை மேடையின் மீது ஏறியது.

''ஹாட் கிராஸ் பன் ஹாட் கிராஸ் பன். ஒன் எ பென்னி டூ எ பென்னி ஹாட் கிராஸ் பன்'' — என்று பாட ஆரம்பித்தது.

''பாட்டுப் போட்டிக்கு ரைம்ஸ் சொல்லக் கூடாது'' — புலி உறுமியது.

''அக்கூ... அக்கூ...'' — நரி மூக்கைத் துடைத்துக் கொண்டது.

அடுத்து குரங்கு மேடையின் மீது ஏறி, ஒரு சினிமாப் பாட்டைப் பாட ஆரம்பித்தது.

''ஸ்டாப் இட். இந்த மாதிரி சினிமாப் பாட்டுக்களெல்லாம் நீங்கள் பாடக் கூடாது'' — புலி கர்ஜித்தது.

பயந்தபடியே குரங்கு கீழே வந்து விட்டது.

அடுத்து எலி மேடையின் மீது ஏறியது.

''அக்கூ... அக்கூ...'' — நரி சட்டையினால் மூக்கைத் துடைத்துக் கொண்டது.

எலிக்கு ராகம் வந்தால் பாட்டின் வரிகள் மறந்து போய் விடுகிறது. வரிகள் வந்தால் ராகம் மறந்து போய்விடுகிறது. பயம் வேறு. கண்ணை மூடிக் கொண்டது.

''பொன்னாகி, மணியாகி...'' என்று கடகடவென்று செய்யுளை ஒப்புவித்து விட்டுக் கீழே இறங்கியது.

இன்னும் பல மிருகங்கள் பாடின.

''அக்கூ... அக்கூ...'' தும்மிக் கொண்டே நரி மேடையின் மீது ஏறியது.

''ஓடி விளையாடு பாப்பா... அக்கூ.. அக்கூ... நீ ஓய்ந்... அக்கூ... திருக்கலாகாது பாப்... அக்கூ... பா... பா... அக்கூ... கூடி... அக்கூ... விளை... அக்கூ...'' மேற்கொண்டு நரியினால் பாட முடியவில்லை. தொண்டையிலிருந்து இரட்டை ஒலிகள் வந்தன.

''முதலிலே, தும்மல்களை எல்லாம் போட்டுமுடித்துவிட்டுப்பாடு. இல்லாவிட்டால், பாடி விட்டுத் தும்மல்களைப் போடு'' — புலி உத்தரவிட்டது.

''அக்... கூ... அக்கூ..'' — நரி மூக்கைத் துடைத்தப்படி மேடையைவிட்டு இறங்கியது.

கடைசியாகமகேஷின்முறை. தனது இனிய குரலில், ''காக்கைச் சிறகினிலே நந்தலாலா'' என்று பாரதியாரின் பாட்டைப் பாடும் போது அந்த இடத்தில் அத்தனை அமைதி. அது பாடி முடித்ததோ இல்லையோ கைதட்டல்! காட்டையே அதிர வைத்தது. அந்த மகிழ்ச்சியான கைதட்டல் மகேஷுக்குத்தான் முதல் பரிசு என்று வெளிப்படையாகக் கூறியது.

புதிர்க்கதை-3 விடை

மறுநாள் மாலைதான் அரசரைப் பார்க்கப் போகிறோம்; வீட்டிற்குச் சென்று உடை மாற்ற நேரம் கிடைக்கும்' என்ற அமைச்சனின் சொல்லை நம்பினார்கள் பத்துப்பேரும். அதில் ஆட்டம் ஆடியவன் தவிர மற்றவர்கள் அங்கிருந்த தங்கக் காசுகளை யாருக்கும் தெரியாமல் தங்கள் ஆடைகளில் ஒளித்து வைத்தார்கள்.

விடிகாலையில், அமைச்சன் எல்லோரையும் ஆடும்படி சொன்னதும், 'எங்கே தங்கள் உடைகளில் ஒளித்து வைத்த காசுகள் ஓசை எழுப்பித் திருட்டைக் காட்டிக் கொடுத்துவிடுமோ என்று அஞ்சி அந்த ஒன்பது பேரும் ஆடாமல் தயங்கி நின்றார்கள்.

இதனால் ஆட்டம் ஆடியவனை நேர்மையானவன் என்று அரசன் கண்டு பிடித்தான்.

5

''அக்கூ...'' தும்மிக் கொண்டே கோபத்தோடும், ஆத்திரத்தோடும், வைத்தியர் ஒட்டகத்தின் வீட்டை நோக்கி ஓடியது நரிக்குட்டி.

மூச்சு இரைக்க ஓடி வந்த நரிக்குட்டி வைத்தியரைப் பார்த்து, ''பணத்தை வாங்கிக் கொண்டு இப்படி மோசம் செய்தது நியாயமா? என்னய்யா உம்ம மருந்தும், நீரும்... மகேஷ்... என்ன அருமையாகப் பாடினான்! அவனுக்குத் தொண்டையும் கட்டவில்லே... ஒரு மண்ணும் கட்டவில்லே... கொண்டாய்யா.. என் பணத்தை'' என்று கோபத்தோடு சத்தம் போட்டது. அதனுடைய தொண்டை கட்டிக் கொண்டிருந்ததால் அதற்குச் சரியாகப் பேசக் கூட முடியவில்லே.

''என் மருந்து எப்பவுமே மோசம் செய்யாதே! இதோ உன் கண் முன்னுடியே அந்த மருந்தைக் கொண்டு வந்து காண்பிக்கிறேன் பார்!''

சவால் விட்டபடியே உள்ளே சென்ற ஒட்டகம் சிறிது நேரத்தில் வெளியே வந்தது. இப்பொழுது அதன் கண்களில் மூக்குக் கண்ணுடி. கையில் ஒரே மாதிரியான இரண்டு அட்டை டப்பாக்கள்.

''தம்பி. அன்னிக்கு கரெண்ட் இல்லாததாலே எங்க வீடு பூரா ஒரே இருட்டு. போதாக்குறைக்கு மூக்குக் கண்ணுடி வேற இல்லே. அதனுலே இருட்டிலே ''டமடம—33'' மருந்துக்குப் பதிலா ''பமபம—88'' மருந்தை மாத்திக் கொடுத்திட்டேன். இந்த 'பமபம—88' மருந்தும் ருசியற்ற மருந்து தான். ஆனுல், இதுக்கு தொண்டையை வளமாக, இனிமையாக வைக்கும் ஆற்றல் உண்டு. நம்ப காட்டிலே எத்தனையோ வித்வான்கள் கச்சேரி செய்யப் போறதுக்கு முன்னுடி என்கிட்டே வந்து, ''பமபம—88'' வாங்கிச் சாப்பிட்டுவிட்டுப் போவாங்க. அதனுலே தான் மகேஷ் பரிசு வாங்கிட்டான். நீ அவன் வாங்கக் கூடாதுன்னு நினைச்சே. ஆண்டவன் அவன் வாங்கணும்னு நினைச்சாரு. இதனுலே தான் டப்பா மாறிப் போச்சு! நீ கொடுத்த காசு. செலவழிஞ்சு போச்சு. உன் தொண்டைக் கட்டு, ஜலதோஷம், இருமலுக்கு வேணுமானுல் மருந்து தாரேன் கவலைப்படாதே — அடுத்த வருஷம் உனக்கு இதே மருந்தைத் தருவேன். நீ முதல் பரிசு வாங்கலாம். இரு,உள்ளே போய் ஜலதோஷத்துக்கு மருந்து கொண்டு வரேன்'' — என்று கூறியபடியே ஒட்டகம் உள்ளே சென்றதும், மறுவிநாடி,


''லொக்... லொக்...'' என்று இருமியபடி தன் வீட்டை நோக்கி நடக்கலாயிற்று நரிக்குட்டி!

''இந்தச் சட்டை என்னைப் போலவே இருக்கு என்கிறயே, அவ்வளவு அழகாகவா இருக்கு?''

''இல்லே, லூஸா இருக்கு.''

—பூவை கே. சந்திரன்.





''ஏம்பா, போனவாரம் கண்ணு தெரியாதுன்னு சொல்லிப் பிச்சை எடுத்தாய். இப்போ தொண்டி தொண்டி வர்ரியே?''

''கண்ணு தெரியாதுன்னு சொன்னு, செல்லாத காசுகளைப் பிச்சை போடுறுங்க. அதனுலேதான்.''

—பூவை கே. சந்திரன்.



என் கதையைக் கேளுங்கள் - புலி

நான் சிறு பிள்ளையாக இருந்த போது ஒரு சம்பவம் நடந்தது. அப்போது எனக்கு ஒரு வயது. என் தம்பிக்கும் அதே வயதுதான். என் தங்கைக்கும் அதே வயதுதான். நாங்கள் மூவரும் ஒன்றாகப் பிறந்தவர்களே!

ஒரு நாள் மாலை நேரம். என் அப்பாவும் அம்மாவும் வேட்டையாடப் போயிருந்தார்கள். நாங்கள் மட்டுமே குகைக்குள் இருந்தோம். நான் என் தம்பியையும், தங்கையையும் பார்த்து, "எத்தனை நாளைக்குத்தான் இந்த இருட்டுக் குகைக்குள் அடைந்து கிடப்பது? இன்று நாம் வெளியிலே போய்ச் சுற்றிப் பார்த்துவிட்டு வருவோம். உம், புறப்படுங்கள், போகலாம்" என்றேன்.

உடனே என் தங்கை, "ஐயோ! ஆபத்து! அம்மா என்ன சொல்லி விட்டுப் போனாள்? 'நான் திரும்பி வரும் வரை குகைக்குள்ளே இருக்க வேண்டும். வெளியிலே போகக் கூடாது' என்று சொல்லவில்லையா? அம்மா சொல்லை மீறலாமா? வேண்டாம் அண்ணா. அம்மாதான் நம்மைச் சீக்கிரம் வெளியிலே அழைத்துப் போவதாகச் சொல்லியிருக்கிறாளே?" என்றாள்.

"நீ ஒரு கோழை. நீ வராத போனால் போ. நான் தம்பியை அழைத்துப் போகிறேன்" என்றேன்.

அவனும் வர மறுத்துவிட்டான் தங்கையின் கட்சியில் சேர்ந்துகொண்டான்.

"நீங்கள் வந்தாலும் சரி, வராத போனாலும் சரி; நான் போகிறேன்" என்று கூறிவிட்டுத் தைரியமாக நான் குகையை விட்டுக் கிளம்பினேன். என் தம்பியும் தங்கையும் தடுத்துப் பார்த்தார்கள். நான் கேட்கவில்லை; புறப்பட்டு விட்டேன்.

குகையை விட்டு வெளியில் வந்தேன். காட்டிலே நுழைந்தேன். சிறிது தூரம்தான் சென்றிருப்பேன். 'டுப்' என்று பலத்த சத்தம் ஒன்று கேட்டது. திடுக்கிட்டேன். அங்கிருந்த ஒரு புதர் மறைவில் ஒளிந்து கொண்டேன். உற்றுப் பார்த்தேன்.

அப்போது நாலுகால் பாய்ச்சலில் ஓர் உருவம் சிறிது தூரத்தில் போவதைக் கண்டேன். பார்த்ததுமே, அது என்ன என்பதைத் தெரிந்துகொண்டு விட்டேன். அதுதான் மான்! என் அப்பா இரண்டு மூன்று தடவைகள் மானைக் கொன்று குகைக்குள்ளே இழுத்து வந்திருக்கிறார். அது ஓடிச் சென்ற சிறிது நேரத்தில், மற்றோர் உருவம் அந்த வழியாகப் போனது. அது ஒரு விசித்திரமான பிராணியாக எனக்குத் தெரிந்தது.

"இது என்ன பிராணி! இதற்கு நான்கு கால்கள் இருக்கின்றன. ஆனாலும், இரண்டு கால்களாலே நடக்கிறதே! மற்ற இரண்டு கால்களில்,

ஒரு காலில் நீளமாக, கறுப்பாக ஏதோ வைத்திருக்கிறது. இன்னொரு காலை வீசி வீசிக் கொண்டே செல்கிறதே!'' என்று நினைத்தேன்.

அந்த விசித்திரப் பிராணியின் தலை மறையும் வரை ஒளிந்து பார்த்துக் கொண்டே நின்றேன். சிறிது நேரத்தில் திரும்பவும் 'படார்' என்று பலத்த ஒரு சத்தம் கேட்டது. அதைக் கேட்டதும் என்னை அறியாமலே ஒரு பயம் ஏற்பட்டது. உடம்பு நடுங்கியது. உடனே நான் ஒரு விநாடி கூட அங்கே நிற்கவில்லை. ஒரே ஓட்டமாகக் குகையை நோக்கி ஓடி வந்துவிட்டேன்.

பயத்தோடு நான் ஓடி வருவதைக் கண்டதும், ''என்ன! என்ன!'' என்று என் தம்பியும், தங்கையும் கேட்டார்கள். நடந்ததை நான் சொன்னேன். சொல்லி முடித்ததும், பின்னால் உறுமல் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். என் அப்பாவும் அம்மாவும் சிறிது தூரத்தில் நின்று கொண்டிருந்தார்கள். பூனைபோல் ஓசைப்படாமல் உள்ளே வந்து, நான் சொன்னதையெல்லாம் இவ்வளவு நேரமாக அவர்கள் கேட்டுக் கொண்டே இருந்திருக்கிறார்கள்!

நான் திரும்பிப் பார்த்ததும், ''நல்ல வேளை! தப்பித்தாய். நீ ஒரு விசித்திரப் பிராணியைப் பார்த்ததாகச் சொன்னாயே, அதுதான் மனிதன்! நமக்குப் பரம விரோதி. அவனுக்கு நம்மைப் போல் நான்கு கால்கள் கிடையாது. இரண்டு கால்கள், இரண்டு கைகள் உண்டு. கையிலே, நீளமாக, கறுப்பாக வைத்திருந்தது தான் துப்பாக்கி. அதனால்தான் காட்டு மிருகங்களையெல்லாம் 'டுப்,' 'டுப்' என்று அவன் சுட்டுக் கொல்கிறான். நல்ல காலமாக நீ அவன் கண்ணில் படாமல் தப்பித்தாய்'' என்றாள் என் அம்மா.



''இனிமேல் இப்படித் தனியாகப் போனாயோ அறைதான்!'' என்று பாதத்தைத் தூக்கிக் காட்டி எச்சரித்தார் என் அப்பா.

உங்களுடைய இனத்தை முதன் முதலாக நான் பார்த்தது அந்தச் சமயத்தில்தான்.

நானும் என் தம்பியும் தங்கையும் பிறந்து பத்து நாட்கள் வரை கண்ணைத் திறக்கவே இல்லை. எங்களுடைய கண்களை அம்மா தினமும் நாக்கால் நக்கி நக்கிக் கொடுப்பாள். பத்தாவது நாள் தான் எங்களைப் பெற்ற அம்மாவையும் அப்பாவையும் நாங்கள் சரியாகப் பார்த்தோம்.

அம்மா எங்களுக்கு அன்போடு பால் ஊட்டி வளர்த்தாள். நாங்கள் பாலைக் குடித்துவிட்டு ஒருவர் முதுகில் ஒருவர் ஏறி விளையாடுவோம். சில சமயம் எங்கள் விளையாட்டு வினையாகிவிடும்! அப்போது அம்மா, 'உர்... உர்...' என்று மிரட்டி எங்களை அடக்குவாள்.

நாங்கள் பிறந்து சில நாட்கள் வரை அம்மா எங்களுடனேயே குகையில் இருந்தாள். அப்பா மட்டும்தான் இரை தேடப் போவார். அவர் சில சமயம் மிருகங்களைக் கொன்று அப்படியே இழுத்துக் கொண்டு வருவார். சில சமயம் சாப்பிட்டு விட்டு மிச்சத்தைக் கொண்டு வருவார். சிறு வயதில் தாய்ப் பாலைத் தவிர எங்களுக்கு என் பெற்றோர்கள் எதுவுமே கொடுக்க மாட்டார்கள். நாள் ஆக ஆகக் கொஞ்சம் கொஞ்சமாக மாமிசத் துண்டுகளைக் கொடுத்து எங்களைப் பழக்கினாள் அம்மா.

எங்களுக்கு ஒரு வயதானது. அப்

போது அப்பாவும் அம்மாவும் எங்களைத் தினமும் காட்டுக்குள்ளே அழைத்துச் செல்வார்கள். எல்லோரும் அடர்ந்த புதர் மறைவில் மறைந்து நின்று கொள்வோம். சமயம் பார்த்து, அப்பாவும், அம்மாவும் அந்தப் பக்கமாக வரும் மிருகங்களின்மேல் பாய்ந்து, பிடரியைக் கடித்துக் குதறுவார்கள். அப்படித்தான் வேட்டையாட வேண்டும் என்று எங்களுக்கும் அம்மா சொல்லித் தருவாள்.

ஒரு நாள் சிறிது தூரத்தில் ஒரு மிருகம் போவதைப் பார்த்தோம். உடனே அம்மா, ''அதோ பார். அது பொல்லாத பிராணி. அருகிலே போனால், அதன் முதுகிலே உள்ள முட்கள் சட்டென்று நிமிர்ந்து நிற்கும். அதை நாம் தாக்கினால், நம் கால்களிலோ அல்லது தோளிலோ அந்த முட்கள் குத்திவிடும்! மிகவும் வலிக்கும்!'' என்றாள்.

''அதன் பெயர் என்னம்மா?'' என்று என் தங்கை கேட்டாள்.

''முள்ளம்பன்றி. இதைப் போலத்தான் காட்டுப் பன்றியும். முன்னால் இரண்டு தந்தம் இருக்கும். முரட்டுத்தனமாக எதிர்த்துத் தாக்கும். இந்த மாதிரி மிருகங்களிடத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்'' என்றார் அப்பா.

இன்னொன்றும் அவர் சொன்னார். ''நாம் காற்று வீசும் திசையிலே போனால் நாம் வருவதைச் சில மிருகங்கள் மோப்பத்தால் கண்டுபிடித்துத் தப்பித்துக்கொள்ளும். அதனால் எதிர்த் திசையில் போவதுதான் எப்போதும் நல்லது'' என்றார்.

வேட்டைக்காரர்கள் எங்களை உயிரோடு பிடிக்க ஒரு தந்திரம் செய்வார்களாம். ஆழமாக ஒரு குழியை வெட்டி, அதன்மேல் மூங்கிலால் மூடுவார்களாம். அதற்குமேல் இலை தழைகளைப் போட்டு மறைத்து, நடுவிலே ஓர் ஆட்டைக் கட்டி வைப்பார்களாம். ஆட்டைப் பார்த்ததும், எங்களில் சிலர் ஆசையோடு பாய்வார்களாம். மூங்கில்கள் 'சட, சட' என்று நொறுங்குமாம். உடனே, ஆட்டுடன் நாங்களும் அக்குழிக்குள் விழ வேண்டியதுதானாம்! வேட்டைக்காரர்கள் கயிறுகளைப் போட்டு வளைத்துக் கட்டி எங்களை மேலே தூக்குவார்களாம். அப்புறம்....? அப்புறம் என்ன? காட்டுக்குள் இருக்க வேண்டிய நாங்கள், கூட்டுக்குள் அடைபட்டு மிருகக்காட்சி சாலையில் இருப்போம். அல்லது, சர்க்கஸில் மனிதன் சொன்னபடி வித்தை செய்வோம்.

இதையெல்லாம் என் அம்மாவும் அப்பாவும் எங்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

இரண்டு வயதாகும் வரை நாங்கள் அவர்களுடன்தான் இருந்தோம். அப்புறம் நாங்கள் தனித்தனியாகப் பிரிந்து போய் விட்டோம். எத்தனை நாட்களுக்குத்தான் அப்பா, அம்மாவுக்குப் பாரமாக இருப்பது?

பிறகு, நான் ஒரு குகையைக் கண்டுபிடித்து அதிலே தனியாக வசிக்கத் தொடங்கினேன். பகல் நேரத்தில் குகையிலே அல்லது புதர் மறைவிலே படுத்து உறங்குவேன். இரவு நேரத்தில் வேட்டைக்குப் புறப்பட்டு விடுவேன்.

சில சமயம் நான் ஆற்றில் குளிப்பதுண்டு. குளித்தவுடன் கரைக்கு வந்து, அங்கே படுத்துப் புரளுவேன். அதிலே எனக்கு ஒரு தனி ஆனந்தம். ஆற்றைக் கடந்து அக்கரை போகவும் எனக்குத் தெரியும். அடிக்கடி நான் அப்படிப் போவதுண்டு.





''எல்லாம் தெரிந்து வைத்திருக்கிருயே, உனக்கு மரம் ஏறத் தெரியுமா?'' என்று கேட்கிறீர்களா? அதுவும் எனக்குத் தெரியும். ஆனுல், மிகவும் அவசியமான போதுதான் ஏறுவேன். இருந்தாலும் சிறுத்தைப் புலியைப் போல அவ்வளவு நன்ருக மரம் ஏறத் தெரியாது.

முன்பெல்லாம் மனிதர்களைப் பார்த்தால், நான் தாஞக ஒதுங்கிப் போய் விடுவேன். ஆனுல் இப்போது மனிதர்களைக் கண்டால் விட மாட்டேன். இதற்குக்காரணம்என்ன,தெரியுமா?

ஒரு முறை ஒரு மனிதனைக் காட்டின் மத்தியில் கண்டேன். அவன் கையிலே கனத்த தடி இருந்தது. முயல் வேட்டைக்கு வந்திருப்பான் போலிருக்கிறது. அவனைப் பார்த்ததும், நான் என்னைத்தான் அவன் தாக்க வருகிருன் என்று நினைத்து, 'உர்! உர்!' என்றேன். உடனே அவன் தப்பித்துக் கொள்ளத் தடியை ஓங்கினுன். மறு விநாடி நான் அவன் மேல் பாய்ந்தேன். அப்போது அவனுடைய இரத்தத்தை ருசி பார்த்துவிட்டேன்! 'ஆஹா, என்ன ருசி! என்ன ருசி! அது மாதிரி ருசியான இரத்தத்தை நான் குடித்ததே இல்லை. அதுமுதல் மனிதனை நான் எங்கே கண்டாலும் விடுவதில்லை.

ஒரு சமயம், ஒரு மனிதன் மரத்திலே ஒளிந்து கொண்டிருப்பதைப் பார்த்து விட்டேன், உடனே வேகமாக அவனை நோக்கித் தாவினேன். 20 அடி உயரம் என்றால் தாவ முடியும். உயரத் தாவி ஒரு கிளையிலே தொத்திக் கொண்டேன். அப்புறம் என்ன? அவன் கதி அதோ கதிதான்!

சிங்கத்தை 'மிருகராஜன்,' 'மிருகராஜன்' என்று அழைக்கிறீர்கள். ஆனால், சிங்கத்தை விட எனக்குப் பலம் அதிகம் என்பது உங்களுக்குத் தெரியுமா? தெரிந்தால் நல்லது. தெரியாத போனால், இப்போதாவது தெரிந்து கொள்ளுங்கள்.


எங்கள் இனத்தை ஆசியாக் கண்டம் ஒன்றில்தான் பார்க்க முடியும். அதிலும், இந்தியா, பர்மா, ஜாவா, சுமத்திரா முதலிய நாடுகளில்தான் காணலாம். இலங்கையில் கூடக் காண முடியாது.

எங்களிலே சிலர் கிழடாகியிருப்பார்கள். சிலருக்கு உடம்பிலே காயம் பட்டிருக்கும். அப்போது அவர்களால் ஓடி ஆடி இரை தேட முடியாது. அதனால் அவர்கள் ஊருக்குள்ளே புகுந்து, ஆடு மாடுகளையும், மனிதர்கள் அகப்பட்டால் அவர்களையும் கொன்று தின்பதுண்டு. காட்டிலே சரியான இரை கிடைக்காத போனாலும் இப்படித்தான் செய்வோம். வேறு வழி?

நான் இன்னும் கிழடாகவில்லை. கிழடாகி விட்டால், உடம்பில் வலு இருக்காது. இரை தேடுவது கஷ்டந்தான். அதற்காக நான் பட்டினி கிடந்து சாக மாட்டேன். அருகிலுள்ள கிராமத்துக்கு இரவு நேரத்திலே செல்வேன். ஆடுமாடுகளை அடித்துச் சாப்பிடுவேன். அப்போது மனிதர்கள் அகப்பட்டால், ஆஹா, கொண்டாட்டம் தான்! மனிதர்களிடம் நான் அகப்பட்டுக் கொண்டாலோ...?

ஐயோ, திண்டாட்டம்தான்!





சிகரெட்டைத் தின்றவர்!

போலந்து நாட்டைச் சேர்ந்த ஒரு பிரபு நண்பர்களுடன் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அவர் சொன்னார்:

"நான் ஒரு சமயம் ஒரு ரஷ்ய அதிகாரியை விருந்துக்கு அழைத்திருந்தேன். மேஜைமேல் பல விதமான உணவுப் பண்டங்கள் இருந்தன. அவற்றுடன் ஒரு தட்டிலே ஏழெட்டு சிகரெட்டுகளும் இருந்தன. ரஷ்ய அதிகாரி; சிகரெட்டை அதற்கு முன்பு பார்த்ததில்லை என்று நினைக்கிறேன். ஆகையால், அவர் அந்த சிகரெட்டுகளையும் ஏதோ ஓர் உணவு என்று நினைத்து, அருகிலிருந்த உப்பிலே கொஞ்சம், மிளகுப் பொடியிலே கொஞ்சம் அவற்றின் மேல் தூவி, மிகவும் ரசித்துச் சாப்பிட்டார்."

இப்படி அந்தப் பிரபு சொன்னது ஒரு ரஷ்ய அதிகாரி காதுக்கு எட்டியது. உடனே அவர் அந்தப் பிரபுவின் வீட்டுக்கு வந்து, "நான் முன்பு ஒருநாள் உமது வீட்டில் விருந்து சாப்பிட்டது உண்மைதான். ஆனால், அப்போது நான்



சிகரெட்டைத் தின்றேனா? நீர் கூறியது பொய்தானே?" என்று கோபமாகக் கேட்டார்.

அப்போது பிரபுவுடன் சில நண்பர்கள் இருந்தார்கள்.

"அடடே, நான் உம்மைப் பற்றிச் சொல்வேனா? நான் யார் பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லையே! பெயரைக் குறிப்பிடாத போது, நீர் ஏன் கோபப்பட வேண்டும்? உதாரணத்துக்கு ஒன்று சொல்கிறேன். நாம் இருவரும் ஓரிடத்தில் உட்கார்ந்திருக்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். அப்போது ஒருவர் நம் அருகில் வந்து, "உங்கள் இருவரில் ஒருவர் கழுதை" என்று கூறிவிட்டுப் போனால், உடனே நான் என்னைத்தான் அவர் கழுதை என்று கூறியதாக நினைத்து அவருடன் சண்டைக்குப் போக மாட்டேன்," என்றார் பிரபு.

'என்னைத்தான் அவர் கழுதை என்று கூறியதாக நினைத்து அவருடன் சண்டைக்குப் போக மாட்டேன்' என்று கூறியதோடு பிரபு நிறுத்திக் கொண்டுவிட்டார். அப்படியானால், கூட இருந்தவர்தான் கழுதையா?

இந்த நகைச்சுவையைப் புரிந்து கொண்டு நண்பர்கள் 'ஓஹோஹோ' என்று சிரித்தனர். ஆனால், ரஷ்ய அதிகாரிக்கு அது புரியவில்லை. "சிகரெட்டைத் தின்றவன் நான் இல்லையல்லவா! சரி, வருகிறேன், நன்றி" என்று கூறிப் பிரபுவுடன் கைகுலுக்கிவிட்டுப் புறப்பட்டுச் சென்றார்.

உருவகக் கதைகள்

மலையமான்


காட்டிலே தேர்தல்!

'முல்லையடவி' என்பது ஒரு சிறிய காடு. அந்தக் காட்டில் எத்தனையோ விலங்குகள் வாழ்ந்து வந்தன. அவை மிகவும் ஒற்றுமையுடன் அமைதியாக வாழ்ந்து வந்தன.

ஒருநாள் அடுத்த காட்டிலிருந்து ஒரு நரி அங்கு வந்து சேர்ந்தது. ''நாமும் மனிதர்களைப் போல் நாகரிகமாக இருக்க வேண்டும்'' என்று எடுத்துரைத்தது. மற்ற விலங்குகள், அதைப் பற்றிச் சிந்தனை செய்தன; தங்களுக்குள் கலந்துரையாடின. பிறகு, "நரி கூறியது முற்றிலும் சரியே!'' என்ற முடிவுக்கு வந்தன.

''நாகரிகமாக இருப்பதற்கு என்ன வழி?'' என்று சில விலங்குகள் நரியிடம் கேட்டன. அதற்கு ''தேர்தல் நடத்த வேண்டும். அதில் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்த உறுப்பினர்கள் கூடிச் சட்டங்களை இயற்ற வேண்டும். பிறகு, அந்தச் சட்டங்களின்படி காட்டை ஆள வேண்டும். அதுதான் நாகரிகமாக இருப்பதற்கு ஏற்ற வழி'' என்றது நரி.

''அதுதான் சரி'' என்றன மற்ற மிருகங்கள். நரியையே தேர்தல் அதிகாரியாக இருக்கும்படி வேண்டிக் கொண்டன. அதற்கு இணங்கிய நரி, ''இப்போது நீங்கள் உங்களுக்குள் கட்சிகள் அமைக்க வேண்டும். ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு தேர்தல் சின்னம் ஒதுக்குவேன்'' என்றது.



தேர்தல் நாளும் குறிக்கப்பட்டது எனவே, தேர்தல் சொற்பொழிவுகள் ஆங்காங்கே நடைபெற்றன. எல்லாக் கட்சிக்காரர்களும், "இந்தக் காட்டின் நலனுக்காகவே, இறுதிமூச்சு இருக்கும் வரை நாங்கள் உறுதியாகப் போராடுவோம்'' என்று முழக்கமிட்டன. இலைச் சின்னம் பெற்ற கட்சியார் ஊர்வலம் நடத்தினர். அவர்கள் ஆளுக்கொரு இலையைப் பறித்துக் கையில் வைத்துக் கொண்டு ஊர்வலம் வந்தனர். இதைக் கண்டதும், இரட்டை அரும்புச் சின்னத்தார் எல்லா அரும்புகளையும் பறித்து, அவற்றில் இருந்த அரும்புகளைக் கையில் ஏந்திக் கொண்டு, மீதியிருந்தவற்றைக் குப்பையில் எறிந்தனர். பழச் சின்னக் கட்சியார், பழங்களைக் கையில் எடுத்துக் கொண்டு வந்தனர். பசி நேரத்தில் அவற்றைச் சாப்பிட்டுவிட்டு, மறுபடியும் பழம் பறித்துக் கையில் தாங்கி வந்தனர். பழங்கள் தீர்ந்து போன பிறகு, அதற்குப் பதிலாகக் காயைப் பயன்படுத்திக் கொண்டனர்.

இப்படித் தேர்தல் முடிவதற்குள், அக்காட்டிலிருந்த மரம் செடி கொடிகளிலிருந்த இலை, அரும்பு, காய், கனிகள் யாவும் அழிந்துவிடவே, வளமாயிருந்த காடு நிழலற்ற பாலைவனமாகிவிட்டது.

பெரிதும் துன்பமுற்ற அந்த உயிரினங்கள் அப்போதுதான், தங்களின் ஒற்றுமையைக் கெடுத்து, காட்டையும் அழிக்க வந்த நரியின் சூழ்ச்சியைப் புரிந்து கொண்டன. உடனே அவை அந்த நரியைத் தேடின. ஆனால் அந்த நரி அப்போது வேறொரு காட்டில், தேர்தலின் சிறப்பை விளக்கும் மாநாட்டில் தலைமை தாங்கிக் கொண்டிருந்தது!



சேவலும் சிங்கமும்

ஒருநாள், நன்றாகக் கொழுத்து வளர்ந்திருந்த ஒரு சேவல் வழி தவறிக் காட்டுக்குள் போய் விட்டது. முதலில் அதற்கு அச்சமாகவே இருந்தது. சிறிது நேரத்தில் அது தன்னைத்தானே தேற்றிக் கொண்டது. அச்சமின்றிப் பெருமிதத்துடன் நடக்க வேண்டுமெனத் திட்டமிட்டுக் கொண்டது.

அது இரை தேடிப் புறப்பட்ட போது, எதிரே, சிங்கம் வருவதைக் கண்டது. உடனே தன்னையும் அறியாமல் அஞ்சி நடுங்கியது. ஆயினும், சிங்கத்தைக் கவனிக்காமல், எதையோ பார்த்துக் கொண்டிருந்தது.

அந்தச் சிங்கம் இதற்குமுன் சேவலையே பார்த்ததில்லை. ஆகவே, அது வியப்புடன் சேவலை நோக்கியது. இதைத் தெரிந்து கொண்ட சேவல், தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, ''நீதான் சிங்கமா? நீ இந்தக் காட்டிற்கு மன்னனா?'' என்று கேட்டது.

''ஆம் ஐயா! நீங்கள் யார் என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா?''

''உனக்கு என்னைப் பற்றித் தெரியாதா? நீ காட்டின் வேந்தன். நான் நாட்டின் மாமன்னன்.''

''அப்படியா! எனக்கு இதுவரை இச்செய்தி தெரியாதே!''

''நீயும் நானும் மன்னர் பரம்பரை என்பதால்தான் எனக்கும் உனக்கும் எடுப்பான தோற்றமும், கம்பீர நடையும், ஆண்மையும், அழகும் அமைந்துள்ளன. மேலும், தலைமைச் சின்னமாகப் பிடரியும் நம் இருவருக்குமே இருக்கிறது. ஆனால், ஒன்றை இங்கே கவனிக்கவேண்டும். நான் உன்னைவிட உயர்ந்தவன். எனவேதான், இயற்கையாகவே என் தலையில் செந்நிறமான முடி செம்மையாக அமைந்துள்ளது. கொண்டை என்று அழைக்கப்படும் அந்த முடி உன்னிடம் இல்லையல்லவா! இந்த ஒன்றைக் கொண்டே; நீ என் பெருமையை உணர்ந்து கொள்ளலாம். ஆகவே, இனி நீ எனக்கு வணக்கம் செலுத்த வேண்டியதே முறை'' என்று சிறு சொற்பொழிவே செய்துவிட்டது.

இதைக் கேட்ட சிங்கம், அவ்வாறே சேவலை வணங்கிக் கொண்டு சென்றது. அடுத்த நாளும், சிங்கம் சேவலுக்கு வணக்கம் செய்தது. இதை தூரத்திலிருந்த ஒரு நரி கண்டது. அது சிங்கத்திடம் அதற்குரிய காரணத்தைக் கேட்டது. சிங்கம் ஏமாற்றப்பட்டிருப்பதை அறிந்ததும், ''அரசே, நீங்கள் நன்றாக ஏமாந்தீர்கள். அது நாட்டின் மன்னன் என்று கூறி உங்களை ஏமாற்றியிருக்கிறது. அது குப்பை மேட்டைக் கிளறி, புழு பூச்சிகளைப் பிடித்துத் தின்னும் அற்பமான ஒரு பறவை. அந்தச் சேவலுக்குச் சிங்கராஜா பயப்படலாமா?'' என்றது.

நரியின் பேச்சைக் கேட்ட் சிங்கம் உண்மையை உணர்ந்தது. உடனே, ''இப்போதே அதை என்ன செய்கிறேன், பார்'' என்று கூறிவிட்டுச் சீறிக் கொண்டு சேவலை நோக்கிச் சென்றது. நிலைமையை உணர்ந்த சேவல் பறந்து சென்று அருகில் இருந்த மரக்கிளையில் அமர்ந்து கொண்டு, சிங்கத்திடம் மன்னிப்புக் கேட்டது.

யார் உயர்ந்தவர்?

ஒரு மாடி வீடு தலைநிமிர்ந்து எடுப்பாக நின்று கொண்டிருந்தது. அதன் பின்புறத்தில் ஓர் அழகிய தோட்டம் இருந்தது. அதில் சில பழ மரங்களும் பல பூச்செடிகளும் இருந்தன.

அப்போது, பணியாளர் இருவர் வீட்டிலிருந்த ஒரு தொட்டியைக் கொண்டு வந்து முல்லைக் கொடியின் அருகில் வைத்துவிட்டுப் போனார்கள்.

தொட்டியிலிருந்த 'குரோட்டன்ஸ்' செடி, சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுத் தனக்குள் நகைத்துக் கொண்டது. அதைக் கண்ட முல்லைக்கொடி, ''ஏன் சிரிக்கிறாய்?'' என்று தொட்டிச் செடியிடம் கேட்டது.

"நான் உங்கள் நிலைமையைக் கண்டே சிரிக்கிறேன்."

"எங்கள் நிலைமையைக் கண்டு சிரிக்கும்படியாக என்ன இருக்கிறது?" என்று கொஞ்சம் சூடாகவே முல்லை கேட்டது.

"பாவம்! நீங்களெல்லாம் பிற்பட்ட நிலைமையில், வீட்டின் பின்னால் மதிப்பற்றுக் கிடக்கிறீர்கள். ஆனால் நானோ வீட்டின் மாடியில் உயர்நிலையில் வாழ்கிறேன். ஆகவே, உங்களைப் பார்க்கும் போது என்னையும் அறியாமல் எனக்குச் சிரிப்பு வருகிறது."

"அப்படியா! சரி, நீ ஏன் பிற்பட்ட நிலையிலுள்ள எம்மிடம் வந்தாய்?"

"உங்களைக் காணவும் நீங்கள் திருந்துவதற்கு அறிவுரை கூறவும்தான் இங்கு வந்திருக்கிறேன்."

"உங்கள் அறிவுரை யாதோ? நாங்கள் அதைக் கேட்கலாமோ?"

"நீங்கள் என்னைப் போல நிலைமைக்கு ஏற்றபடி வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். இப்படித்தான் வாழ்வேன் என்று நினைக்காமல் எப்படியும் வாழ முயற்சி செய்ய வேண்டும். அப்படி இருந்தால்தான், நீங்களும், என்னைப் போல உயர்வடைய முடியும்."



"தொட்டிக்குள் சிறைப்பட்டு, அடிமையாகி, பிறருக்குப் பயன்படாமல், மலடியாக இருக்கும் நீ எங்களுக்கு வழங்கும் அறிவுரை வேடிக்கையாகவே இருக்கிறது."

"இதில் என்ன வேடிக்கை இருக்கிறது! நீங்களும் என்னைப் போல உயர்வடைய வேண்டும் என்னும் நல்ல நோக்கத்துடனே நான் உங்களுக்கு நல்வழி கூறினேன், மற்றபடி வேறொன்றுமில்லை" என்று தொட்டிச் செடி சொன்னதும், முல்லைக்கொடி, "நீ உயர்ந்த மாடியில்தான் இருக்கிறாய். ஆனால், எங்களின் பூக்களோ இந்த வீட்டுப் பெண்களின் தலை மேலே ஏறி நிற்கின்றன. நம்மில் உயர்ந்தவர் யார்?" என்று கேட்டது. தொட்டிச் செடி தன் வாயை மூடிக் கொண்டது.



கஞ்சர்கள்!

ஒரு ஊரில் அண்ணன், தம்பி இருவர் இருந்தனர். படுபடு கஞ்சர்கள். ஒருநாள் தம்பியை வீட்டுக்குக் காவல் வைத்துவிட்டு அவசர வேலையாக ஆறுமைல் தொலைவிலுள்ள ஊருக்குப் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தான் அண்ணன். அவன் புறப்பட்ட வேளை மாலை 7 மணி. முக்கால் வாசி தூரம் போன பின், "அடடா, சிம்னி விளக்கை ஏற்றி வைத்துவிட்டு வந்தேனே, தம்பி அணைத்தானோ இல்லையோ? தண்டத்துக்கு எரிந்து கொண்டிருக்குமே, எண்ணெய் தீர்ந்து போயிடுமே" என்று நினைத்தவன் அதை அணைப்பதற்காக வீட்டுக்குத் திரும்பி வந்தான்.

கதவு மூடியிருந்தது. ஒரே இருட்டாக இருந்தது. "தம்பி உள்ளே இருக்கிறாயா? என்ன பண்றே? விளக்கை அணைத்து விட்டாயா? என்று பார்க்கத்தான் வந்தேன்" என்று அண்ணன் சொன்னான்.

"அப்போதே அணைத்துவிட்டு இருட்டில்தான் சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். ஆமாம், அதைக் கேட்கவா இவ்வளவு தூரம் திரும்பி வருவது? செருப்பு என்னத்துக்கு ஆகும்? தேய்ந்து போய் இருக்குமே!" என்று தம்பி கேட்டான்.

"அட மக்குத்தம்பி, நான் செருப்பைத் தேய விடுவேனா? தலையில் வைத்து எடுத்துக் கொண்டு வந்துவிட்டேன்" என்றான். எப்படிப்பட்ட கஞ்சர்கள்!

— ரா. மது (1121), கோவை—2.



மந்திரக் கோல்

மஞ்சுளா

ரதனபுரி என்ற ஊரில் முருகன என்று ஒரு சிறுவன் வாழ்ந்து வந்தான். அவன் நல்ல பழக்க வழக்கங்களைக் கைக் கொண்டு எல்லோரும் அவனை பாராட்டும் வண்ணம் நடந்து கொள்வான். ஏழையான முருகன் சிறு வயதிலேயே புத்திசாலித்தனம், இரக்க குணம், பிறரிடத்தில் அன்பு செலுத்துதல், பொய் பேசாமை போன்ற நல்ல குணங்களைப் பெற்றிருந்தான்.

முருகன் ஒருநாள் தன் தாய்க்கு உதவியாகக் காட்டிற்கு விறகு பொறுக்கச் சென்றான். மாலையானவுடன் தாய் முன்னே செல்ல, முருகன் மெல்ல விறகுச் சுமையுடன் வந்துகொண்டிருக்கும்போது ஒரு வயதான கிழவி உடல் முழுவதும் காயம்பட்டு மிகவும் களைத்துக் காணப்பட்டாள். முருகன் அக்கிழவியின் நிலை கண்டு மனம் வருந்தி தன் தாயின் உதவியுடன் அக்கிழவியை வீட்டிற்கு அழைத்துச் சென்று அக்கிழவியின் காயத்திற்கு மருந்திட்டான். வேண்டிய உணவு கொடுத்து கிழவியை ஆசுவாசப்படுத்தினான்.

கிழவி சிறிது நாள் முருகன் வீட்டில் தங்கி இருந்தாள். தன்னைக் காப்பாற்றிய முருகனை வாயாரப் புகழ்ந்தாள். சிறிது நாள் கழித்து கிழவி தன் பயணத்தைத் தொடர விரும்பினாள். அவள் முருகனை அழைத்து, ''உன் உதவிக்கு நான் எவ்வாறு நன்றி சொல்வேன். ஏழையாயினும் உன் உதவி தக்க தருணத்தில் எனக்குக் கிடைத்தது. உன் உதவிக்குப் பரிசாக நான் ஒன்று தர விரும்புகிறேன். மறுக்காமல் பெற்றுக் கொள்'' என்று கூறி தன் கைப் பையிலிருந்து ஒரு சிறிய குச்சியை எடுத்து முருகனிடம் தந்தாள்.

பின் முருகனைப் பார்த்து, ''முருகா, இக்கோல் சாதாரணக் கோல் அல்ல; மந்திரக் கோல்! இதன் மூலம் காணாமற் போன எந்தப் பொருளையும் அடையலாம். இக்கோலைக் கொண்டு காணாமற்போன பொருளின் படத்தை வரைந்தால் அது உடனே அவ்விடத்தை வந்தடையும்'' என்று கூறிச் சென்றாள்.

முருகன் அக்கோலைக்கண்டுதிகைத்தான். பின் மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டான். காணாமற் போன பொருட்களினால் பலர் துன்பப் படுவதைக் கண்டு, அத் துன்பங்களைத் தீர்த்தான். மக்கள் முருகனைப் புகழ்ந்தனர். எல்லோர்க்கும் அக்கோல்பயன் படும்படி வாழ்ந்து வந்தான்.

அவ்வூர் அரசனின் 10 வயதுப் பெண் குழந்தை காணாமற் போய்விட்டாள். ஐந்து ஆண்டுகளாகியும் யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை! அரசன் தன் பெண்மேல் மிகவும் பாசம் வைத்திருந்தான். அவள் காணாமல் சென்றதிலிருந்து மன்னன் நோய் வாய்ப்பட்டான். அரசியும் உடல்நலம் குன்றினாள். எங்கு தேடியும் தன் பெண் காணாமல் தவித்தாள். அவளை நகைக்காக ஒரு திருடன் எடுத்துச் சென்று மறைத்து வைத்திருந்தான். அரசன் இதை அறியவில்லை.


தன் பெண்ணைத் தேடிக் கொடுப்பவருக்கு, தன் நாட்டில் சரி பாதி கொடுப்பதாக மன்னன் அறிவித்தான். பலர் அரசனின் நாட்டில்பாதி கிடைக்கும் என்ற ஆசையில் தேட முயன்று தோற்றுப் போயினர். இதனால், அரசனின் கோபத்திற்கும், தண்டனைக்கும் ஆளானார்கள்.


முருகன் இதை அறிந்தான். அவன் பொன், பொருளுக்கு ஆசைப்பட வில்லை. மன்னனின் துயர் தீர்க்க வேண்டும் என்பதே அவன் எண்ணம். ஒரு நாள் முருகன் மன்னனைக் கண்டு தன் மந்திரக் கோலின் உதவியால் மன்னனின் மகளை மீட்டுத் தரலாம் என்று கூறினான். மன்னனும் இசைந்தான். மன்னன் தன் பெண்ணின் ஓவியம் ஒன்றை முருகனுக்குக் காட்டினான். முருகன் அதுபோலவே தன் மந்திரக் கோலினால் வரைந்தான்.


ஆனால், அங்கு மன்னனின் பெண் தோன்றவில்லை. முருகன் பல முறை வரைந்தும் தோல்வியே ஏற்பட்டது. மன்னன் கோபப்பட்டான். முருகனுக்குத் தண்டனை தர எண்ணினான். முருகன் மன்னனின் கோபம் கண்டு அஞ்சினான். ஒரு நிமிடம் யோசித்தான். அப்போதுதான் ஓர் உண்மை அவனுக்குப் புலப்பட்டது. மன்னனின் மகள் 10 வயதில் காணாமல் போனாள். 10 வயதில் காணாமல் போன மன்னனின் மகள், இந்த 5 வருடத்தில் வளர்ந்து இளவரசிப் பருவத்தை அடைந்திருப்பாளே! அவளுடைய இப்போதைய படத்தை வரையாமல், குழந்தைப் பருவத்துப் படத்தை வரைந்ததனால்தான் அவள் வரவில்லை என்பதை முருகன் உணர்ந்தான்.

15 வருடத்துப் பெண் எப்படி இருப்பாளோ அதைக் கற்பனை செய்து முருகன் வரைந்தான். என்ன மாயம்! மன்னனின் மகள் அழகோவியமாய் அங்கு வந்து நின்றாள். மன்னனும் அவன் அரசியும் தன் மகளைக் கண்டு அளவிலா மகிழ்ச்சி அடைந்தனர். தன் கவலையைத் தீர்த்த முருகனுக்கு அரசன் தன் மகளை மணமுடித்துக் கொடுத்து அந்நாட்டின் இளவரசனாக்கினான். முருகனும் நெடுங்காலம் இளவரசனாய் நல்லாட்சி புரிந்தான்.

ஓவியமாகலாம்







எங்கள் வீட்டு நாய்

'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்ற பழமொழி மனித இனத்திற்காகச் சொல்லப்பட்டதென்றாலும், அதைக் கடைப்பிடிப்பது, நாய் மட்டும் தான். அதனால்தான் நாயை 'மனிதனின் உற்ற நண்பன்' என்று முன்னோர்கள் சொன்னார்கள்.

எங்கள் வீட்டில் எல்லோரும் பாசத்தோடு வளர்ப்பது 'பெப்பர்' என்ற நாயை. அவனுக்கு வயது ஒன்றுதான் என்றாலும் மிகவும் புத்திசாலி. அவனை நாய் என்ற உணர்வோடு யாரும் பார்ப்பதில்லை. அவன் 'ராஜபாளையம்' இனத்தைச் சேர்ந்தவன்.

நாங்கள் எல்லோரும் பேசிக் கொண்டிருந்தால் அவன் நடுவில் இருக்க வேண்டும். மறந்துவிட்டால் ஒரே ரகளைதான். எங்களில் ஒருவர் குறைந்தால் எல்லா இடங்களிலும் தேடி, மாடி வரை போய்விடுவான்.

சில நாட்களுக்கு முன்பு...

இரவு இரண்டு மணி இருக்கும். திடீரென்று 'பெப்பர்' குரைக்க ஆரம்பித்தான். கீழே சென்று பார்த்தால், ஒரு பாம்பு படமெடுத்துக் கொண்டிருந்தது. அதை நகரவிடாமல் எங்களுக்குக் குரல் கொடுத்திருக்கிறான். எங்களைப் பார்த்ததும் பக்கத்தில் வந்தான். அவனை வீட்டிற்குள் விட்டுவிட்டுப் பாம்பை விரட்டினோம்.

இன்னொரு சமயம், அப்பா அவனைப் பிடித்துக் கொண்டு யாருடனோ பேசிக் கொண்டிருந்த போது அவன் எதையோ உற்றுப் பார்த்துக் குரைத்தான். என்னவென்று பார்த்தால், அப்பாவின் அருகில் ஒரு விஷமுள்ள 'நட்டுவாக்கிளி' இருந்தது! சீக்கிரம் அதை அப்புறப்படுத்தினோம்.

ராத்திரி அவனை மீறி யாரும் வீட்டுக்குள் நுழைய முடியாது. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதமாய்க் குரல் கொடுப்பான். அது எங்களுக்குத்தான் புரியும். சமீபத்தில் அவனது பிறந்த தினத்தை விமரிசையாகக் கொண்டாடினோம்.

அவன் பல காலம் எங்களுள் ஒருவனாக இருக்க வேண்டுமென்று ஆண்டவனிடம் வேண்டுகிறேன்.

—மீரா இராமச்சந்திரன். (158).

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431543)

Editor: K. Rajendran



ராஜாசர் அண்ணாமலை செட்டியார்

பிறந்த நாள்: 30-9-1881. மறைந்த நாள்: 15-6-1948

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka

